Annual Subscription Rs. 6 27th June 1937. Price 2 As

# சுதேசமித்திரன்

Vol. 8 வாரப்பதிப்பு No 21

# THE SWADESAMITRAN ILLUSTRATED WEEKLY



திருக்கழுக்குன்றம்.

எல்லாவற்றிற்கும் பின்னால் தோன்றியது
சகல வலி நிவாரணி
எல்லாவற்றிற்கும் முன்னால் நிற்பது







அடைவதற்கு இயற்கையான

விருப்பம்

வுட்வர்ட்ஸ்

கிரைப்வாடர்

குழந்தைக்கு

ஆரோக்கியத்தைத் தரும்

# WOODWARD'S
## GRIPE WATER

W. WOODWARD LTD., LONDON. ENGLAND



குற்றாலம் நீர்வீழ்ச்சி - ஒரு புதிய தோற்றம்.



# அடால்ப் ஹிட்லர்

## ஜெர்மன் சர்வாதிகாரி

"கௌடில்யா"

நான்கு வருட கோர யுத்தம். செழித்துக் கொழுத்திருந்த நாடு, வறுமை, பிணிவாய்ப்பட்டது. மக்களிடை அதிருப்தி, மன்னர் தப்பியோடினர். தோல்வியுற்றதால், தேசமும் போய், பணமும் போய் அல்லல். உணவிற்கும் உடைக்கும் பஞ்சம். இந்நிலையில் தத்தளித்துக்கொண்டிருந்தது ஜெர்மனி. நம் நாட்டில் அத்துணை அரசியல் கட்சியில்லை. ஜெர்மனியில் அக்காலத்திருந்த அரசியல் கட்சிகளின் பெயர்களைக் குறிப்பிடவும் முடியாது. வல்லரசாகயிருந்து, தன்பெருமையிழந்து இழி நிலைக்குப்போய், மக்கள் ஏங்கி, உள்நாட்டு அல்லல்களால் உழன்று, ஸ்திரமற்ற சர்க்காரால் தத்தளித்திருக்கையில் தோன்றினான் ஹெர் அடோல்ப் ஹிட்லர்.

தவித்து, வாடிக்கொண்டிருந்த தாய் நாட்டின் புனருத்தாரண புருஷனான் ஹிட்லர். தாய் நாடு, தாய்நாட்டு சகோதரர், தாய்நாட்டு ஆக்கம், இவற்றில் பற்றுக் கொண்ட மக்களுக்கு இத்தாலி ஸர்வாதிகாரி முஸோலினி, நமது ஹிட்லர் ஆகியோர் பின்பற்றத் தக்க சரியான எடுத்துக் காட்டாகும்.

ஹிட்லர் பிறந்தது ஆஸ்திரியாவில். எனினும் உடலில் ஓடியது ஜெர்மன் ரத்தம். ஜெர்மனி முன்னேற வேண்டும், ஜெர்மன் மக்கள் உலகில் எங்கிருப்பினும் ஒன்றுபட வேண்டும் என்ற அவா அவருக்குச் சிறுவயதிலிருந்தே எழுந்தது.

### இளமை

ஆஸ்டிரியப் பள்ளிக்கூடங்களில் பிஸ்மார்க் படத்தைக் கொண்டு வரக்கூடாதென்றும், ஜெர்மன் தேசிய கீதங்கள் பாடக்கூடாதென்றும் தடைவிதிக்கப்பட்டிருந்தது. இளம் ஹிட்லர் இதைப் பொருட்படுத்தமாட்டான். உரக்க தேசிய கீதங்கள் பாடுவான். இவனுக்கு சங்கீதத்திலும் சிற்பத்திலும் அதிக ஆவலுண்டு. பள்ளிக்கூடங்களில் பிஸ்மார்க் படங்கள் எழுதித் தன் நண்பர்களுக்குக் கொடுப்பான். அவர்களையும் சேர்த்துக்கொண்டு தடையைமீறி உற்சாகத்துடன் தேசிய கீதங்கள் பாடுவான். இதனால் தண்டிக்கப்படினும் அதைப்பொருட்படுத்தமாட்டான். ஹிட்லர் சிறுவயதிலேயே, சாந்தம், பணிவு, உறுதி ஆகிய அருங்குணங்களையுடையோனாயிருந்தான்.

1903-ல் ஹிட்லரின் தந்தை இறந்தார். 1908-ல் ஆதரித்து அன்புடன் போற்றி வந்த அன்னை மறைந்தாள். அப்பொழுது ஹிட்லருக்கு வயது 18. சுங்க உத்தியோகஸ்தராகயிருந்து உபகாரச் சம்பளம் பெற்றுவந்த ஹிட்லர் தந்தை அதிக சொத்துவைக்கவில்லை. தந்தை யிருக்கும்பொழுதே குடும்பத்திற்குக்கஷ்டம். தாயும் இறக்கவே, ஹிட்லர் தனியனானன்.

கிராமத்திலிருப்பதால் பயனில்லை. வியன்னா சென்றால், நிறைய சம்பாதிக்கலாம் என்ற அபிப்பிராயம் ஹிட்லருக்கு ஏற்பட்டது. தனது சிற்பத் திறமும் சங்கீதமும் தனக்கு உணவளிக்குமென்பது அவர் நினைவு. ஆனால் அதற்குரிய சர்வ கலாசாலைகளில் சேர வழியின்றி உண்ண உணவின்றி அவர் தெருத் தெருவாய் அலைந்து வந்தார். இரண்டு வருடங்கள் கல் உடைப்பது, செங்கல் தூக்குவது, சில்லரை வேலைகள் பார்ப்பது மூலம் தமது ஜீவனத்தைக் கழித்தார். அப்பொழுது, அபேதவாத சங்கத்தில் சேரும்படி அவர் கோரப்பட்ட பொழுது, அதில் தனக்கு நம்பிக்கையில்லையென்று சேர மறுத்தார். இதனால் அவர் வேலையின்றி பட்டினி கிடக்க நேர்ந்தும் தமது உறுதியிலிருந்து அவர் நழுவவில்லை. ஹிட்லரின் இள வாழ்க்கையும் முஸோலினியின் வாலிபப் பொழுதும், ஒவ்வொரு நாட்டின் இளைஞருக்கும், தங்கள் தாய் நாட்டிலேயே யாவரினும் முதல் நிலைக்கு எய்தியவர்கள், எவ்வித கஷ்டமான வாழ்க்கை நடத்தி வந்தனரென்பதைக் காட்டித் தளரா ஊக்கம் அளிக்கும் என்பதில் ஐயம் இல்லை.

சில்லரைத் தொழில்களால் பயனில்லையெனக் கண்டு, அதன்பின் மூன்று வருடங்கள் சித்திரங்கள் எழுதி விற்று ஹிட்லர் ஜீவனம் நடத்தினர். இத்தொழிலில் அவருக்கு உணவுக்கும், உடைக்கும், இருக்கவும் போதிய ஊதியம் கிடைத்ததெனலாம்.

### பார்லிமெண்ட் ஆட்சியில் வெறுப்பு

ஆஸ்திரியாவிலிருக்கும் பொழுதே இவருக்குப் பார்லிமெண்டரி ஆட்சியில் வெறுப்பும், யூதர்மீது குரோதமும் ஏற்பட்டது. வியன்னாவிலிருக்கையில் பார்லிமெண்ட் நடவடிக்கையைப் பார்க்கச் சென்றிருந்தார். அங்கு அங்கத்தினர்கள் ஒழுங்கின்றி, கன்னாபின்[illegible]வென்று சத்தமிட்டுக்கொண்[illegible] காரியாதிகள் நிறைவே[illegible]தில் சங்கடமும், கால[illegible]மும் ஏற்பட்டதைக் கண்ட அவருக்கு, அம்முறையில் அதிருப்தி ஏற்பட்டுவிட்டது. எல்லாத் துறையிலும் யூதர்களிருந்து, தாய் நாட்டு மக்களுக்கு இடங்கிடையாமலிருந்ததே அவருக்கு அப்பொழுதே யூதர்களிடம் வெறுப்பேற்பட்டதற்குக் காரணம். அது பின்னர் யூதர் விரோதச் சட்டங்களாகப் பரிணமித்தன.

வியன்னாவில் 5 வருடங்களிருந்தும் போதிய வருமானமும் புகழும் தமது சிற்பக்கலையிலிருந்து கிடைக்காததில் வியன்னா வாழ்க்கையில் அவருக்குக் கசப்பேற்பட்டது. 1913-ம் வருடம் தமது 23-வது வயதில், அவர் பவேரியாவின் தலைநகர் மியூனிச் வந்து சேர்ந்தார்.

அங்கு வந்ததும் பாப் என்ற தையற்காரன் வீட்டில், ஒரு அறை வாடகைக்கு எடுத்துக் கொண்டு, அங்கும் தமது சி[illegible]திரத் தொழில்மூலம், த[illegible] உணவிற்கும், இடத்திற்கும் வேண்டிய பொருள் தேடுவதில் முயன்றார். தாம் இருந்த வீட்டுக்காரரும், அவர் மனைவியும், அவரது குழந்தைகளும், அவர்பால் மிக்க அன்புடனிருந்து வந்தனர். எனினும் அவர்கள் பன்முறை வேண்டியும் அவர் அவர்களுடன் உண்பதில்லை. பட்டினியிருப்பினும் இருப்பரேயன்றி பிறர் உதவி தேடுவது அவர் வழக்கமில்லை.

### யுத்த சேவை

1914-ம் வருஷம் ஜூன் மாதம், 28-ந்தேதி செராஜிவோவில், ஆஸ்திரிய இளவரசன் கொலை செய்யப்பட்டதையொட்டி மகா யுத்தம் ஏற்பட்டது. ஜெர்மனி அதில் வெற்றி பெறுவதுறுதியென அவர் நினைத்தார்.

பவேரிய அரசர் படையில் சேர்ந்து ராணுவப் பயிற்சி பெற்றார். இவர் படை மேற்கு முனைக்கு அனுப்பப்பட்டது. குண்டுமாரியினிடையிலும், குளிர், பட்டினி இவற்றின் தொந்திரவிலும் அவர் அஞ்சாது போர் வீரனாகவும், மிகவும் அவசியமான கடிதங்கள் கொண்டுசெல்லும்ஒற்றராகவும் செய்த சேவை போர் வீரர்களாலும், ராணுவ அதிகாரிகளாலும் போற்றப்பட்டு பின்னர் அவருக்கு அநேக பட்டங்களும், சன்மானங்களும் வழங்கப்பட்டன. மூவாயிரம் பேரிருந்த இவர் படையில் 500 பேரே எஞ்சினர். அதில் இவரொருவர்.

1916-ல் குண்டுக்காயம் பெற்று தேறியதும் மீண்டும் யுத்தமுனைக்குச்சென்றார். ஜெர்மனியரிடை அப்பொழுதேற்பட்டிருந்தசோர்வே அவர் யுத்தகளம் புகுந்ததற்குரிய காரணமாகும். யுத்தம் முடியும்வரை

யில், 1918-ம வருடம் விஷப் புகையால் மூர்ச்சையடைந்து ஆஸ்பத்திரிக்குச் சிகிச்சைக்குக் கொண்டு போகப்பட்டு, அங்கிருக்கையில் யுத்த நிறுத்தம் ஏற்படும் வரையில் அவர் யுத்தத்தில் துணிவுடனும் உறுதியுடனும் சேவைசெய்தார்.

### புதுக் கட்சி

முடிவில் ஜெர்மனி தோற்றது ஜனங்களிடை ஏற்பட்ட அதிருப்தியும், ராணுவத்திலும், கப்பற்படையிலும் ஏற்பட்ட கலகமும் உள்நாட்டிலும் தொழிலாளரின் வேலை நிறுத்தங்கள் அடுத்தடுத்து ஏற்பட்டு, அபேதவாதிகள் செல்வாக்கு அதிகரித்து அமைதியின்மை நிலவியதும், கெய்ஸர் முடிதுறந்து ஹாலந்து செல்லும்படி செய்தது. குடியரசு சர்க்கார் ஸ்தாபிக்கப்பட்டது. அவர்கள் நேசதேசங்களுடன் ஜெர்மன் தேசிய கௌரவத்திற்கே விரோதமான வர்சேல்ஸ் உடன்படிக்கையில் கையெழுத்திட நேரிட்டது. இதனால் ஜெர்மனி தன் நாடுகளின் பலபாகங்களையும், ஏராளமான யுத்தக்கடனும் செலுத்தும்படி நேர்ந்தது.

நாட்டில் அநேக கட்சிகள் தோன்றி செல்வாக்கு பெற முயன்றன. அவற்றுள் முக்கியமானவை மூன்று கட்சிகள். ஒன்று அபேதவாதக்கட்சி; மற்றொன்று கத்தோலிக்கர் குடியரசுக்கட்சி; இன்னொன்று சுயேச்சை அபேதவாத ஜனநாயகக்கட்சி. ஹிட்லர், இதிலொன்றிலும் சேரவில்லை. ஜெர்மனியின் வீழ்ச்சியும், மக்களிடையேற்பட்ட சோர்வும், பேடித்தனமும் அவர் மனதை வாட்டின. ஆறுபெயருடன் ஒரு புதுக்கட்சி தோன்றியது. அதன் கூட்டத்திற்குச் சென்ற ஹிட்லர் அதில் சேர்ந்து கொண்டார். அதுவே பின்னர் நாஸிக்கட்சி ஆகியது அவரது ஊக்கமும், உறுதியும் உண்மையும் நேர்மையும் பெரும்பாலான ஜெர்மன் மக்களை அவர்கட்சியிலேயே சேரத்தூண்டியது. சிறிது சிறிதாக அவர் கட்சி பலப்பட்டுக் கூட்டங்களுக்கு ஏராளமான மக்கள் வரத்துவக்கினர்.

அபேதவாதிகள் இதையொழிக்கச் செய்த முயற்சிகளெல்லாம் வீணாயின. "பலாத்காரத்திற்குப் பலாத்காரம், பழிக்குப்பழி" ஹிட்லர் கட்சியின் கொள்கைகள். ஹிட்லரின் அரிய துணிவும், ஊக்கமும், கட்சியின் செல்வாக்கும் சர்க்காரையும் திடுக்கிடும்படிச் செய்தது. அடக்குமுறைக்கு முயன்றும் பயனில்லாது போயிற்று.

ஹிட்லர், சர்க்காரைக் கைப்பற்றுவதன் மூலமே தாய் நாட்டை மேன்மையுறச் செய்யலாம் என்று துணிந்தார். பவேரியா ஆட்சியைக் கைப்பற்ற திடீர் சூழ்ச்சி செய்தார். அது வெற்றிபெற்றிருக்கும். ஜனரல் லூடன்டார்பு தவறுலேயே அதில் தோல்வியுற்று ஐந்துவருட சிறைத் தண்டனையேற்றார். சிறையிலும் உற்சாகமே. ஆனால் சீக்கிரம் விடுதலைபெற்றார்.

நாஸிக்கட்சி செல்வாக்கு பெருகியது. கூட்டங்களை நடத்தவும், பழிக்குப்பழி வாங்கவும், தமது பாதுகாப்புக்காகவும், அவர் சேர்த்த சூருவளித் தொண்டர் படை பெருகி, வலிமையடைந்து, யாவரும் அஞ்சும் நிலைமை வகித்தது. மேலும் அத் தொண்டர்கள் ஒழுக்கம் நிறைந்தவர்களாயிருக்கவேண்டுமென வற்புறுத்தியதில் அதன் செல்வாக்கும், அதன்மீது மக்கள் நம்பிக்கையும் பெருகியது.

### பிரதம மந்திரி

இவரது கட்சி வலிமையறிந்த வான்ஹிண்டன்பர்க் இவரைப் பிரதம மந்திரியாக்கினார். அப்பொழுது ரீச்ஸ்டாக்கில் 196 பேர்களே இவர் கட்சிப் பிரதிநிதிகள். மீண்டும் நடந்த தேர்தலில் 280 ஸ்தானங்கள் இவர் கட்சிக்குக் கிடைத்தன. இச்சம்பவம் நிகழ்ந்தது 1933-ல். பிரதம மந்திரியாயிருக்கும்போது சர்வாதிகாரச் சட்டத்தையும் ஆக்கி பூரண அதிகாரத்தையும் அவர் ஏற்றார்.

கெய்ஸர் காலத்து வீழ்ச்சியடைந்த ஜெர்மனியின் இரண்டாவது ஏகாதிபத்தியம், ஹிட்லர் தலைமையில் மூன்றாவது ஏகாதிபத்தியமாக புதுக்களை பெற்றெழுந்தது.

### முன்னேற்ற வேலைகள்

அவர் தாய்நாட்டின் நலத்திற்காக ஏற்படுத்திய திட்டங்களும், சட்டங்களும் எண்ணிலடங்கா. பொதுவாக நாட்டின் விவசாயம் அபிவிருத்தியடைந்தது. வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிந்தது. கைத்தொழில் பெருகியது ஜெர்மனியர் சோர்வொழிந்து, மீண்டும் ஆண்மைபெற்றார்கள் எனலாம்.

ஜெர்மனியின் தீவிர வளர்ச்சி அதை சர்வதேச சங்கத்தில் சேரும்படிச்செய்தது. 1925-ல் சேர்ந்தது, 1934-ல் அதன் வேலை முறையில் வெறுப்புற்று ஜெர்மனி சங்கத்திலிருந்தும் விலகியது.

வெளி நாடுகள் ஜெர்மனியைக் கண்டஞ்சும் நிலையேற்பட்டது. ஸார் பிரதேசத்தை ஜெர்மனிக்காக மீண்டும் பெற்றார்; ராணுவத்தைப் பெருக்கினார், ஆகாயப்படை, கப்பற்படையமைத்தார், ரைன்லாந்தில் மீண்டும் ஜெர்மன் துருப்புகளை நிலை நாட்டினார். இவ்விதமுறைகளால் ஜெர்மனிக்கு இழிவு தந்த வர்சேல்ஸ், லொகார்னோ உடன்படிக்கைகளை நிர்மூலமாக்கினார். ஹிட்லர் ஜெர்மனி சமாதானத்தையே விரும்புவதாகவும் ஆனால் அதற்காக ஜெர்மனி தனது மானத்தை யிழக்கத் துணியாதென்றும் யாவருடனும் சமமாயிருப்பதே ஜெர்மனியின் நோக்கமென்றும் ஹிட்லர் அறிவித்துளார். 1914-ல், யுத்தத்தில் ஈடுபட்டு அதன்பயனாகச் சோர்ந்து முறியடிக்கப்பட்ட ஜெர்மனி, இருபது வருடங்களுக்குள்ளாகவே, முந்திய அஞ்சும் நிலைமை எய்தியதற்கு ஹெர் ஹிட்லரே காரணம்.

ஆஸ்திரியாவின் நட்பைப் பெற்று அதன் மூலம் இத்தாலியையும் தன்னுடன் சேரும்படி ஹிட்லர் செய்தார். 1934-ம் வருடம் ஜூன்மாதம் 14-ந்தேதி வெனிஸ் நகரில் ஹிட்லரும், முஸோலினியும் சந்தித்த காட்சி உலகவல்லரசுகளையே பிரமிக்கச் செய்தது உலகம் இப்பொழுது மறுமொரு மகாயுத்தத்திலிருந்தும் நிலையிலிருக்கிறது. இதற்குக் காரணம் யாராயிருக்கலாம் என ஒருவரைக்குறிப்பிட முடியாது ஏகாதிபத்திய நாடுகளின் நாடுபிடிக்கும் ஆசையும், பொறாமையும் பயமுமே அதற்குரிய காரணமாகும் ஆகவே ஹிட்லர், முஸோலினி போன்ற சர்வாதிகாரிகள் மீது குற்றத்தைச் சுமத்த முயற்சிப்பது யனில்லை நேர்மையாக தேசங்கள் நடக்கவேண்டும்.

இந்திய மக்களுக்கு ஹிட்லர் வாழ்க்கையளிக்கும் படிப்பினை தேசமுன்னேற்றத்திற்குஉறுதியுடனும், துணிவுடனும், தியாக புத்தியுடனும் தன்னலம் பாராது நடக்க வேண்டும் என்பதாகும். முதலில் தாய் நாடு, பின்னரே சர்வதேச நலம் என்பது ஹிட்லர் கொள்கை



"என் குழந்தை மிகவும் துர்ப்பலமாகவும், பல் கோளாறுடனுமிருந்தது. அதற்கு நான் கல்ஸானா தான் கொடுத்தேன் அதனால் எடை அதிகரித்தது மனைவியில், பல் தொந்தரவும் ஒழிந்தது"

என்கிறார் இந்தியாவைச் சேர்ந்த டாக்டர் J. C. S., S.,

## கல்ஸானா

தாய்க்கும் குழந்தைக்கும்

## ஆரோக்கியமும், வலுவும்

அளிக்கிறது

ஆரோக்கியமும், வலுவுமான குழந்தைகளே தகப்பனார்களின் இன்பம்; உங்கள் மனைவி கர்ப்பமாயிருக்கும் சமயத்தில் கல்ஸானா சாப்பிட்டால் மேற்படி இன்பம் உங்களுடையதே. கல்ஸானா தாய்க்கும், குழந்தைக்குமான உணவு. இது பலவீனத்தைப் போக்கி, தலைமயிரும், பற்களும் உதிர்வதைத் தடுத்து, தாயாருக்கு இளமையும், மகிழ்ச்சியும் தருகிறது.

குழந்தைகள் சம்பந்தப்பட்டமட்டில் கல்ஸானா அவர்களுக்கு வலுவு நிறைந்த எலும்புகளைக் கொடுத்து, பிரகாசமான பற்களை வழங்குகிறது. கடுமையான நோய்களில் விழாமல் தேகத்திற்கு விசேஷ பலத்தையளிக்கிறது. வலிக்கு கல்ஸானாவை விடச் சிறந்த நிவாரணி இல்லை.

தாமதிக்க வேண்டாம்! உங்களுக்கருகிலுள்ள வியாபாரியிடமிருந்து உடனே கல்ஸானா புட்டி ஒன்றை வாங்கிக்கொள்க. உங்கள் குழந்தைகள் ஆரோக்கியமாகவிருக்கும்; மனைவி இளமையுடனும், அழகுடனும் விளங்குவாள்.

# Kalzana

மேலான ஆரோக்கியதாயகமான உலக உணவு.

கைபடாமல் தயாரிக்கப்படுவது.




ஒரு கனவான் மற்றும் மூவருடன் காசுவைத்து சீட்டாட வந்தார். மூவரும் காசு வைத்தனர். கனவான் மட்டும் காசு வைக்காமல் ஏமாற்ற நினைத்தார். இதைக் கண்ட மூவரும் அவரிடம் கேட்க விருப்பமில்லாமல் யார் யார் காசு வைத்துவிட்டனர் என்று கூச்சல் போட்டுப் பேசிக் கொண்டிருநதனர். அதனால் கனவான் பணம் வைத்து விடுவாரென்று நினைத்தார்கள்.

ஆனால் மிகவும் செட்டான அவர்:—நீங்கள் இவ்விதம் சண்டை போட்டுக்கொண்டிருந்தால், நான் என் பணத்தை எடுத்துக்கொள்ளுகிறேன்.

* * * *

நடுநிசியில் ஒருவன் டாக்டரை எழுப்பினன். டாக்டர் எழுந்து வந்து வெளியே மாட்டியிருக்கும் போர்டைக் காட்டி, "காலை 6 முதல் 10 வரையிலும் மாலை 3 முதல் 7 வரையிலும் தான் நான் நோயாளிகளைப் பார்ப்பது வழக்கம்" என்றார்.

வந்தவர்:—எனக்கு நாய்க் கடி அந்தப் பாழும் நாய்க்கு இதெல்லாம் தெரியவில்லையே.

* * * *

பாட்டு உபாத்தியாயர்:—நீ பாடம் படிக்கவில்லை என்று கூறுவது எனக்கு ஆச்சரியமாகவிருக்கிறது இதனால் உனக்கு என்ன பிரயோஜனம்?

சிறுமி:—பாட்டுப் பாடாமலிருந்தால் தினம் நாலணா கொடுப்பதாக பக்கத்து வீட்டு மாமா சொல்லியிருக்கிறார்.

* * * *

ஒரு குமாஸ்தா 25 வருஷம் வேலை செய்து விலகிக்கொண்டார். அவர் வேலை செய்த கடைசி தினத்தன்று மானேஜர் அவரை அழைத்து ஒரு கவரைக் கொடுத்து, "இதை என் ஞாபகார்த்தமாக வைத்துக்கொள்ளுங்கள்" என்றார்.

குமாஸ்தா கவரைப் பிரித்துப் பார்த்தார். அவர் அதில் ஏதாவது பணமிருக்குமென்று எதிர்பார்த்தார். ஆனால் மானேஜரின் போட்டோ ஒன்று இருந்தது.

மானேஜர்:—எப்படியிருக்கிறது?

குமாஸ்தா:— உங்களைப் போலத்தான் இருக்கிறது.

* * * *

ஹோட்டலுக்குச் சென்றவர் டிபன் ஆர்டர் செய்தார். ஆனால் கூட்டம் அதிகமாகவிருந்ததால், டிபன் சிக்கிரத்தில் வரவில்லை. இதனால் கோபமடைந்தவர்:—தோசைக்காக எவ்வளவாகப் போகிறது?

ஸர்வர்:—ஒரு அணாதான் ஆகும்

* * * *

ஆபரேஷன் செய்து கொண்டவர்:—போதும் போதும் ஆபரேஷன் செய்து கொண்டது இனிமேல் டாக்டர் என் மேல் கைகூட வைக்கக் கூடாது.

நர்ஸ்:—ஆபரேஷன் கஷ்டமானது.

இச்சமயத்தில் டாக்டர் அங்கு வந்தார்.

டாக்டர்:— ஆபரேஷனில் ஒரு பெரிய தவறுதல் நடந்துவிட்டது. ஒரு கத்தி வயிற்றுக்குள் தங்கிவிட்டது. அதை எடுக்க மறுமுறை ஆபரேஷன் செய்யவேண்டும்.

"போதும் போதும். கத்திக்குப் பதிலாக இந்த ஐந்து ரூபாயை வைத்துக்கொண்டு வேறு கத்தி வாங்கிக்கொள்ளுங்கள்."

* * * *

குடித்தனக்காரர்:—வீடு இரண்டு இடத்தில் ஒழுகுகிறது.

வீட்டுச் சொந்தக்காரர்:—அதற்கென்ன? நான் இரண்டு குடைகள் அனுப்புகிறேன்.

* * * *


## வெண குஷ்டம் பெருவியாதி

எவ்வளவு கடுமையானதாயினும், எவ்வளவு நாட்பட்டதாயினும் நாலே வாரத்தில் குணம். ஸ்வர்த்தக்கு உத்தரவாதம்.

விவரங்களுக்கெழுதுக

KAMALA WORKS (S M.)

Panchpota—Bengal. India.




மீனும் குழந்தைபோல் வளர்க்கப்படுகிறது. வில்ட்னி (ஆஸ்திரேலியா) யிலுள்ள மிஸ்டர் எல். ஜே. ஸ்வையின் செல்லமாக வளர்க்கும் தமது மீன்களுக்கு பீடிங் பாட்டில் மூலம் பால் கொடுக்கிறார்.

தென்னிந்தியப் பிரமுகர்கள்

## மஹாமஹோபாத்யாய

# கவிசிகாமணி தட்டை ஸ்ரீநிவாஸாசார்யார்

—— :[o]: ——.

(கே. எஸ். ஆர்.)



தற்காலத்தில் பிரஸித்தியுடன் விளங்கும் சம்ஸ்கிருத பண்டிதர்களுள் மஹாமஹோபாத்யாய ஸாரஸ்வத ஸாரக்ஞ கவிசிகாமணி, சப்தாலங்கார வித்யாபூஷண தட்டை ஸ்ரீநிவாஸாசார்யரும் ஒருவராவார். இவர்போன்ற புருஷர்கள் நமது பழைய கால முறைகள்படி, சம்பிரதாயங்களினின்றும் வழுவாமல், இத்தேசத்திய ப்ராசீன கிரந்தங்களைப் படித்துத் தாம் கற்றவற்றைத் தமது சிஷ்யர்களுக்கு உபதேசிக்கும் இயல்புடையவர்கள் இத்தகைய பெரியார்களின் தொகை இக்காலத்தில் தினே தினே குறைந்து வருவது நாம் யாவரும் அறிந்ததேயாகும். ஏனெனில் இப்போது நமது ப்ராசீன சம்ஸ்கிருத வித்யாப்யாஸமும், புதிதாக ஆங்கிலக் கல்வி முறைகள் ஏற்பட்டதன் காரணமாக பாதிக்கப்பட்டிருக்கிறது. மஹாமஹோபாத்யாய ஸ்ரீநிவாஸாச்சார்ய ஸ்வாமி சிரேஷ்டமான ஆச்சார்யர்களை ஆஸ்ரயித்து அவர்களிடமிருந்து எல்லா சாஸ்திரங்களையும் தக்கபடி அதிகரித்து, இப்போது ஒரு வித்தியாநிதியாக சோபித்து வருகின்றார். இவரிடம் படித்த சிஷ்ய வர்க்கத்திற்கு இவரது பெருமை உள்ளபடி தெரியும். இது தவிர தட்டை ஸ்ரீநிவாஸாச்சார்யஸ்வாமி, தமது விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தில் அளவு கடந்த சக்தியும் பற்றும்கொண்டு, ஸ்ரீபகவத் ராமானுஜர், ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகன் முதலிய ஆச்சார்ய ரத்னங்களால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சித்தாந்தத்தை மிகவும் அபிவிருத்தி செய்யும் உத்க்ருஷ்டோத்க்ருஷ்டமான கைங்கர்யத்திலும் முழுமனதுடன் ஈடுபட்டவர்.

மஹா மஹோர்பாத்யாய தட்டை ஸ்ரீ வாதூல ஸ்ரீநிவாஸாச்சார்யஸ்வாமி திருச்சிராப்பள்ளி ஜில்லா, கரூர் தாலூகா, மேலப்பாளையம் கிராமத்தில், ஒரு உயர்ந்த ஸ்ரீவைஷ்ணவ குடும்பத்தில் 1867-ம் வருஷம் மார்ச்சுமாதத்தில் தட்டைஸ்ரீ வெங்கடபதிஅய்யங்கார் என்ற ஸ்வாமியின் குமாரராகப் பிறந்தார். இவருடன் ஜனித்தவர்கள் ஒரு சகோதரரும் நான்கு சகோதரிகளுமாவார்கள். இவர் உதித்த இந்த மேலப்பாளையம் கிராமத்தில் இதே காலத்தில் மஹா ஞாதாவும் சம்ஸ்கிருத வித்யாபாரங்கதருமான ஒரு சிரேஷ்ட ஸ்ரீவைஷ்ண வோத்தமர் வாழ்ந்து, சம்ஸ்கிருதச் சுடரின் ஜ்யோதியை எங்கும் விஸ்தரித்து வியாபிக்குமாறு செய்து வந்தார். இந்த வைஷ்ணகுல திலகர் தான் மஹாமஹோபாத்யாய அபிநவ காளிதாஸர் நடாதூர் ஸ்ரீ ரங்காச்சார்ய ஸ்வாமி என்பவர். இம்மஹா மஹோபாத்யரய ஸ்ரீ ரங்காச்சார்ய ஸ்வாமியின சிறப்பு இத்தென்னிந்தியாவில் மட்டும் அல்லாமல் வடதேசத்திலும் பரவியதாகும். சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன்பேயே இப்பெரியார் வட இந்தியாவிலும் தமது சம்ஸ்கிருத ஞானத்தையும், சதாவதானத்தில் இருந்து வரும் திறமையையும் நிரூபித்து அநிதாசாதாரணபுகழைச்சம்பாதித்துக் கொண்டவர். இதுநிற்க, இந்த தட்டை ஸ்ரீநிவாஸாச்சாரியார் தமது 10-வது பிராயத்தில் தமது பிதாவை இழந்து விட்டார். இவர் பால்யம் முதற்கொண்டே ஆசார சீலராகவும் தேவபாஷையான சம்ஸ்கிருதத்தைக் கற்கவேண்டுமென்ற ஊக்கத்தை இயற்கையாகவே உடையவராகவும் இருந்து வந்தார். இவ்வாறு இருந்து வந்த இவருக்குத் தமது பிதா விட்டு விட்டுச் சென்ற பால்ய குடும்பத்தைச் சம்ரக்ஷிக்கும் பொறுப்பு ஏற்பட்டுவிட்டது. ஆயினும் இப்பெரிய பொறுப்பினால் சளைத்து விடாமல், அவ்வூரிலேயே (மேலப்பாளையம் கிராமத்திலேயே) இருந்து வந்த சில சம்ஸ்கிருத வித்வான்களிடம் சென்று அந்தப் பாஷையில் தேர்ச்சி அடைய வாரம்பித்தார்.

சம்ஸ்கிருத பாஷையின் பிரதம பகுதிகளில் ஒருவாறு தேர்ச்சியடைந்த பின்பு, ஏற்கெனவே குறிப்பிக்கப்பட்ட மஹா பண்டிதரான மஹாமஹோபாத்யாய நடாதூர் ஸ்ரீ ரங்காச்சார்ய ஸ்வாமியை ஆஸ்ரயித்தார். நடாதூர் ஸ்ரீ ரங்காச்சார்ய ஸ்வாமியிடம்இவர் அநேகம்சாஸ்திரங்களைக் கற்றுணர்ந்தார். இவரது குருவான இந்த நடாதூர் ஸ்வாமிக்கு இவரது வினயம் முதலிய குணாதிசயங்களும், வித்தையை ஸ்வீகரித்துக் கொள்வதில் இருந்துவந்த திறமையும் ஊக்கமும் மிகவும் ப்ரீதியைக் கொணர்ந்தன. ஆகையினால் நடாதூர் ஸ்வாமி தமது சிஷ்யனுக்குப் பெருமகிழ்ச்சியுடன் ''ஸாரஸ்வத ஸாரக்ஞர்'' என்ற ஒரு பிருதத்தை வழங்கி, இப்பிருதத்தின் மூலமாக இவரது யோக்யதை முதலானவற்றைக் கோஷித்தார்.

இதன் பின்பு இந்த ஸாரஸ்வத ஸாரக்ஞரான ஸ்ரீ ஸ்ரீநிவாஸாச்சார்யர் அநேக ராஜஸ்தானங்களுக்கும் பல தடவை சென்று, அங்கு ராஜ சபைகளில் நடக்கும் வித்வத் சபைகளில் தமது பாண்டித்தியத்தை நிரூபித்து, அநேகம் பரிசுகளும் சன்மானங்களும் சம்பாதித்து வந்தார். இவ்வாறு இருந்து வரும் போது இவர் கிருஹஸ்தாஸ்ரமத்தையும் ஸ்வீகரித்துக் கொண்டார்.

இதன் பின்பு இவர் தமது பால்ய குடும்பத்தினால் விளைந்த சில கஷ்டங்கள் காரணமாக மேலப்பாளையம் கிராமத்தை விட்டு விட்டு, சமீபத்திலுள்ள வாங்கல் கிராமத்தில் ஒரு வீட்டை வாங்கிக் கொண்டு அங்கேயே தமது காலத்தைக் கழித்து வந்தார். எக்காலத்திலும் இவர் தமது சம்ஸ்கிருத ஞானத்தை வளர்த்து வந்தார். தாம் கற்றுணர்ந்த சாஸ்திரங்களைத் திரும்பத் திரும்பப் படித்து அவைகளில் ஏதாவது சந்தேகங்கள் எழும்பினால் பெரியவர்களிடம் போய் தமது சந்தேகங்களைப் போக்கிக்கொள்வதும், புதிய புதிய நுட்பமான விஷயங்களைக் கண்டெடுத்து சந்தோஷிப்பதும் இவரது வழக்கமாக இருந்து வந்தது. மேலும் மேலும் தமது சாஸ்திர ஞானத்தை அபிவிருத்தி செய்துகொள்ள வேண்டி இவர் ராமநாதபுரம் சென்று அங்கு மகா வித்வான் பந்தல்குடி வேதாந்தாச்சார்யரிடம் படிக்க வாரம்பித்தார். வேதாந்தாச்சார்யரிடம் இவர் வியாகரண சாஸ்திரம் பூராவையும் அப்யஸித்துக் கொண்டார். இவருக்கு இளம் பிராயத்திலேயே லபித்த வித்வத்தைக் கண்டு அவர் மிகவும் மகிழ்ந்தார்.

ராமநாதபுரத்திலிருந்து வந்த வித்வஜ்ஜன பக்ஷபாதியும் பரம தார்மிகருமான பாண்டித்துரைத்தேவர் இவரை எப்போதும் தமது அரண்மனையிலேயே இருத்தி வைத்துக்கொண்டு, இவரது பேச்சுக்களைக்கேட்டு சதா இன்புறுவது வழக்கமாகவும் அக்காலத்தில் இருந்துவந்தது. பாலவனத்தம்ஜமீன்தாரானபாண்டித் துரைத்தேவர் இவரிடமிருந்து அழகான சம்ஸ்கிருத

# PASSED MATRIC

பம்பாயிலிருந்து மிஸ்டர்.......... எழுதுவதாவது: "நான் மெட்ரீக் பரீக்ஷையில் தேறினேன்; இதற்கு தங்கள் "மூலிகை"யே காரணம். சீனியர் காம்பிரிட்ஜ் பரீட்சைக்காக ஒன்று அனுப்பவும்."

"திபேத் மூலிகை"யால் கீழ்க் கண்டவை சித்தியாகின்றன; லாமா யோகியின் வரப்பிரசாதம்.



வசீகரன், ஆண் பெண் இரு பாலருக்கும் இடையில் இன்பமயமான காதலை உடனே விளைவிக்கும். இதை அணிபவர் அதன் ஆச்சரிய சக்தியை விரைவில் அறிவர். விலை ரூபா 3-8-0. 2. வியாபாரமும், தொழிலும்:—நிச்சயமான தொழிலபிவிருத்தியும், இலாபமும்சித்திக்கும். விலைரூ.3-8-0 3. வியாஜ்யங்கள்:—இதன் சக்தியால் நம்பமுடியாத எவ்விதவியாஜ்யங்களும் ஜெயமாகும். விலை ரூ. 3-8-0 4. வியாதிகள்:— முடியாதெனக் கைவிடப்பட்ட சகலவித கொடிய ரோகங்களும் அடியோடு நீங்கும். விலை ரூபா 3-8-0 5. உத்தியோகம்:—வேலையில்லாத் திண்டாட்டத்தில் அவதிப்படும் இளைஞருக்கு அவரவர் ஸ்திதிக்குத் தகுந்தபடி உத்தியோகம் கிடைக்கும். சம்பள உயர்வும் உத்தியோக மேன்மையும் நிச்சயம். விலை ரூ. 3-8-0. 6. பரீக்ஷைகள்:- எவ்விதப் பரீக்ஷைகளிலும் நிச்சயமாய்த் தேறலாம். விலை ரூபா 3-8-0 7. சத்ருக்களை ஜெயித்தல்:—எவ்வளவு அபாயகரமான விரோதிகளும் இதை அணிபவர் முன், முழந்தாளிட்டுப் பணிவர் விலை ரூபா 3-8-0 8. கிரஹ தோஷம்:-எல்லாவிதமான கிரஹ தோஷங்களும் சாந்தியாகும். விலை ரூபா 3-8-0. 9. ஆரோக்யமும், செல்வமும்:—எளிதில் சித்திக்கும். விலை ரூ. 3-8-0.

அறிவிப்பு:—இந்த சாஸ்திரங்களில் நம்பிக்கையுள்ளவர்கள் மாத்திரம் தங்கள் நோக்கம் இன்னதென்பதைக் குறித்து எழுதவும். ஒவ்வொரு நோக்கத்துக்கும் தனிப்பட்டமூலிகை அவசியம். ஒரு மூலிகையின் விலை ரூபா 3-8-0. தபால் சார்ஜு வேறு ஒரே தடவையில் 3 மூலிகைகள் வாங்கினுல் தபால் சார்ஜ் உள்பட ரூ. 9-0-0.

தபால் சார்ஜ் தனி. அணு 8.

**BIJOYA LODGE, (S. W.)**
P.O. SALKIA HOWRAH.



# பிரபல ஜோதிஷர்



மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூபா 2. 1 வருஷ மாதவாரிப் பலன் எழுத ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்: 58, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், மதராஸ்.


சுலோகங்களையும் அவற்றின் அர்த்தங்களையும் காது குளிரக் கேட்டு மகிழ்வார். தவிரவும் அவர் இவருடைய ஆசாரம், சீலம், நடத்தை, பாண்டித்தியம் முதலியவற்றில் மிகவும் ஈடுபட்டவராகி, இவரைத் தமது அந்தப்புரத்திற்கும் அழைத்துப்போய் அங்கும் இவரது வசனங்களால் அனைவரையும் சந்தோஷிப்பிப்பது சகஜமாக இருந்தது. இவ்விதமாக இவர் ராமநாதபுரத்தில் சிலவருஷங்கள் இருந்தார். அப்போது அங்கே இவருக்குத் துணையாக வந்திருந்த இவரது அருமை சகோதரியை இவர் இழக்க நேர்ந்தது. இந்தத் துக்கம் தாங்காமல் இவர் உடனே தமது இருப்பிடமான வாங்கலுக்கு வந்து சேர்ந்தார்.

இங்கு சில வருஷங்கள் இருந்தபின்பு குடும்பக் கஷ்டங்கள் காரணமாக இவர் ஏதாவது ஒரு உத்தியோகத்தை நாடவேண்டுமென்று தீர்மானித்தார். இவ்விஷயமாக இவர் திருச்சிராப்பள்ளிக்கு வந்து சேர்ந்தார். அங்கு பல பெரிய மனுஷ்யர்களுடைய சிபார்சின் பேரில்இவருக்கு நேஷனல் காலேஜில் சம்ஸ்கிருத பண்டிதர் பதவி கொடுக்கப்பட்டது. இங்கு இவர் சுமார் இரண்டுவருஷகாலம் இருந்தார். அப்போது திருச்சி ஸெயிண்ட் ஜோஸப் கலாசாலையில் ஒரு சம்ஸ்கிருத பண்டிதரை நியமிப்பதற்காக ஒரு பெரிய பரீக்ஷை நடத்தப்பட்டது. இந்தப் பரீக்ஷைக்கு இவர் ஆஜராகித் தேறியவர்களுள் முதல்வராகச் சோபித்தார். உடனே 1898-ல் ஸெயிண்ட் ஜோஸப் கலாசாலையில் சம்ஸ்கிருத பண்டிதராக இவரே நியமிக்கப்பட்டார். திருச்சி ஜோஸப் கலாசாலையின் மானேஜராக நிர்வகித்து வந்த ஸீவல் பாதிரி மேற்குறிப்பிக்கப்பட்ட பரீக்ஷை முடிவைப்பற்றி எழுதியதாவது. "இப்பரீக்ஷையில் முதலாவதும் இரண்டாவதுமாகத் தேறியவர்கள் பெரிய பண்டிதர்கள். அவர்களுக்குப் பரீக்ஷிக்கப்பட்ட புஸ்தகங்கள் முன்பே தெரிந்திருந்தால் அவர்கள் எல்லா மார்க்குகளையும் நிச்சயமாகச்சம்பாதித்துக் கொண்டிருந்திருப்பார்கள். அவர்கள் சிறந்த படிப்பாளிகள். எந்தக் கலாசாலையிலும் உயர்ந்த பரீக்ஷை வரையில் பாடம் போதிப்பதற்கு அவர்கள் எவ்விதத்திலும் தகுதியுள்ளவர்கள்." இந்தக் குறிப்பையும் ஸீவல் பாதிரி இவருக்குத் தமது நன் மதிப்புடன் அனுப்பி வைத்தார். இதன் பின்பு இக்கலாசாலையின் பிரதம சம்ஸ்கிருத பண்டிதராக இவர் அநேக வருஷங்கள் இருந்து விலகிக்கொண்டார்.

கலாசாலையில் இவரது பாடபோதனையானது மிகவும் மெச்சப்பட்டதாகும். அநேகம் சந்தர்ப்பங்களில் இவரது சிஷ்யர்களே, பல பரிசுகளையும் கவர்ந்து சென்றனர். சென்னை சர்வ கலாசாலை வழங்கும் சில சம்ஸ்கிருதப் பரிசுகளும் இவரது சிஷ்யர்களுக்கே கிடைத்து வந்தன. இதனுல் கலாசாலை அதிகாரிகளான கிறிஸ்துவப் பாதிரிகள் மிக்கத் திருப்தியடைந்தனர். 1905-ம் வருஷம் ஜுலை மாதம் கலாசாலை மானேஜர் ஸீவல் பாதிரி எழுதிய பின்வரும் கடிதம் இவரிடம் அவர்கள் கொண்டிருந்த விசுவாசத்தையும் நன்மதிப்பையும் தெரிவிப்பதாகும். "கலாசாலைக்கு வந்த நாள் முதற்கொண்டு ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸாச்சாரியார் செய்துவரும் சிறந்த திருப்திகரமான ஊழியத்தை அதிகாரிகள் மிகவும் பாராட்டுகின்றனர். ஸ்ரீகோதாவரி பதக்கம் சென்ற இரண்டு வருஷங்களாக ஸ்ரீமான் ஸ்ரீ ஸ்ரீநிவாஸாச்சார்யரின் மாணவர்களுக்குக் கிடைத்து வருவதற்காக இவரைப் பாராட்டுவதன் அறிகுறியாக இவருக்கு 100 ரூபாய்கள் பஹுமானம் அளிப்பதென்று அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர். இது இவருக்கு உகந்ததாகக் கருதப்படும் என நம்பப்படுகிறது" என்று ஸீவல் பாதிரி எழுதி, 100 ரூபாய்களையும் இவருக்கு அனுப்பினுர். இவ்வாறே பின்பும் பலதடவைகள் இவர் இம்மாதிரி பஹுமானத்தையடைந்து வந்தார். கலாசாலையில் எல்லோரும் இவரிடம் மிக்க மரியாதையுடனும் விசுவாசத்துடனும் நடந்துகொண்டு வந்தனர். இவரது போதனு சக்தியையும், விஷயங்களுக்கு வியாக்யானம் செய்யும் விதத்தையும் பார்த்து சந்தோஷிக்க, பல ஆங்கிலேயர்களும் இதர அந்நிய நாட்டினரும் இவரது வகுப்பிற்கு வந்து போவதுண்டு. அநேகம் மடாதிபதிகளும் இவரது ஞானத்திற்காக இவருக்கு விசேஷ சம்பாவனைகள் செய்ததுண்டு.

ஸ்ரீமத் அஹோபிலமடம் பட்டத்தில் எழுந்தருளியிருந்து மஹா ஞாதாவான கும்பகோணம் ஸ்ரீ அழகிய சிங்கர் இவரது காவ்ய சக்தி முதலியவைகளைக் கண்டு சந்தோஷமடைந்து இவருக்கு "கவி சிகாமணி" என்ற பட்டத்தை அளித்தார். காசி பாரத தர்ம மகா மண்டல சபையார் இவருக்கு "ஸாஹித்ய ரத்னம்" என்ற பிருதத்தை வழங்கினர். காலேஜில் இருக்கும்போது தமக்கு வேலை அதிகமாக விருந்தபோதிலும்சிரமத்தைக் கருதாமல் ஸ்ரீ ரங்கத்திற்குச் சென்று அங்கு மகா ஞாதாவாக எழுந்தருளியிருந்த பௌண்டரீகபுரம் ஸ்வாமியிடம் வேதாந்த காலக்ஷேபம் சரியாகவும் கிரமமாகவும் செய்து முடித்தார்.

இவருக்குக் கலாசாலையில் "சப்தாலங்கார வித்யா பூஷணம்" என்ற பிருதமும் வழங்கப்பட்டது.

(35-ம் பக்கம் பார்க்க)


உயர்ந்த வைரங்கள்

**T. R.**

**ஜோஷி & சன்ஸ்,**

**Diamond Merchants,**

38, ஏகாம்பரேசுவரர் அக்ரஹாரம் பி. டி. மதராஸ்.



**மியூச்சுவல் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.,**

தலைமை ஆபீஸ்:

187, மவுண்ட் ரோட், மதராஸ்.

**இதில் இன்ஷ்யூர் செய்துகொள்ளுங்கள்.**

ஏனெனில், இது வெகு வசீகாமான ஆயுள் அஷ்யூரன்ஸ் திட்டங்களையும், வியாபாரிகளுக்கும், பணக்காரர்களுக்கும் இன்வெஸ்ட் செய்ய விசேஷத் திட்டங்களையும் வழங்குகிறது.



## நரைமயிரை அகற்றுங்கள்



உங்களது தலைமயிர் வெகுகாலமாகவோ, மிக அதிகமாகவோ நரைத்திருந்தால் விவலேன் ஹேர் ஆயிலை உபயோகித்தால் நரை நீங்கித் தலைமயிர் கருகருவென்று பழையபடிப் பிரகாசிக்கும். இன்றே விவலேன் எண்ணெயை உபயோகியுஙகள். அதிக நரையில்லாவிடில் சிறியபாட்டில் ரூபா 1-12. நரை முற்றியிருந்தால் பெரிய பாட்டில் ரூ. 3. ஏககாலத்தில் 3 பாட்டில்கள் வாங்கினுல் தபால் செலவு இனும்.

சயண்டிபிக் பப்ளிஷிங் கம்பெனி (மெடிகல் டிபார்ட்மெண்டு S. 15) பவானிப்பூர், — கல்கத்தா

மதராஸ் ஸ்டாக்கிஸ்டு:—
ஜே. ஹஸாரிமால் & கம்பெனி, 260, சைனுபஜார் ரோட்,

ஸப் ஸ்டாக்கிஸ்டு:—
தாதா & கம்பெனி, மருந்து வியாபாரிகள், 52, நைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி. மதராஸ்.

செகந்தராபாத் ஸ்டாக்கிஸ்டு:—
பரேக் பிரதர்ஸ், ஜம்மா மஸ்ஜித்.



**G.கன்னையா கம்பெனி**

இரும்புப்பெட்டி வியாபாரம்.



**137.பிராட்வே மதராஸ்**




## த்யாகராஜ கீர்த்தனம்.

[காபிரைட்.]

ஸங்கீதவித்வான் காஞ்சி பி. பி. ஸ்ரீனிவாஸய்யங்கார், பி. ஏ. எழுதியது.

I

பல்லவி

சிவே! பாஹிமாம் அம்பிகே!— ச்ரிதபலதாயகி! (சிவே)

அனுபல்லவி

கவேரஜோத்தரதிரவாஸினி!—காத்யாயனி! தர்மஸம்வர்த்தனி! (சிவே)

சரணங்கள்

1. ஸ்வபாவ மௌநீப்ரபாவமு மஹா—நுபாவுராலின பாரதிகிபொக—
—டபாரமை யுண்ட, பாவஜாராதிபாம! நேநெந்த, பாக்யதாயினி! (சிவே)

2. கலார்த்தமிதி சசிகளாதரி! உபவலாரி மாயாவிலாஸினி!—ஸ—
—கலாகமநுதே! பளாயனக சுபபலாலொஸகு பரமலாலனம்முல (சிவே)

3. சராசரமயி! கராரவிந்தமுந ராமசிலுகனு பிரானபூனி
பராகுகாஜூடராது ஸ்ரீரகுவராப்துடகு த்யாகராஜவிநுதே! (சிவே)

II

| | |
|---|---|
| சிவே | —மங்களத்தை யுண்டாக்குபவரே! |
| அம்பிகே | —தாயே! |
| ச்ரித பல தாயகி | —பக்தர்கள் கோரின பலன்களை யளிப்பவரே! |
| கவேரஜா உத்தர திரவாஸினி | —காவேரியின் வடக்குக் கரையில் கோயில் கொண்டிருப்பவரே! |
| காத்யாயனி | —காத்யாயனி! |
| தர்ம ஸம்வர்த்தனி | —தர்மஸம்வர்த்தனி யம்மையே! |
| பாவஜாராதி பாம | —மன்மதனை எரித்த சிவபெருமானுடைய பார்யையே! |
| பாக்யதாயினி | —எல்லாப் பாக்கியங்களையும் அளிப்பவரே! |
| கலா அர்த்தமிதி சசிகலாதரி | —ஒரு கலையில் பாதி அளவு கொண்ட சந்திர கலையைச் சிரத்தில் அணிந்திருப்பவரே! |
| உபவலாரி மாயா விலாஸினி | —உபேந்திரனுடைய (அதாவது, ஸ்ரீ மஹா விஷ்ணுவினுடைய) மாயாசக்தியின் தோற்றமே! |
| ஸகலாகமநுதே | —எல்லா ஆகமங்களாலும் கொண்டாடப்பட்டவரே! |
| சராசர மயி | —சராசரங்களடங்கிய உலகையே ரூபமாகக் கொண்டவரே! |
| ஸ்ரீரகுவர ஆப்துடகு த்யாகராஜ விநுதே | —ஸ்ரீ ராமபிரானுக்கு ஆப்தனான தியாகராஜனால் கொண்டாடப் பட்டவரே! |
| மாம்பாஹி | —என்னைக் காப்பாற்றும்! |
| ஸ்வபாவ மௌ நீப்ரபாவமு | —உமக்கு இயற்கையாயுள்ள மகிமையை |
| மஹாநுபாவு ராலின பாரதிகி | —மஹானுபாவையான ஸரஸ்வதி தேவிக்கே |
| பொகட | —புகழ்வதற்கு |
| பாரமையுண்ட | —பாரமாயிருக்கும்போது, |
| நேனெந்த | —நான் எம்மாத்திரம்? |
| பளாயனக | —அனைவரும் கொண்டாடும்படி |
| சுப பலானு | —மங்களகரமான பலன்களை |
| பரமலாலனமுல | —அதிக ஆதரவுடன் |
| ஒஸகு | —கொடுத்தருளும்! |
| கர அரவிந்தமுன | —தாமரைப் புஷ்பத்தைப் போன்ற திருக் கரத்திலே |

ராம சிலுகனு பிரானபூனி —அழகிய கிளியை வேகமாகத் தரித்து
பராகுகா ஜூடராது —பராமுகத்துடன் என்னைப் பார்க்கக் கூடாது (அதாவது அருள் புரியவேண்டும்)

III

ஸ்வாமிகள், திருவையாற்றில் கோயில் கொண்டிருக்கும் தர்ம ஸம்வர்த்தனியம்மையைப்பற்றிப் பாடியுள்ள பல கீர்த்தனங்களில் இஃதொன்று. மற்றவை, 'பராசக்தி,' 'பாலே,' 'நனுகன்னதல்லி,' 'அம்பநினு,' 'அம்மதர்ஸம்வர்த்தனி' முதலானவை.

கவேர ஜா:—'கவேரன்' என்ற ராஜாவின் புதல்வியாகப் பிறந்ததனுல் காவேரி எனப் பெயர் ஏற்பட்டது. 'கவேரஜா தீரவாஸினி,' என்றும் ஒரு பாடம். இதர பாடங்கள் பிழையானவை.

சசிகலாதரி:—பார்வதி பரமசிவனுடைய உடலிற் பாதியாயிருப்பதுபற்றி அவருக்குள்ள சின்னங்கள் பார்வதிக்கும் உண்டு. ஆதலால் பிறைச் சந்திரனை யணிந்திருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது.

உபவலாரி:—ஸ்ரீ மஹாவிஷ்ணு தேவேந்திரனுக்கு உதவிபுரியும் பொருட்டு அவனுக்குத் தம்பியாக அதிதியின் வயிற்றில் தோன்றினர். அதனுல் அவருக்கு உபேந்திரன் என்றும் உபவலாரி என்றும் பெயர்கள் வழங்கலாயின. [இந்திரனுக்கு வலாரி என்று பெயர் வரக் காரணம் அவன் வலன் என்ற அஸுரனுக்கு விரோதியாயிருந்ததேயாம்.] ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் மாயா சக்தியே பார்வதி, பராசக்தி. இதனுலேயே பார்வதியை திருமாலின் ஸகோதரி என்று கூறுகின்றனா.

ஸகலாகமநுதே:—சக்தியைப்பற்றிய ஆகமங்கள் அநேகம். இவ்விடத்தில் ஆகமமென்ற சொல் அவற்றை மாத்திரம் குறிப்பிடாமல் இதர வேத சாஸ்திரங்கள் முதலியவற்றையும் குறிப்பிடுகின்றது.

ராமசிலுக:—இதற்கு ஸதா ஸ்ரீ ராமபிரான் திருநாமங்களை உச்சரித்துக்கொண்டிருக்கும் கிளி என்றும் பொருள் கூறலாம். பரமசிவனும் பார்வதியும் காசியிலிறப்பவர்கள் வலது காதிலே ராம தாரக மந்திரத்தை உபதேசித்து உய்விப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. தம் சகோதரனுடைய தாரக நாமத்தை அடிக்கடி கேட்டுக்கொண்டிருக்க விரும்பியே பார்வதி தன் கையில் ராம சப்தத்தை உச்சரிக்கும் கிளியை வைத்திருப்பதாகக் கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட ஸ்ரீராமனுடைய வழியடிமையான தம்மைக் காத்தருள வேண்டியது அவசியமும் நியாயமுமாகும் என்று ஸ்வாமிகள் குறிப்பிடுவதாகக் கொள்ளலாம்.

ஸ்ரீரகுவராப்துடகு:—"ஸ்ரீஹரிவராப்துடகு" என்றும் பாடம்.

IV

கல்யாணி ராகம் ஆதி தாளம்

பல்லவி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஸ்ாஸ்ா ; ஸ்ா-தாநீ பா ; | பமகா ; ரீ ; ஸாஸா ; | ; - ஸநிஸா ரீரீ ; | காமா | பாதா ; நீ | தாபாதாநீ |
| சி வே ; பா-......ஹி ; | மா... ; ம ; ம்பிகே ; | ; - ச்ரி...த பல ; | தா... | ...... ; ய | கி......... |
| ஸ்ாஸ்ா ; ஸ்ா-தநிஸ்நீதபம | பமகா ; ரீ ; ஸாஸா ; | ; - ஸநிஸா ரீரீ ; | காமா | பாதா ; நீ | ஸ்நிதபமபதநி |
| சி வே ; பா-.........ஹி | மா... ; ம ; ம்பிகே ; | ; - ச்ரி...த பல ; | தா... | ...... ; ய | கி........... |
| ஸ்ா-ஸ்ரிக்ரிஸ்நி-தநிஸ்நீதபம | கமபமகாரீ ; ஸாஸா ; | ; - ஸநிஸா ரீரீ ; | காமா | பாதா ; நீ | ஸ்நிதபமபதநி |
| சி-வே......பா-.........ஹி | மா......ம ; ம்பிகே ; | ; ச்ரி...த பல ; | தா... | ...... ; ய | கி........... |
| ஸ்ா-ஸ்ரிக்ரிஸ்நி-தநிஸ்நீதபம | கமபமகாரீ ; ஸாஸா ; | ; - ஸநிஸா ரீரீ ; | கமபத | நிதபம | பதநிஸ்ஸ்நிதபமபதநி |
| சி-வே......பா-.........ஹி | மா......ம ; ம்பிகே ; | ; - ச்ரி...த பல ; | தா... | ...... | யா...கி............... |
| ஸ்ா-ஸ்ரிக்ரீஸ்நி-தநிஸ்நீதபம | கமபமகாரீ ; ஸாஸா ; | ; - ஸநிஸா ரீரீ ; | க்ரிஸ்நி | த-ரிஸ்நிதப | ஸ்நிதபம-கமபதநி |
| சி-வே......பா-.........ஹி | மா......மம் ; பிகே ; | ; - ச்ரி...த பல ; | தா... | ..-ய...... | கி.......-......... |

(சிவே)

அநுபல்லவி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ; * ஸ்ாஸ்ா ; ஸ்ா-தா ; நீ ஸ்ா ஸ்நிதாபமகா ; மாபா | ; - பாதா : நீஸ்ா | ஸ்ாரீ | ஸாஸ்ா ; | ஸ்நிதாபாதாநீ |
| ; * க வே ; ர-ஜோ; த்த ர தீ...ர....வா ; வினி | ; - காத்யா ; யனி | தர்... | மஸம் ; | வர்...த்த...னி |
| ; * ஸ்ாஸ்ரிக்ரிஸ்ா-தா ; நீஸ்ா ஸ்நிதாபமகா ; மாபா | ; - பாதா ; நீஸ்ா | ஸ்ாரீ | ஸ்ாஸ்ா ; | ஸ்நிதாபாதாநீ |
| ; * க வே......ர-ஜோ; த்தர தீ...ர...வா ; வினி | ; - காத்யா : யனி | தர்... | மஸம் ; | வர்...த்த...னி |
| ; * ஸ்ாஸ்ரிக்ரீஸ்ா-தா ; நீஸ்ா ஸ்நிதாபமகா ; மாபா | ; - பாதா ; நீஸ்ா | ரீநி | தா | நீதாமாதாபாதாநீ |
| ; * க வே......ர-ஜோ; த்தர தீ...ர...வா ; வினி | ; - காத்யா ; யனி | தர்... | ம | ஸம்வர்...த்த...னி |
| ; * ஸ்ாஸ்ரிக்ரிஸ்ா-தா ; நீஸ்ா ஸ்நிதாபமகா ; மாபா | : - பாதா ; நீஸ்ா | ஸ்ரிக்ரி | ஸ்-நிஸ்ரிஸ்நி | தநிஸநித-கமபதநி |
| ; * க வே......ர-ஜோ; த்தர தீ...ர...வா ; வினி | ; - காத்யா ; யனி | தர்... | ம-ஸம்...... | வர்....-த்த...னி |

(சிவே)

சரணம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பமபா ; பாபாபாபா ; பதநீதாபா | பமகாகாரீ | ரீ நி ; ஸா | ரீகாமாரீ | காமா ; பா | தா ; நீஸ்ா |
| ச ரா ; ச ர ம யி ; க...ரா...ர | விந்...தமு | ன ரா ; ம | சிலுகனி | பி ரா ; ன | பூ ;...னி |
| பாபா ; பா-தா, நீ, ஸ்ா | ஸ்நிதாபாதா ; நீஸ்ா ; | ஸ்ாரீ நீதாமாதா | நீஸ்ா | ஸ்ாஸ்நிதாபா | மாபாதாநீ |
| ப ரா ; கு-க, ஜூ, ட | ரா...து ஸ்ரீ ; ரகு ; | வ ரா ப்துடகு | த்யா... | க ரா......ஜ | விநுதே... |
| பாபா ; பா-தா, நீ, ஸ்ா | ஸ்நிதாபாதா ; நீஸ்ா ; | தாக்ரீ நீதாமா | தநிஸ்ா | ஸ்ாஸ்நிதாபா | ஸ்நிதபமபதநி |
| ப ரா ; கு-க, ஜூ, ட | ரா...து ஸ்ரீ ; ரகு ; | வ ரா ப்துடகு | த்யா... | க ரா......ஜ | வி.நு.தே... |

(சிவே)


வருங்கால பலன்



புராதன சாஸ்திர ஆராய்ச்சியின் பேரில் அனுபவம் பெற்ற இருவர் கலந்து தெளிவுபடக் கூறுவதாம்.



பண்டிட் M. R. K. மூர்த்தி, ஜோதிஷ கலா வல்லபர்
பண்டிட் E. S. K. சுவாமி, ஜோதிஷ தத்வக்கியானி

ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 1. காரணமுடன கேள்வி 1-க்கு ரூ. 1. ஒரு வருஷ மாதவாரி பலன் ரூ. 2. ஆயுள்வரை பொதுப்பலன் ரூ. 10. ஜாதகமாவது பிறந்த நேரம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.

ஜோதிட கழகம்" 38, தேவராஜமுதலி தெரு, பி. டி. மதராஸ்.



தியாகராஜா தங்க நகைகள்

அசல் சவரன் பொன்னுக்கு ஒப்பானது. அநேக கண் காக்ஷிகளில் தங்க மெடல்கள் பரிசு பெற்றது. தங்கத்துக்குக் கனத்தில் குறைந்தாலும் குணத்தில் மேற்பட்டது!

நாகரீகத்திற்கேற்ற நானுவிதக் கலர் மாலைகளும், வளையல், செயின், ஒட்டியாணம் முதலிய நகைகளும் நயமாய்க் கிடைக்கும். கேட்லாக் இனும்.

ஸ்ரீ தியாகராஜா மெட்டல் ஒர்க்ஸ்,
77, சைனு பஜார் ரோட், மதராஸ்.

**நமது தொடர் கதை**




## அல்லது

# கள்வனைக் காதலித்த காரிகை

[திருச்சி ஸ்ரீமான் கே. வி. எஸ் வாஸ் பி ஏ, (ஆனர்ஸ்) எழுதியது.]

### முன் கதைச் சுருக்கம்.

**பாஸ்கரம் பிரபு** விஜயபுரியில் மிகுந்த செல்வவந்தர். அவருக்கு, **கமலா, ஹிமாவதி** என்ற இரு பெண்களுண்டு. மூத்தவளான கமலாவுக்கும்

**ஜயந்தனுக்கும்** நடைபெறப்போகும் விவாகத்தையொட்டி பாஸ்கரம் பிரபு நகைகளை தமது "மன்மத விலாஸ" மாளிகையில் வைத்திருக்கிறார். துப்பறியும் இலாகா போலீஸ் கமிஷனர்

**துளஸிதாஸ்** மேற்பார்வையிலேயே

**கரும்பூதம்** பாஸ்கரம் பிரபுவைப்போல் நடித்து மன்மத விலாசத்திலிருந்து ஒரு வைரமாலையைக் கவர்ந்து செல்லுகிறான். கரும்பூதத்தின் செயல்கள் ஒரு மர்மப் பெண்ணிற்குத் தெரிந்துவிடுகிறது. அவள் டெலிபோனில் கரும்பூதத்துடன் பேசுகிறாள். டெலிபோன் மாதின் வேண்டுகோள்படி கரும்பூதம் தான் கவர்ந்து வந்த மாலையை பாஸ்கரம் பிரபுவின் வீட்டிலேயே மறுபடியும் கொண்டுபோய் வைத்துவிடுகிறான். பாஸ்கரம் பிரபுவின குமாரியின் திருமணத்தையொட்டிப் பெரிய விருந்தொன்று நடந்தது. அதில்,

**சுதர்சனம் பிரபு**, அவரது சகோதரி,

**நளினம்**, பாஸ்கரம் பிரபு, துளஸிதாஸ் முதலியோர்கரும்பூதத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கையில் சுதர்சனர் தம் வீட்டிலிருந்து அவன் களவாடிவிட்டால் மாதர் மறுமண சகாயசங்கத்திற்கு ரூ. 50,000 நன்கொடையளிப்பதாகச் சொல்லுகிறார். அன்றிரவு டெலிபோன் பெண் கரும்பூதத்தையழைத்து தான் கரும்பூதமெழுதியதுபோல் சுதர்சனம் பிரபுவிற்கு அவர் வீட்டில் ஒரு குறிப்பிட்ட தினத்தில் கொள்ளையடிக்க வரப்போவதாகக் கடிதமெழுதி விட்டதாகச்சொல்லி அதன்படியே நடக்கவேண்டுமென்று சொல்லுகிறாள். மேற்படி கடிதம் சுதர்சனம் பிரபுவிற்குக் கிடைத்தவுடன் அவர் தன் மின்சாரத் தொழிற்சாலையின் உதவியால் தன் வீட்டிற்குள் ஒருவரும் நுழைய முடியாத ஏற்பாடுகள் செய்கிறார். ஆயினும் குறிப்பிட்ட தின இரவில் கரும்பூதம் அங்கு தோன்றி அங்கிருந்த பிரபுக்கள் முன்பாகவே சில தஸ்தாவேஜிகளை எடுத்துச் செல்லுகிறான். அன்றிரவு வீட்டிற்குச் சென்றதும் தன சுய சரிதையைப் பற்றி நினைக்கிறான். இதனால் அவனுக்கு மன அமைதி யேற்படவில்லை. ஆகையால் திடுக்கிடத்தக்க ஏதாவது ஒரு காரியத்தைச் செய்ய வேண்டுமென்று நினைத்து துப்பறியும் துளஸிதாஸ் வீட்டிற்குச் சென்று அவரைத் தூக்கத்திலிருந்து எழுப்புகிறான். அவர் மிகுந்த கலவர மடைகிறார். கரும்பூதம் சச்சிதானந்தர் என்ற பிரபுவின் கொலை மர்மங்களை அவருக்குச் சொல்லுகிறான். அதற்குக் காமாக்ஷியென்ற விலைமாது காரணமில்லையென்றும், அது சம்பந்தமாக, தான்

**அட்வகேட் சிவசுப்ரமணியத்தின்** வீட்டிலிருந்து கவர்ந்து வந்த கடிதங்களையும் கரும்பூதம் காட்டுகிறான். துளஸிதாஸ் அக்கடிதங்களை சிவசுப்ரமணியன வீட்டிலேயே வைத்துவிடும்படியும் மேற்கொண்டுதான நடவடிக்கை எடுத்துக்கொள்வதாயும் சொல்லுகிறார். அதன்படியே மறுபடி சென்ற கரும்பூதம் சிவசுப்ரமணியத்தினிடம் அகப்பட்டுக்கொள்ளுகிறான். ஆனால் டெலிபோனில் பேசும் மர்மப் பெண் திடீரென அங்கு வந்து கரும்பூதத்தைக் காப்பாற்றுகிறாள். டெலிபோன மாது தான் யாரெனபதை வெளிக்காட்டாமல் சென்றுவிடுகிறாள்.

ஒருநாள் கரும்பூதம் இரவில் உலவச் செல்லுகையில் பாதையில் ஹிமாவதி மூர்ச்சையாகக் கிடப்பதைப் பார்க்கிறான். அவளை அருகிலிருந்த தடாகத்திற்குத் தூக்கிச் சென்று மூர்ச்சை தெளிவிக்கிறான்.

தடாகக் கரையையடைந்ததும் நமது கரும்பூதம் கட்டழகி ஹிமாவைப் புற்றரையின் மீது மெள்ளப் படுக்கவைத்தான். தண்ணீரெடுக்கத் தடாகத்திலிறங்குமுன் அவனுடைய மனதில் மற்றொரு யோசனை தோன்றியது. "கன்னி ஹிமாவதி கண்விழித்தெழுந்திருக்கையில், நான் இந்தக்கோலத்துடனிருப்பது உசிதமானதல்ல! அவள் என்னைப்பார்த்துப் பயந்து மறுபடியும் மூர்ச்சையானாலும் ஆகிவிடலாம். தவிர இந்த வேடத்துடன் நான் அவளுடன் நெருங்கிப் பழகவும்முடியாது!" என்று எண்ணிக்கொண்டே நமது கரும்பூதம் கருப்பு அங்கிகளைக் கழற்றித் தோற்பையில் வைத்து மூடிவிட்டுச் சில வினாடிகளுக்குள் கதாசிரியன் சரத்சந்திரனாகமாறினான். பிறகு அவன் தனதுகைக் குட்டையைத் தண்ணீரில் நனைத்துக் கொணர்ந்து அவளுடைய முகத்தைத் துடைத்தான். "ஹிமா! சகோதரி! கண்ணை விழித்துப்பார்! இன்னும் உனக்குத் தெளிவு ஏற்படவில்லையா?" என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருந்தான்.

சில நிமிடங்களுக்குப் பின் மெதுவாகக் கண்களைத்திறந்து கொண்ட ஹிமாவதி சரத்சந்திரனின் முகத்தைப் பார்த்தாள். மீண்டும் கலவரமடைந்தவளைப்போல் அவனைத்தன்னிரு கரங்களினாலும் இறுகத் தழுவிக்கொண்டாள். "சகோதரா! ஏன் இன்னமும் பயப்படுகின்றாய்? நான் யாரென்பது உனக்குத் தெரியவில்லையா? உங்களெல்லோருடைய புகழ்ச்சிக்கும் பாத்திரமாகியிருக்கின்ற சரத்சந்திரனல்லவா நான்?" என்று சொல்லிக்கொண்டே அவளுடைய முகத்தைத் தடவிக் கொடுத்தான் நமது இளைஞன். சரத்சந்திரன் என்ற பெயர் செல்வி ஹிமாவிடம் மின்சார சக்தியைப்போல் வேலை செய்தது. அவள் உறக்கத்திலிருந்து எழுந்தவளைப்போல் சட்டென்று கண் விழித்துப் பார்த்தாள். கரும்பூதமும் அதே சமயத்தில் அவளைக் கூர்ந்து நோக்கினான். இருவருடைய கண்களும் சில வினாடிகள்வரையில் கலந்துறையாடின. ஆனால், நாணம் அவளைத் தலைகுனியச் செய்துவிட்டது. கன்னியின் சரீரம் குங்குமத்தைப்போல் சரேலெனச் சிவந்தது. அவள் ஆபத்தில் உதவி செய்த ஆசிரியனுக்கு நன்றி கூறவேண்டுமென்று அவாவினாள். வாய் திறந்து பேசுவதற்கு அவள் முயற்சி செய்தும் பார்த்தாள். ஆனால், அவளுடைய உதடுகள் அசைந்தனவேயன்றி வார்த்தைகள் வெளி வர மறுத்துவிட்டன. வெட்கம் தொண்டையைப் பலமாக அடைத்துவிட்டது.

முற்றும் தெளிவு பெறாத மங்கை மீண்டும் அவனுடைய மார்பகத்தில் சாய்ந்தாள். ஆசிரியன் தன்னையும் தானிருக்கும் உலகையும் அடியோடு மறந்து அழகியை ஆலிங்கனம் செய்து கொண்டான். ஆரம்பத்திலிருந்த கூச்சமும் அச்சமும் அவனிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு போய்விட்டன. பெண்ணினத்தைக் கண்டு கொஞ்சமும் பேதலிக்காத அவனுடைய மனம் இந்த சந்தர்ப்பத்தில் மெழுகைப்போல் இளகலாயிற்று. இவள் இப்பொழுதிருக்கும் நிலைமையிலேயே எப்பொழுதுமிருந்தால்

**மனோரஞ்சனி**

இது ஒரு மாதாந்த நாவல் சஞ்சிகை. 1937 ஜனவரி முதல் சிம்சாரகன்னியாசி என்னும் நாவல் தொடர்ச்சியாய் வெளிவரும். இதன் வருட சந்தா ரூ. 1-8. மாதிரிக்காபி இனாம்!

எம். எஸ். ராமுலு கம்பெனி.
286, எஸ்பிளனேட், மதராஸ்.



"ஹிமாவதி! அனிச்சம்பூவும் உருத்துமோவென்று நினைக்கத்தகுந்த மிருதுவான சரீரமுடைய நீ சைகிள் சவாரி செய்வது கொஞ்சமும் விரும்பத்தக்கதல்ல......" என்றான் சரத்சந்திரன்

எவ்வளவு இன்பமாயிருக்கும் என்று கரும்பூதம் நினைத்தான். அவளுடைய நெற்றியையும் கன்னங்களையும் தனது கரத்தினால் மெதுவாகத் தடவிக் கொடுத்தான். தானும் ஹிமாவதியும் ஒரு தனியுலகத்திலிருப்பதாகவே அவன் நினைத்தான்.

சில நிமிடங்களுக்குப் பின் கன்னி ஹிமாவதி கரும்பூதத்தின் கட்டிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டாள். அவளுடைய அழகில் மையலுற்றிருந்த ஆசிரியன் சற்று பின்னால் நகர்ந்துகொண்டான். மேலும் சில நிமிடங்கள் வரையில் அவர்களிருவரும் மௌனம் சாதித்தார்கள். ஆனால், அவர்களுடைய கண்கள் அடிக்கடி ஒன்றை ஒன்று தழுவிக்கட்டி முத்தம் கொடுத்துக் கொண்டிருந்தன. ஆசிரியனுடைய மனம் ஆனந்தத்தில் பொங்கிக்கொண்டிருந்தது. அவன் அணங்கிடம் என்னென்னவெல்லாமோ பேசவேண்டுமென்று நினைத்தான். ஆனால், அவனால் பேசமுடியவில்லை. எப்படி சம்பாஷணையை முதலில் துவக்குவதென்பதே அவனுக்குப் பெருஞ் சந்தேகமாயிருந்தது.

"ஹிமா! இப்பொழுது மயக்கம் நன்றாகத் தெளிந்துவிட்டதா?" என்று கடைசியில் மனதை ஒருவாறு திடப்படுத்திக்கொண்டு சம்பாஷணையைத் துவக்கினான் சரத்சந்திரன்.

"நண்பரே! தங்களுக்கு நான் மிகுந்த சிரமத்தைக் கொடுத்துவிட்டேன். அதற்காக நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும். உங்களுடைய அன்பிற்கும் உபசரணைக்கும் நான் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்!" என்று நாணத்தினால் தலைகவிழ்ந்த வண்ணம் கூறினாள் ஹிமாவதி.

"ஹிமா! தயவு செய்து நீ இவ்விதம் பேசக்கூடாது. உன்னுடைய நன்றியறிதலுக்குப் பாத்திரமாகக்கூடிய செயலொன்றையும் நான் செய்துவிடவில்லை. சாதாரணமாக மனிதருக்கு மனிதர் செய்யவேண்டிய கடமையைத்தான் நானும் செய்தேன். அது கிடக்கட்டும். இந்நேரத்தில் நீ என் தனிமையாக இங்கு வந்தாய்? உனக்கு இடையில் என்ன நேர்ந்தது? உடம்பில் காயமெதுவேனும் ஏற்பட்டுவிட்டதா?" என்று இனிமையான குரலில் அன்பைச் சொரிந்து கேட்டான் சரத்சந்திரன்.

"தெய்வாதீனமாகக் காயமேற்படவில்லை. வெண்ணிலவில் இராப்பொழுது மனோகரமாயிருந்தமையால், கொஞ்சதூரம்வரையில் சைகிளில் சவாரி செய்துவிட்டு வரலாமென்று கிளம்பினேன். வழியில் எனது சைகிள் ஒரு கல்லின்மீது மோதி விபத்தை விளைவித்துவிட்டது!" என்று குயில்போல் கூறினாள் செல்வி ஹிமாவதி.

"ஹிமாவதி! அனிச்சம்பூவும் உருத்துமோவென்று நினைக்கத் தகுந்த மிருதுவான சரீரமுடைய நீ, சைகிள் சவாரி செய்வது கொஞ்சமும் விரும்பத் தகுந்ததல்ல. அதிலும், இராக்காலத்திலோ கட்டாயமாக சைகிளில் கிளம்பவே கூடாது. நமது ரஸ்தாக்கள் மிகவும் அபாயகரமானவைகள். அவைகளில் செல்லும்பொழுது மிகுந்த எச்சரிக்கையுடனிருக்க வேண்டியது அவசியமாக இருக்கின்றது. நான் தற்செயலாக இங்கு வந்தது நல்லதாகிவிட்டது! நான் வருவதற்கு முன் வேறு எவராவது வந்திருந்தால் உன்னுடைய கதி யாதாகியிருக்குமோவென்பது இப்பொழுது எனக்கு அச்சத்தைக் கொடுக்கின்றது. கடந்தவைகளைப்பற்றிப் பேசி என்ன பயன்? இனிமேல் நீ மிகுந்த ஜாக்கிரதையுடனிருத்தல் வேண்டும்! உலகத்தின் இயல்பை இளஞ் சிறுமியான நீ அறியமாட்டாய்!" என்று என்னென்னவோ பேசலானான் சரத்சந்திரன்.

"நண்பரே! நாழிகையாகிவிட்டது. நான் மாளிகைக்குத் திரும்பவேண்டும். என்னுடைய பெற்றோர்கள் நான் திரும்பி வாராததைக் கண்டு மனக்கிலேசத்துடனிருப்பார்கள். தயவுசெய்து நீங்களும் என்னுடன் வரவேண்டும்!" என்று கடைசியாகக் கூறினாள் ஹிமாவதி.

'சரி! வா, புறப்படுவோம்! என்று சொல்லி எழுந்தான் சரத்சந்திரன். செல்வி ஹிமாவதியும் அவனுடைய கரங்களைப் பற்றிக்கொண்டு மெதுவாக எழுந்தாள். இருவரும் தோட்டத்தை விட்டு ரஸ்தாவையடைந்தார்கள். கொஞ்சதூரம் வரையில் கால்நடையாகச் சென்றதும் எதிராக ஓர் வண்டி வந்ததை அவர்கள் கவனித்தனர். சரத்சந்திரன் அந்த வண்டியை மன்மத விலாசத்திற்குச் செல்லுவதற்காக அமர்த்தினான். இருவரும் அதில் ஏறிக்கொண்டவுடன் வண்டி காற்றினும் விசையாகப் பறந்து சென்றது. அது பக்கத்தில் அசையும்பொழுதெல்லாம் செல்வி ஹிமாவதி சரத்சந்திரனின் மார்பகத்தில் சாய்ந்தாள். அவன் அவளை அன்போடு அணைத்துக் கொண்டு மெய்மறந்தான். இரண்டொரு முறை அவனுடைய உதடுகளும் கன்னியின் கன்னத்தில் உராய்ந்தன. அவர்கள் மாளிகையை அடையும்வரையில் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. இருவரையும் வெட்கம் வசப்படுத்திக் கொண்டிருந்தது.

மன்மத விலாசமாளிகையில் ஒரே ஒரு விளக்கைத் தவிர வேறு வெளிச்சங்களில்லை. மாளிகையின் முன்புறத்தில் ஒரு பாராக்காரன் அயர்ந்து நித்திரை செய்துகொண்டிருந்தான். ஹிமாவதி அவனை எழுப்பி, பிரபுவும் சீமாட்டியும் என்ன செய்கின்றார்களென்று வினவினாள். அவர்களிருவரும் படுக்கையறைக்குச் சென்றுவிட்டார்களென்று பாராக்காரன் பதிலளிக்கவே, சகோதரி! அவர்களை உறக்கத்தில் தொந்திரவு செய்யவேண்டாம். நான் நாளைக்காலையில் வருகின்றேன். எல்லா விஷயங்களையும் பின்னால் பேசிக்கொள்ளலாம்!" என்றான் சரத்சந்திரன்.

"காலையில் நிச்சயமாக வருவீர்களா?" என்று கேட்டாள் ஹிமாவதி. "ஓ, கட்டாயமாக வருகின்றேன்!" என்று சொல்லிவிட்டு விடைபெற்றுச் சென்றான் சரத்சந்திரன்.

நமது ஆசிரியன் தனது மாளிகையை அடைந்தபொழுது இரவு ஒன்றரை மணி சுமாரிருக்கும். அவன் மாலை உடுப்புகளைக் கழற்றி யெறிந்துவிட்டு மெல்லிய அங்கியொன்றையணிந்துகொண்டு படுக்கையில் படுத்தான். சில நிமிடங்களுக்குப்பின் டெலிபோன் மணி கிணுகிணுவென்று அடித்தது: அதைக் காதில் எடுத்து வைத்

டாக்டர் ஜம்மி வெங்கடாமணய்யாவின்

லிவர்க்யூர்

குழந்தைகள் ஈரல், குலைகட்டிகளுக்கு நிகரற்றது என்று டாக்டர்களாலும், பெற்றோர்களாலும் போற்றப்பட்டது.

அநேக கண்காட்சிகளில் தங்கமெடல்களும், நற்சாட்சிப் பத்திரங்களும் பெற்றது.

ரங்கூன் ஏஜெண்டு:—ரிலையன்ஸ் பார்மசி, 125-12, பின்னட் வீதி—ரங்கூன்.

துக்கொண்டு "ஹலோ! யாரது ஹிமாவதியா?" என்முன் ஆசிரியன். தான் மாளிகையை அடைந்து விட்டோமாவென்பதை விசாரிப்பதற்காகவே அவள் டெலிபோனில் அழைக்கின்ருளென்று சாத்சந்திரன் முதலில் எண்ணினன். ஆனல், டெலிபோனின் மற்ருெருபுறத்திலிருந்து மலையாளப் பெண்ணின் குரல் சிரிப்பில் ஒலிக்கவே, தான் முற்றிலும் ஏமாந்து போய்விட்டதாக மறு நிமிடமே அவன் அறிந்துகொண்டு விட்டான்.

"ஹிமாவதி! ஊம்! உலகமே உங்களுக்கு ஹிமாவதியாகத் தான் இனித் தோன்றும்" என்ருள் மர்மப்பெண்.

சாத்சந்திரன் என்ன பதிலளிப்பதென்று தெரியாமல் மௌனம் சாதித்தான்.

"என், வாய்திறந்து பேசுவதற்கு வெட்கமாக இருக்கின்றதோ? குளக்கரையில் இந்த வெட்கத்தையும் நாணத்தையும் காணேமே!" என்று ஏளனம் செய்யும் குரலில் மறுபடியும் பேசினள் டெலிபோன் கன்னி.

"சகோதரி! நீ என்னைப் பின் தொடர்ந்து வந்திருப்பது எனக்குத் தெரியாது! தெரிந்திருந்தால்......!" என்று மேலும் ஏதோ சொல்லுவதற்கு ஆரம்பித்தான் சாத்சந்திரன்.

"தெரிந்திருந்தால்? ஊம், சொல்லுங்களேன்! என் பேசாமலிருக்கின்றீர்கள்? தெரிந்திருந்தால் அவளிடம் அப்படி நடந்துகொண்டிருக்க மாட்டீர்களோ?" என்று கேட்டாள் மர்மப்பெண்.

அவளுடைய குரலில் பொருமை த்வனித்தது. அதைக் கண்டு அஞ்சினன் ஆசிரியன்.

"சகோதரி! என்மீது நீ அபாண்டமான பழியைச் சுமத்துகின்ருய். இதற்கு நான் ரொம்பவும் விசனிக்கின்றேன்" என்று கடைசியாகப் பதிலளித்தான் கரும்பூதம். அவனுடைய மனதில் பலவிதமான யோசனைகள் இடையில் தோன்றலாயின. பொருமையின் காரணமாக அவள் தன்னைப் போலீசாரிடம் காட்டிக் கொடுத்து விடுவாளோவென்று கூட அவன் பயந்தான். டெலிபோன் மாது மறுபடியும் பேசவாரம்பித்து,

"சபாஷ்! கரும்பூதம், சபாஷ்!" என்றுமட்டும் சொல்லி டெலிபோனைப் பொத்தென்று கீழே வைத்தாள் மர்மப்பெண். மறுநிமிடம் அதனுடைய பிணைப்பும் நீங்கிவிட்டது.

## அத்தியாயம்......7
## ரமணீபுரப் பிரயாணம்

இரவு வெகுநேரம் வரையில் கண்விழித்துக்கொண்டிருந்த கரும்பூதம் மறுநாட் காலை படுக்கையை விட்டெழுந்தபொழுது மணி ஒன்பதிற்கு மேலாகிவிட்டது. முகுந்தன் அறையில் நுழைந்து அன்றைய தினசரிப் பத்திரிகையொன்றை மேஜையின் மீது வைத்தான்.

"முகுந்தா! வெந்நீர் போட்டிருக்கின்ருயா? இன்று நான் தைலஸ்நானம் செய்ய விரும்புகின்றேன்!" என்ருன் சாத்சந்திரன்.

முகுந்தன் வெந்நீர் தயாராக இருக்கின்றதென்றுகூறி, "சரி! அதை ஸ்நான அறையில் கொண்டுபோய் வை! நான் இதோ வந்துவிட்டேன்!" என்று சொல்லி, அவனை வெளியிலனுப்பிவிட்டு சாத்சந்திரன் பத்திரிகையைப் புரட்டிப் பார்த்தான். அதில் தன்னுடைய பெயர் கொட்டையெழுத்துக்களில் பிரசுரம் செய்யப்பட்டிருப்பதைக் கண்டதே அவனுக்கு ஆச்சர்யமுண்டாயிற்று. அந்தச் செய்தியைப் பின்வருமாறு படித்தான் சாத்சந்திரன்:—

## கரும்பூதத்தின் பெருந்தன்மை!

### பத்திரிகாலயத்தில் பிரசன்னம்

### உதவி ஆசிரியர்களுடன் உருக்கமான பேச்சு

விஜயபுரி, 20—

நேற்றிரவு சுமார் பதினென்றரை மணிக்கு நமது பத்திரிகைக் குழாமில் வியப்பை விளைவிக்கத்தகுந்த சம்பவமொன்று நிகழ்ந்தது. அதாவது அச்சத்தையும் ஆச்சர்யத்தையும் கொடுக்கும் அநேகக் களவுகளுக்குக் காரணமாகவுள்ள கரும்பூதம் நமது குழாமில் பிரசன்னமாகி நீண்ட நேரம் வரையில் உதவி ஆசிரியர்களுடன் சம்பாஷணை செய்து கொண்டிருந்தான்.

இராக் காலங்களில் கடைசிச் செய்திகளைக் கவனிப்பதற்காக இரண்டு உதவி ஆசிரியர்கள் குழாமிலிருப்பதுவழக்கம். அதைப்போல் நேற்றிரவு திரு ஸ்ரீநிவாஸனும், திரு சுந்தரேசனும் காரியாலயத்திலிருந்தார்கள். சுமார் பதினேரு மணிக்கு கரும்பூதம், அவர்கள் முன் பாகத் திடீரென்று பிரசன்னமானன். அவன் வாசற்புறத்திலுள்ள காவலாளிகளையெல்லாம் கடந்துகொண்டு அறைக்குள் எப்படி வந்தான் என்னும் விஷயம் இன்னும் மர்மமாகவேயிருக்கின்றது. அவனைக்கண்டதும் நமது துணையாசிரியர்கள் கலவரமடைந்தார்கள். அதைக் குறிப்பினலுணர்ந்துகொண்ட கரும்பூதம், "நண்பர்களே! என்னிடம் எதற்காக நீங்கள் பயப்படுகின்றீர்கள்? நான் உங்களை இம்சிக்கவோ அல்லது குழாமைக்




குழந்தைகளின் மிருதுவான சருமத்திற்கு

சந்தண வாசனையுடன் நாம கலகசம் அவசியமான ஆயிலகள் ரவமரிலும் ஆரோக்கிய மூட்டும் சத்துக்களிருக்கின்றன மைசூர் சந்தண ஸோப்பு முக்கியமாக குழந்தைகளின் மிருதுவான சருமத்திற்கு ஏற்றது. இந்தியத் தாய்மார்களில் பலவாயிரக் கணக்கான வர்கள் இதை அனுபவ பூர்வமாக அறிந்திருக்கின்றனர்.

மைசூர் சந்தண ஸோப்பு




கவர்ன்மெண்ட் ஸோப்பு தொழிற்சாலை, பெங்களூர்

நீரிழிவு, மதுமேகம்

முதலிய சகல நீர் ரோகங்களுக்கு

பண்டிட் ஸ்வாமி ஸ்ரீநிவாஸய்யங்காரின்

மயூரகாய கற்பம்

ஒரு தெய்வீக சஞ்சீவி!!

இதுவரை இதன் நன்மையைப் பிரபுக்கள் மட்டுமே பெற்று வந்தனர். இப்போது சகல ஜனங்களும் பயன்பெறவேண்டி 20 டோஸ் கொண்ட பொட்டணம் ரூ. 15-8-0 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. 10 நாளைக்கு வரும். அதற்குள் கண்கூடாகக் குணங்காணும். பிரபல இங்கிலீஷ் டாக்டர்களுடையவும், குணமடைந்த பலருடையவும் உயர்ந்த உண்மை அபிப்பிராயங்கள் கொண்ட இலவசப் புத்தகத்திற்கு

இன்றே எழுதுங்கள்.

ஸ்கந்தாசிரமம்

தபால் பெட்டி, 759 : : எழும்பூர், மதராஸ்.

ஆராய்ச்சி பூர்வமான

நவீன மருந்துகள்

மேத்தாஸ் காப் மிக்சர் : எல்லாவுகையரான இருமல் ரோகங்களுக்கும், க்ஷயரோகத்திற்கும் கைகண்ட ஒளஷதம்.

விலை புட்டி 1-க்கு ரூ. 2.

கே. எஸ். மேத்தா & கம்பெனி,

பிரபல மருந்து வியாபாரிகள்.

234, சைனு பஜார் — மதராஸ்.

களவாடவோ வாவில்லை! நேற்று நடைபெற்ற தொழிலாளர் மகாநாட்டுத் தீர்மானங்களைத் தெரிந்துகொள்வதற்காகவே இங்கு வந்திருக்கிறேன். ஆகையால், மனதைத் திடப்படுத்திக்கொண்டு அமருங்கள்!'' என்று சொல்லிவிட்டு ஓர் ஆசனத்தில் அமர்ந்தான். பிறகு, அவன் நம் நாட்டுக் கைத்தொழில்களைப்பற்றியும் ஏழை மக்களின் பரிதாபகரமான நிலைமையைப் பற்றியும் உதவி ஆசிரியர்களோடு நீண்ட நேரம்வரையில் உருக்கமாகப் பேசிக்கொண்டிருந்தான். கடைசியில் இரண்டு நூறு ரூபாய் நோட்டுகளை யெடுத்துக்கொடுத்து, "நண்பர்களே! இதை உங்களுடைய ஆசிரியரிடமளித்து நாளை மாலையில் ஏழை ஜனங்களுக்கு அன்னதானம் செய்யுமாறு கூறுங்கள்! நான் போய் வருகிறேன். வந்தனம்!'' என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

கரும்பூதத்தின் பெருந்தன்மையைப் பற்றியும் அவனுடைய தயாள குணத்தைப் பற்றியும் பலமுறை நமது பத்திரிகையில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. நேற்றிரவு நடந்த சம்பவம் அவனுடைய உயர்ந்த குணத்திற்கு மற்றுமோர் உதாரணமாகும். அவன் கடைசிவரையில் மிகுந்த மரியாதையுடனும் கௌரவத்துடனும் நடந்துகொண்டானென்று நமது துணையாசிரியர்கள் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றார்கள். அநேகமாக பாரத நாட்டின் பொருளாதார நிலைமையைப் பற்றி, அவன் சில வியாசங்களை நமது பத்திரிகைக்கு அனுப்பக்கூடுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது!''

மேற்படி செய்தியைப் படித்து முடித்ததும் கரும்பூதம் கோபத்துடன் நெறநெற வென்று பற்களைக் கடித்துக்கொண்டான். "இந்தப் பயல்களுக்கு நான் புத்தி புகட்ட வேண்டும். இன்றேல் இவர்கள் வாய்க்குவந்தபடி பிதற்றிக்கொண்டுதானிருப்பார்கள். நேற்றிரவு நான் நகரத்தின் எல்லைப்புறத்திலல்லவா ஹிமாவதியுடனிருந்தேன்? அப்படியிருக்க நான் பத்திரிகைக் குழாமிற்கு வந்ததாயும், உதவி ஆசிரியர்களுடன் உருக்கமாகப் பேசிக்கொண்டிருந்ததாயும் இந்தப் பத்திரிகை சொல்லுவதன் தாத்பர்யமென்ன? ஒருக்கால் என்னைப்போல் மற்றொரு கரும்பூதம் இவ்வூரிலிருக்கின்றானா அல்லது ஒருக்கால் இதுதிபவனத்திற்கு வந்திருந்த கருப்பண்ணனே என்னைப்போல் நேற்றிரவு நடித்திருக்கக்கூடுமா? இது முடியாது. அவனுக்கு ஒருபொழுதும் இவ்வளவு தூரம் தைரியமேற்பட்டிருக்காது. ஆதிவாசற்புறத்தில் பல காவலாளிகளிருந்தார்களென்றும், கரும்பூதம் அவர்களையெல்லாம் ஏமாற்றி விட்டானென்றும் சொல்லப்பட்டிருப்பதைப் பார்த்தால், இது பித்தலாட்டக் கதைதானென்பது தெளிவாகப் புலப்படுகின்றது. பத்திரிகைக்காரர்கள், பொது ஜனங்களுக்கு பிரமிப்பையளிக்கத் தகுந்த செய்திகளைச் சிருஷ்டி செய்து கொடுப்பதற்காக எதையும் செய்யக் கூடியவர்கள் ஆகையால், இந்தப் பத்திரிகையின் ஆசிரியர் தமது தொழிலில் அபிவிருத்தியைக் கோரியே என்னைப் பற்றி ஒரு பொய்க் கதையைக் கட்டிவிட்டிருக்க வேண்டும். எனக்கு ஏழை மக்களிடமும், தொழிலாளிகளிடமும் அதிகமான ஆதரவிருப்பதாக ஊரார் சொல்லிக் கொள்ளுகின்றனர். இந்த வதந்தியை இப்பத்திரிகையின் ஆசிரியர் தமக்குச் சாதகமாக எடுத்துக்கொண்டு விட்டார்போலும்! சபாஷ்! இவர் என்னைப்பற்றி அவதூறாகப் பேசவில்லையென்பது வாஸ்தவமே. எனினும், மனம் சென்றபடி இக்கில் செய்திகளைச் சிருஷ்டிக்க நான் இவரை இனி அனுமதிக்கக் கூடாது. ஏனெனில், இவர் எழுதும் விஷயங்கள் சில சந்தர்ப்பங்களில் எனக்குப் பாதகமாக இருந்தாலும் இருக்கலாம்!''

என்றிவ்வாறு எண்ணிக்கொண்டே சரத்சந்திரன் பத்திரிகையை மூடிவைத்துவிட்டு காலைக் கடன்களைக் கழிக்கக் கிளம்பினான். ஸ்நான அறையில் வெந்நீருடன் தயாராக இருந்த முகுந்தன் ஆசிரியனைக் கண்டதும், "மாஸ்டர்! நீங்கள் தைல ஸ்நானத்தை நாளை வரையில் ஒத்தி வைத்துக்கொண்டாலென்ன?'' என்று பணிவாகக் கேட்டான்.

"ஏன், முகுந்தா! கடையிலிருந்து தைலம் வாங்கி வர மறந்துவிட்டாயா? அப்படியானால் சரி!'' என்று எப்பொழுதும்போல் பக்ஷமாகப் பதிலளித்தான் சரத்சந்திரன்.

"இல்லை மாஸ்டர்! தைலம் தயாராக இருக்கின்றது. இன்று பிற்பகல் ரமணீபுரத்திற்குப் போகவேண்டுமென்று சொல்லிக்கொண்டிருந்தீர்களல்லவா? ஆகையால்தான் தைலஸ்நானம் செய்துவிட்டுப் பிரயாணத்தைத் துவக்குவது உசிதமானதல்லவென்று நினைத்துக் கூறினேன்!'' என்றான் பணியாள் முகுந்தன்.

"அடடா! கௌரீஸ்வரரின் அழைப்பை நான் அடியோடு மறந்துவிட்டேனே! விருந்து பிற்பகல் 1-15 மணிக்கல்லவா? இப்பொழுது மணி என்ன இருக்கும்?'' என்று கேட்டான் சரத்சந்திரன்.

"இப்பொழுது ஒன்பதரை மணியாகின்றது. சீக்கிரமாக ஸ்நானத்தைச் செய்து கிளம்பினால் 10-15 மணிக்குக் காரில் சென்றுவிடலாம்!'' என்றான் முகுந்தன்.

"ஆம்! அப்படிப் புறப்பட்டால் விருந்திற்கு அரை மணி முன்னதாகவே ரமணீபுரத்திற்குப் போய்ச் சேர்ந்து விடலாம். முகுந்தா, நீ சீக்கிரமாகச் சிற்றுண்டியைத் தயார் செய். அதற்குள் நான் ஸ்நானம் செய்துவிட்டு உடுப்பணிந்து கொள்ளுகின்றேன்!'' என்றான் சரத்சந்திரன்.

சுமார் அரைமணி நேரத்திற்குள் நமது ஆசிரியன் எல்லா வேலைகளையும் முடித்துக்கொண்டு பிரயாணத்திற்கு ஆயத்தமானான். அப்பொழுது ஹிமாவதியின் மாளிகைக்கு வருவதாக வாக்களித்தது அவனுடைய ஞாபகத்திற்கு வந்தது. உடனே பக்கத்திலிருந்த டெலிபோனை யெடுத்து மன்மத விலாசத்தின் நம்பரைக் கேட்டான் ஆசிரியன். சில வினாடிகளுக்குப்பின் டெலிபோனின் மறுபுறத்திலிருந்து ஒரு பணிப்பெண் பதிலளித்தாள்.

"செல்வி ஹிமாவதி மாளிகையிலிருக்கின்றாளா? அல்லது வெளியிற் சென்றிருக்கின்றாளா?'' என்று வினவினான் சரத்சந்திரன். "இருக்கிறார்கள்! சற்றுபொறுங்கள்; பேசச் சொல்லுகின்றேன்!'' என்று பதில் கொடுத்தாள் பணிப்பெண். மேலும் சில வினாடிகளுக்குப்பின், "ஹலோ! யாரது?'' என்ற கேள்வி டெலிபோனில்பிறந்தது.

"நான்தான் சரத்சந்திரன்! அங்கே பேசுவது ஹிமாவதிதானே?'' என்றான் ஆசிரியன்.

"ஆமாம்! நீங்கள் மாளிகைக்கு வருவதாகச் சொன்னீர்களல்லவா? உங்களுக்காகவே வெளியெங்கும் செல்லாமல் காத்திருக்கின்றேன்!'' என்றாள் ஹிமாவதி.

"ஹிமாவதி! தயவுசெய்து என்னை மன்னிக்கவேண்டும். நான் ஒரு அவசர வேலையாக அயலூர் செல்லவேண்டியிருக்கின்றது. மாலையில் மாளிகைக்குக் கட்டாயமாக வருகின்றேன்!'' என்றான் ஆசிரியன்.

அவனைச் சந்திப்பதற்கு அளவு கடந்த ஆவலுடனிருப்பவளைப்போல், "நிச்சயமாக வருவீர்களா?'' என்று கேட்டாள் செல்வி ஹிமாவதி. "ஓ! மாலை ஐந்தரை மணிக்குமுன் உறுதியாக என்னை மாளிகையில் காணலாம். இப்பொழுது விடைபெற்றுக் கொள்ளுகின்றேன். வந்தனம்'' என்று சொல்லி டெலிபோனை அதனுடைய வழக்கமான இடத்தில் மறுபடியும் வைத்துவிட்டு ரமணீபுரத்திற்குப் பிரயாணமானான் சரத்சந்திரன்.

(தொடரும்)


அசல் புளூ ஜாகர்
வைரங்கள்
இயற்கை முறையில்
உற்பத்தி செய்யப்பட்ட
(CULTURE)
நல்முத்துக்கள்
கிடைக்குமிடம்:
சிமன்லால் பிரதாப்சந்த்
175 சைன பஜார். மதராஸ்.



இருமல்
மார்சளி,
கால்ஷியம்
குறைவு,
ஆரம்பகாசம்,
ஜலதோஷம்
முதலியவைகளுக்கு பிரபல டாக்டர்களால் சிபார்சு செய்யப்படுவது.

ஆரம்ப க்ஷயம் குணமாகியது.

சுவாசாசயக் கோளாறுகளான காசம் (ஆரம்பம் கடுமை இரண்டும்) ஆரம்ப க்ஷயம், முதலியவற்றிற்கு நான் ஸிரப் தியோ-கால்ஸின் குறித்துத் தந்து கொண்டிருக்கிறேன். நல்ல பலன்கள் ஏற்பட்டிருக்கின்றன. சிறிது காலத்திற்குள் இருமல் அகன்றது. சுவாசாசயக் கோளாறுகள் யாவற்றிற்கும் நான் இதையே சிபார்சு செய்வேன்.

LR. CP. & S. LM.

சிரப் தியோகால்ஸின்

வருஷப்பலன்

மாதவாரி ஒருவருஷப்பலன் எழுத ரூ. 3 வாராந்திர பலன் எழுத ரூ. 10. தர்ம நியாயமான 5 கேள்விகளுக்கு பதில் எழுத ரூ. 1. வி. பி. செலவு 5 அணா. ஜாதக விவரம் அல்லது கடிதம் எழுதும்போதுன்ன நேரம், சுமார் வயது, பெயர் தேவை.

ஹனுமான் ஜோதிஷ ஆச்ரமம்,
திருத்தணி, S. இந்தியா.

"நஞ்சன்கூடுபல்பொடி" பாக்டெரியின் மற்றும் சில மருந்துகள்
எவ்வித ஜுரங்களுக்கும் ஓர் அரிய ஔஷதம் ஜ்வரேக
ஊக்கம் உற்சாகம் ஊட்ட அஜீர்ண பிந்தசமனி ஜீர்ச்
குழந்தைகளுக்கு சுகபேதியாக பாலக்ஸ்

திருநெல்வேலி, மதுரை, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், சேலம், ஈரோடு, திருப்பூர் டிப்போக்களிலிருந்து பெற்றுக்கொள்க.

# நாட்டு நடப்பு - சித்திரக் கண்ணாடி





டோகியோவில் இரண்டாவது வருஷாந்திர ஆசியாத் தொழிலாளர் மகாநாடு சமீபத்தில் நடைபெற்றது. சென்னை ஸ்ரீமான் ஜி. செல்வபதி செட்டியாரையும் படத்தில் காணலாம். (வலது பக்கம்) லாகூரில் சமீபத்தில் நடந்த நீச்சுப் போட்டியில் கலந்துகொண்டவர்கள். இடது பக்கமுள்ள மிஸ் எல். ஹேய்ஸ் வெற்றியடைந்தார்.



ஸ்ரீ வில்லிபுத்தூர் தாலூகா நத்தம் ஸர்க்கிள் காங்கிரஸ் மகாநாடு சமீபத்தில் நடைபெற்றது.



உத்தியோகத்திலிருந்து விலகும் சென்னை போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் ஸ்ரீமான் எஸ். ஸி. மித்ராவுக்கு ஒரு உபசரிப்பு நடத்தப்பட்டது.



சிங்கப்பூர் ஆற்றின் கரையில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள்.

நமது சிறுகதை

# பெற்ற மனம்

(கே. எஸ். என்.)

கும்பகோணத்துக்கு நாலு மைல் கிழக்கே சாலையோரமாக, காவிரிக் கரையில் இரண்டு வீடுகள் இருந்தன. அவைகளில் இரண்டு குடியானக் குடும்பங்கள் வசித்து வந்தன. முதல் வீட்டில் நடேசனும் மீனாக்ஷியும் அவர்கள் குழந்தைகளும், இரண்டாவதில் அய்யாசாமியும் ஆண்டாளும் அவர்களுடைய குழந்தைகளும் இருந்தன. நடேசனும் அய்யாசாமியும் ரொம்பப் பாடுபட்டு வேலை செய்து, அன்றாடம் கிடைத்த சொல்பக் கூலியைக் கொண்டு எப்படியோ சிரமப்பட்டுக் காலந்தள்ளி வந்தார்கள்.

நடேசனுக்கு மூன்று பிள்ளைகளும் ஒரு பெண்ணும். அய்யாசாமிக்கு மூன்று பெண்களும் ஒரு பிள்ளையும். இரு மூத்த குழந்தைகளுக்கும் சுமார் ஏழு வயதும், இரு கடைசிக் குழந்தைகளுக்கும் ஒரு வயதும் நிரம்பியிருக்கும். எட்டுக் குழந்தைகளும் தினம் பொழுது விடிந்தது முதல் இருள் சூழும்வரையில் சாப்பிடப்போகும் நேரந்தவிர பாக்கி நேரங்களிலெல்லாம், தலை வாயிலில் கூடிக்குதித்து விளையாடிக்கொண்டிருக்கும். எப்போதும் அவைகள் சேர்ந்தாப்போலவே யிருந்ததால், மீனாட்சிக்கும், ஆண்டாளுக்குமே சில சமயங்களில் எது தங்கள் குழந்தையென்பது தட்டுக்கெட்டுப் போய்விடும். அய்யாசாமியும் நடேசனும் எக்குழந்தையையாவது கூப்பிட நினைத்தால், முதல் மூன்று தரம் தப்பாகச் சொல்லியான பிறகு தான் நான்காவது தரம் சரியான பெயரைச் சொல்லுவார்கள்.

ஒருநாள் சாயங்காலம் இக்குழந்தைகள் எல்லாம் சாலையில் விளையாடிக்கொண்டிருக்கையில், அவர்களுக்கெதிரே ஒரு பெட்டி வண்டி சட்டென்று நின்றது. அதில் வயது அதிகமாகாத ஒரு ஸ்திரீயும் (அவள் பெயர் ராதை) அவளுடைய வயோதிகப் புருஷனும் உட்கார்ந்திருந்தனர். ராதை கண்கொட்டாமல் அக்குழந்தைகள் விளையாடுவதை வண்டியிலிருந்தபடியே பார்த்துக்கொண்டிருந்தாள். பின்னர் ஒரு பெருமூச்சுவிட்டாள்.

"அதோ பாருங்கோ! என்ன மனோகரமான காக்ஷி! எவ்வளவு அழகான குழந்தைகள்! இது மாதிரி நமக்கும் ஒரு குழந்தையாவது இருக்கக்கூடாதோ!" என்று தன் கணவனிடம் சொல்லிவிட்டு, மறுபடியும் ஒரு பெருமூச்சுவிட்டாள். அவள் கணவன் ஒன்றும் பதில் சொல்லவில்லை. அன்று நன்றாக இருட்டிக் குழந்தைகள் வீட்டிற்குப் போகும்வரையில் ராதையின் வண்டி அவ்விடத்தைவிட்டு அசையவில்லை.

ஒரு வாரங்கழித்து அதே வண்டி மறுபடியும் நடேசன் வீட்டு வாசலில் நின்றது. இந்தத் தடவை ராதை வண்டியை விட்டிறங்கிக் குழந்தைகளுக்கருகில் நின்றபடியே க்ஷணத்திற்கொரு பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தாள். நடேசனின் கடைசிக்குழந்தை பொன்னு அவள் மனதை மிகவும் கவர்ந்தது. "இந்த ஏழைக் குடியானவர்கள் செய்த புண்யம் நான் செய்யவில்லையா? அவர்கள் பாக்யம் எனக்கும் இருக்கக்கூடாதா!? நான் பாவி! ஈசனருள் இல்லையே" என்று மனம் மிகவும் நொந்தாள். கடைசியில் குழந்தைகளெல்லாம் விளையாட்டை நிறுத்திவிட்டுக் கிளம்பும் சமயம், பொன்னுவை ஆர்வத்துடன் வாரியெடுத்து உச்சி முகர்ந்து, அவன் புழுதியடைந்த கன்னங்களிலே முத்தமிட்டாள். ஒருவயதுக் குழந்தைக்கு இச்சேஷ்டைகளெல்லாம் பழக்கமுமில்லை; பிடிக்கவுமில்லை. ராதையின் நல்ல ஆடைகளையெல்லாம் அழுக்காக்கியதுமன்றி, தன் சிறு கைகளால் அவளை இரண்டுதரம் மொத்திவிட்டுத் தப்பித்துக்கொண்டு உள்ளே ஓடிவிட்டான். ராதையும் குதூகலமாய் வீடு போய்ச் சேர்ந்தாள்.

இதற்கப்புறம் அடிக்கடி அவள் வண்டியிலே தனியாகவும் தன் கணவனுடனும் வருவாள். நிறையத் தின்பண்டங்களும் பொம்மைகளும் குழந்தைகளுக்குக் கொண்டுவந்து தருவாள். ஒரு வாரத்தில் குழந்தைகளும் சங்கோஜம் நீங்கி, அவளுடன் தாராளமாய்ப் பழக ஆரம்பித்தன. அவள் முகத்திலே சந்தோஷம் தாண்டவமாட, தெருப்புழுதியிலே, தானும் ஒரு குழந்தையே போல, ராதையும் அவர்களுடைய விளையாட்டுகளிலே கலந்துகொள்ளுவாள். இப்படிச் சின்னாள் சென்ற பிறகு, ராதை அக்குழந்தைகளுடன் விளையாடத் தினமும் வர ஆரம்பித்தாள். ஒவ்வொரு தடவையும் வண்டியிலே நிறைய பக்ஷணங்களும் வேறு பல சாமான்களும் கொண்டு வந்து குழந்தைகளுக்குக் கொடுப்பாள். நாளடைவில் குழந்தைகளும் அவளிடம் அன்புகொண்டு அவள் வரவை எதிர்பார்க்கலாயின. இப்படி அவர்களுடைய குழந்தைகளுடன் விளையாடுவதால், ராதை மீனாட்சிக்கும் ஆண்டாளுக்கும் பழக்கமானாள். குழந்தைகள் தெருவில் விளையாடுவதைப் பார்த்துக்கொண்டே மீனாட்சி ஆண்டாளு இருவருடனும் ஏதாவது பேசிக்கொண்டிருப்பாள் ராதை.

இப்படி ஏழெட்டு வாரங்கள் சென்றன. ஒருநாள், வழக்கத்துக்கு மாறாகக் காலை வேளையில் ராதையின் வண்டி வந்து நடேசன் வீட்டு வாசலில் நின்றது. ராதையும் அவள் கணவனும் நடேசன் வீட்டிற்குள் நுழைந்தனர். நடேசன் வேலைக்குப் போகத் தயாராக நின்றுகொண்டிருந்தான்; மீனாட்சி தண்ணீர் இழுத்துக் கொண்டு வந்து கொட்டிக்கொண்டிருந்தாள். இவர்களைப் பார்த்தவுடன் நடேசனும் மீனாட்சியும் தங்கள் காரியங்களை அப்படியே போட்டுவிட்டு, இவர்களை உட்காரச் சொல்லி உபசாரஞ் செய்து தங்களைத் தேடி வந்ததன் காரணத்தை விசாரித்தனர்.

அப்போது ராதை நடுங்கிய குரலில் ஏதோ யாசிப்பது போல இரக்கமாகப் பேசலுற்றாள். "எங்களுக்கு...குழந்தையே...யில்லை...உங்கள் குழந்தைகளில் ....ஒன்றைக்......கேட்டு...எடுத்துப் போய்... வளர்க்கலாமென்று..." அவள் தொண்டையடைத்தது. நடேசனுக்கும் மீனாட்சிக்கும் அவள் சொன்னதன் அர்த்தம் முதலில் புரியவில்லை. ராதை மறுபடியும் "உங்கள் கடைசிப் பிள்ளை பொன்னுவை யெங்களுக்குக் கொடுக்கறேளா? எங்கள் பிள்ளைபோல் அவனை வளர்த்து வருவோம்" என்றாள்.

மீனாட்சி ஆத்திரமாய் "நான் பெற்ற பிள்ளையை உங்களிடம் கொடுத்து விடுவதா? நன்றாயிருக்கு! முடியவே முடியாது! முடியாது" என்றாள்.

இதற்குள் ராதையின் கணவன் குறுக்கிட்டார். "ராதை எங்கள் விருப்பத்தைச் சரியாகத் தெரிவிக்கவில்லை. நாங்கள் உன் பிள்ளையை உன்னிடமிருந்து பிரித்துவிட வரவில்லை. அவனை ஸ்வீகாரம் செய்துகொள்ளுகிறோம். அவன் அடிக்கடி வேண்டுமானால் இங்கு வந்து போய்க்கொண்டிருக்கலாம்.

(17-ம் பக்கம் பார்க்க)

பிமலா

மாத்திரைகள்

எப்படிப்பட்ட வைத்தியத் திறமைக்கும் குணமாகாத கடுமையான, நீண்டகால வியாதிகளுக்குச் சிறந்தவை. இலவச புத்தகத்துக்காயினும் அல்லது வேறு விஷயங்களுக்காயினும் கீழ்க்கண்ட விலாசத்துக் கெழுதுக,

Kaviraj S. C. Mukherjee's Ayurvedic Institution (1888)

Fakir Haldar Lane, Kalighat,

CALCUTTA.

தந்தி—"Beepills—Calcutta"

பெயர்..............................

விலாசம்............................

ஏஜண்டுகள் தேவை.

நீடித்த வியாதிகளைப் போக்குவதில் பிரசித்தி பெற்ற நிவாரணியான "பிமலா மாத்திரைகளு"க்கு ஆர்டர்கள் சேகரித்துக் கொடுக்க சுறு சுறுப்பும் யோக்கியத் தன்மையும் வாய்ந்த ஏஜண்டுகள் தேவை. இலவசப் புத்தகத்துக்கும் நிபந்தனைகளுக்கும் கீழ்க்கண்ட விலாசத்துக் கெழுதுக:—

Kaviraj. S. C. Mukherjee's Ayurvedic Institution,

Fakir Haldar Lane Kalighat Calcutta.

# இந்திய வர்த்தமானம்

## வைஸிராயின் அறிக்கை

தற்போதைய அரசியல் நிலைமையைப்பற்றி ராஜப்பிரதிநிதி இவ்வாரம் ஒரு அறிக்கை வெளியிட்டார். அதன் சுருக்கம் வருமாறு:—

நான் வைசிராய் பதவியை ஏற்றுக்கொண்ட முதல் நாள் ஒலிபரப்புக்கருவி மூலம் பேசினேன். இப்போது நமக்கேற்பட்டிருக்கும் பெரிய அரசியல் மறுதல்கள் கஷ்டமில்லாமல் வந்துவிடுமென்று எதிர்பாரா திருத்தலே அறிவுடைமையென நான் அன்று சொல்லியது உங்களுக்கு ஞாபகமிருக்கும். இப்போது தோன்றியிருக்கும் கஷ்டங்களை எடுத்துச் சொல்லி, அவற்றைத் தீப்பதற்கு என்னாலான முயற்சியைச் செய்வது என்னுடைய உத்தேசம்.

## காங்கிரஸும் மந்திரி பதவியும்

சில மாகாணங்களில் சட்டசபைகளில் மெஜாரிட்டி வகிக்கும் கட்சியார் பதவியேற்க மறுத்ததாலேற்பட்ட பிரச்னைகளைக் குறித்து நான் இதுவரை பகிரங்கமாக எதுவும் பேசவில்லை. தீர ஆலோசனையின் பேரிலேயே நான் அவ்வாறு பேசாதிருந்தேன். கவர்னர்களின் யுக்தாதிகார நடவடிக்கைகள், அவர்கள் செய்யும் முடிவுகள் முதலியவற்றின் மீது சட்டப்படிக் கவர்னர் ஜெனராலுக்கு அதிகாரம் உண்டென்பது உண்மையே. அவ்வாறே கவர்னர் ஜெனராலும் இந்தியா மந்திரியின் அதிகாரத்திற்குட்பட்டவர். திட்டம், அதன் நோக்கம், புதிய அரசியலின் அமைப்பு முதலியவற்றை யுத்தேசிக்கும்போது, மெஜரிட்டியாக விருந்தும் பதவியேற்க மறுக்கும் கட்சிகளுள்ள மாகாணங்களில் கவர்னரும் மேற்படி கட்சித் தலைவர்களுமே இவ் விஷயத்தைப் பேசித் தீர்க்க வேண்டுமென்பது ஏற்படும்.

## மூன்று மாத அநுபவம்

மூன்று மாதங்களுக்கு முன் ஆறுமாகாணங்களில் சட்டசபைகளில் பெருவாரியான ஸ்தானங்களைப் பெற்ற ஒரு கட்சியினர் தங்களுக்கு மெஜாரிட்டியிருந்தும் கவர்னர்கள் குறிப்பிட்ட சில உறுதிமொழிகளை அளித்தாலன்றி இந்த அரசியல் திட்டத்தின்படி பதவி வகிப்பது புத்திசாலித்தனமல்லவெனத் தீர்மானித்து விட்டனர். உறுதிமொழி கொடுப்பதென்பது சட்டப்படி ஆக்ஷேபகரமானது என்பது ஒருபுறமிருக்க அவ்வித உறுதிமொழி அளித்தால்தான் புதிய அரசியலைச் சரிவரப் பக்குவமாக அநுஷ்டிக்கலாம் என்ற அவசியமில்லை என்பதும் தெளிவாகத் தெரிந்துவிட்டது. ஒவ்வொரு மாகாணத்திலும் மந்திரிகள் உத்தியோக வர்க்கத்தின் ஒத்துழைப்பாலும் உதவியாலும், தங்கள் அன்றாட நிர்வாகத்தில் கவர்னர்களினால் யாதொரு தடையும் நேரவில்லையென்பதைத் தெரிந்து கொண்டார்கள். அந்தந்த மாகாணத்தில் தனித் தனிக் கவர்னர்கள் கூறியபடியே அவர்களின் அநுதாபமும் ஒத்துழைப்பும் உதவியும் கிடைத்திருக்கிறது. மந்திரிகள் இதை நன்கறிந்துகொண்டார்கள். மந்திரிகளின் நித்தியப்படி நிர்வாகத்தில் கவர்னர்கள் குறுக்கிட்டுத் தடுப்பார்கள் என நினைப்பதற்கு இடமேயில்லை.

## கவர்னரது விசேஷ அதிகாரங்கள்

மாகாண சுய ஆட்சியில் மந்திரிகளுடைய ஆதிக்கத்திற்குட்பட்ட எல்லா விஷயங்களிலும் சிறுபான்மையோராது நிலைமை, ஊழியவர்க்கம் இவை உட்பட—கவர்னர் தமது மந்திரிகளின் ஆலோசனைக்கிணங்கவே தமது அதிகாரங்களைச் சாதாரணமாக உபயோகிக்க வேண்டுமென்றும் மந்திரிகள் பார்லிமெண்டிற்குப் பொறுப்பாக இல்லாமல் மாகாண சட்டசபைக்கே பொறுப்பாக இருப்பார்களென்றும் அந்த தஸ்தாவேஜுகள் சந்தேகமற்ற முறையில் தெளிவாக்கியிருக்கின்றன. இந்த விதி சம்பந்தமான நிபந்தனைகள் சில குறிப்பிட்ட விஷயங்களையும் தெளிவாக வரையறுக்கப்பட்ட விஷயங்களையும் பற்றியவையாகும். இவற்றுள் மிக்க முக்கியமானவற்றிற்கு விசேஷப் பொறுப்புகள் என்று பெயர். இந்த விசேஷப் பொறுப்புகளிலும் மிக்க முக்கியமான அம்சம் யாதெனில், மாகாணத்திலாவது அல்லது அதன் எந்தப் பகுதியிலாவது சமாதானம் அன்றி அமைதிக்குப் பெரும் ஆபத்து நிகழ்வதைத் தடுப்பது, சிறுபான்மைச் சமூகத்தினரது நியாயமான உரிமைகளைப் பாதுகாப்பது. ஊழிய வர்க்கத்தினருக்கும் அவர்களை நம்பி வாழ்பவர்களுக்கும் சட்டத்தின்படி ஒதுக்கப்பட்டிருக்கும் உரிமைகள் கிடைக்குமாறு செய்வது, அவர்களது நியாயமான உரிமைகளைப் பாதுகாப்பது முதலியவற்றைப் பற்றியனவாகும்.

## கவர்னர் இஷ்டப்படி தலையிட முடியாது

மாகாணநிர்வாகத்தில் கவர்னர் தமதிஷ்டப்படி தலையிடச் சட்ட பூர்வமாக உரிமைபெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது. இக் கூற்றுக்குச் சற்றும் ஆதாரமே கிடையாது. நான் சொன்னபடி அந்த விசேஷப் பொறுப்புகளின் எல்லைகள் எவ்வளவுக் கெவ்வளவு குறைக்கமுடியோ அவ்வளவுக் கவ்வளவு குறைக்கப்பட்டிருக்கின்றன.

இரு தரப்பினரும் நல்லெண்ணத்துடனும் மாகாண நன்மைக்காகப் புதிய அரசியலை அமுல் நடத்த வேண்டுமென்ற விருப்பத்துடனும் வேலை செய்தால் இந்த விசேஷப் பொறுப்புகளால் ஏற்படுமென எதிர்பார்க்கக் கூடிய கஷ்டங்களுக்கு இடமே இல்லாமல் போகக்கூடும்.

## மந்திரிகளுடன் மாறுபட்டால்?

கவர்னர் தமது சொந்த புத்தியை உபயோகிக்க வேண்டிய விஷயத்தில் கவர்னருக்கும் மந்திரிக்கும் அபிப்பிராயபேதம் மேற்பட்டால் அப்பொழுது என்ன நிகழுமென்பதைப் பற்றி நான் தற்போது கவனிக்க விரும்புகிறேன். அம்மாதிரியான நிலைமை சில்லரை விஷயத்தைப் பற்றியோ அல்லது பெரிய முக்கியமான விஷயத்தைப்பற்றியோ ஏற்படலாம். இப்படி அபிப்பிராய பேத மேற்பட்ட போதிலும் பொறுப்புள்ள மந்திரி சபை கவர்னரது முடிவை ஏற்றுக்கொள்ளாவிடினும் ராஜிநாமாச் செய்யும் உத்தேசத்தை க்ஷணநேரங்கூடக் கொள்ளாதிருக்கலாம். கவர்னருடைய விசேஷப் பொறுப்புகள் உள்பட மந்திரிகளின் ஆதிக்கத்திற்குட்பட்ட நிர்வாக கவர்ன்மெண்ட் முழுவதிலும் ஆலோசனை கூற மந்திரிகள் கடமைப்பட்டிருக்கிறார்களென்று நான் ஏற்கனவே கூறியிருக்கிறேன்.

மந்திரிகள் விடுக்கும் ஆலோசனை கவர்னரின் விசேஷப் பொறுப்புகளுக் குட்பட்டதா




வாசனை எண்ணெய்கள் நீங்களே தயாரித்து பணத்தை மீதி செய்யலாம்!

கீழ்க்கண்ட ஏதாவது ஒரு ரக மோஹினி எஸன்ஸை 16 அவுன்ஸ் நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் அல்லது விளக்கெண்ணெய், கடலை எண்ணெயில் கலந்தால் உங்களுக்கு சிறந்த வாசனை எண்ணெயாகும். விலைகளோ மிகவும் குறைவு.

**சுத்தமான மோஹினி எஸன்ஸுகளின் பெயர்களும் விலைகளும்.**

சாம்பாக் காஷ் கேவ்டா மஸ்க் கதம்பம் மல்லிகை ரோஸ் போகுல் ஹீனு லில்லி தாமரை கோலோன் மோத்தியா ஸ்வீட் ஒரு புட்டி விலை ரூ. 1, அரை அவுன்ஸ் பாட்டில்களாகக்கிடைக்கும். பாக்கிங், தபால் சார்ஜ், வி. பி செலவு வேறு.

S. PAUL & Co., Perfumers, (Dept. S. W.) 4, Hospital Street, Dharamtola, Calcutta.

கொசு வலைகள்.



பிரத்யேக வலுவான வெள்ளை வலைகளாலானவை. நல்ல தையல். நீடித்துழைப்பவை. வெளுத்த பச்சை, நீலம், சிகப்பு, மஞ்சள் முதலிய பல கலர்களிலும் கிடைக்கும். வெள்ளையா கலரா என்பதைக் குறித்தெழுதுக.

| நீளம் அடி | அகலம் அடி | உயரம் அடி | சாதா ரூ. | உயர்ந்தது ரூ. | மேலானது ரூ. |
|---|---|---|---|---|---|
| 6 | 3½ | 3½ | 1-4 | 1-8 | 2-4 |
| 6 | 4 | 4 | 1-8 | 1-12 | 2-6 |
| 6½ | 4½ | 4½ | 1-12 | 2-4 | 2-12 |
| 7 | 5 | 5 | 2-4 | 2-12 | 3-4 |
| 7½ | 6 | 6 | 2-12 | 3-4 | 4-4 |

தபால் செலவு தனி. பாக்கிங் இலவசம். இலவசம் ஏககாலத்தில் மூன்று வலைகள் வாங்குவோருக்கு 6X4X4 வலை ஒன்று இலவசம்.

Bally Mosquito Net Factory, P. O. Bally Dist. HOWRAH

உயர்தரமான வைரங்களுக்கு
K. ராமசந்திர அய்யர் & Co.
நகைவியாபாரிகள்
237 கோவிந்தப்பநாயக்கன் தெரு, மதராஸ்
பிராஞ்சு: மாம்பலம்.

கலியாணம் அழகாயிருப்பதற்கு தடையென்ன?

எல்லாம் எங்கே? — வைட் ஷாப்

புடவைகளில் பலதினுசுகள், பல நிறங்கள், ரவிக்கைகள், ஜாக்கெட்கள் மற்றும் சட்டை சொக்காய்கள் விதம் விதமான மாதிரிகள். பட்டுகளோ கண்டுகொண்டு பார்க்க முடியாத அபூர்வ மாதிரிகள், தோவத்தி, அங்கவஸ்திரம், கோட், ஷர்ட், நிஜார் துணிகள், கைக் குட்டைகள்—இவைகள் அளவு கொஞ்சமல்ல.

தேவல்ராம்ஸ்

இவ்வளவு உன்னதமும், மிக நியாயமான விலையில்.

9—13 ஒட்டாண பஜார், மதராஸ்

யிருப்பினும் வெளிப்பட்டதாயிருப்பினும் மந்திரிகள் சட்டசபைகளுக்கு ஜவாப்தாரிகளாவர். கவர்னர் தமக்கு உசிதமாகத் தோன்றுவதுபோல் நடக்கக்கட்டுப்படாத எல்லா விஷயங்களிலும் அவர் தமது மந்திரிகளின் ஆலோசனையை ஒப்புக்கொண்டே யாகவேண்டும். ஒரு கவர்னர் திட்டமாக வரையறுக்கப்பட்ட தமது விசேஷப் பொறுப்புகள் சம்பந்தப்பட்ட விஷயங்களில் தமது மந்திரிகளின் ஆலோசனையை ஏற்றுக்கொண்டாலும், ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் பார்லிமெண்டுக்கு நேரடியான முறையில் ஜவாப்தாரியாவர்.

### மந்திரிகளுக்குப் பொறுப்பில்லை

ஆனால், கவர்னர் தமது மந்திரிகளின் ஆலோசனையை ஏற்க இயலவில்லையேல் அவர் செய்யும் முடிவுக்கான பொறுப்பு முற்றிலும் அவருடையதேயாகும். அந்நிலையில் அந்த முடிவில் மந்திரிகளுக்கு ஒரு பொறுப்புமிடையாது. அவர்கள் விரும்பினால், அந்த முடிவில் தாங்கள் சிறிதும் பொறுப்பேற்கவில்லையென்று அறிவிக்க அவர்களுக்கு உரிமை யுண்டு. தாங்கள் அம்முடிவுக்கு நேர்மாறான ஆலோசனையை கவர்னரிடம் சமர்ப்பித்ததாகவும் மந்திரிகள் அறிவிக்கலாம்.

### முக்கியப் பிரச்னைகள்

கவர்னரின் விசேஷப் பொறுப்புகளுக்குட்பட்ட விஷயங்களும் முடிவுகளும் முக்கியாம்சத்தில் வித்தியாசமுள்ளவை. ஒரு விஷயம் சாதாரணமானதாயிருந்தாலும் முக்கியமானதாயிருந்தாலும் இதே வேலை முறையைக் கையாள்வதா?

தங்கள் ஆலோசனைக்கு விரோதமாக கவர்னர் செய்யும் முடிவு யாதாயினும் அது முக்கியமானதோ, முக்கியமற்றதோ எங்ஙனமாயினும், அதன் விளைவாக தங்கள் நிலைமை ஒரே அளவு பாதிக்கப்பட்டிருப்பதாக மந்திரி சபையினர் கருதலாமா? கவர்னர் தமது விசேஷப் பொறுப்புகளுக்குட்பட்ட ஒரு விஷயத்தில் நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் மந்திரிகள் தமது கருத்தை ஏற்குமாறுசெய்யத்தப்மாலானவரை முயன்றும் மந்திரி சபை ஏற்காத ஒரு உத்தரவைப் பிறப்பிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகையில் மந்திரிகள் ராஜிநாமாச் செய்வதா அல்லது பகிரங்கமாகவோ தனியாகவோ அல்லது இரண்டு முறையிலுமோ இவ்விஷயமாகத் தங்கள் கருத்தை வெளியிட்டுவிட்டு தங்கள் வேலையை மேற்கொண்டு நடத்தி வருவதா?

மந்திரிகள் அதிகாரத்திற்குட்பட்ட விஷயங்களில் கவர்னர் தலையிடாதிருப்பதுபற்றியும் மெஜாரிடி கூடியவரை ஐயங்கள் நீங்குவது பெரும்பாலும் இக்கேள்விகளுக்கு அளிக்கப்படும் பதிலையே பொறுத்திருப்பதாகத் தெரிகிறது.

ராஜிநாமாவா விலக்கா என்பதற்குள் அரசியல் அனுஷ்டானமானது ராஜிநாமாவுக்கு அனுகூலமானதாகவே இருக்கிறது. ராஜிநாமாச் செய்துவிடுவது தன் மதிப்பைக் காத்துக்கொள்ளுவதற்குச் சிறந்த மார்க்கமாகும். கவர்னர்கள் சில நிலைமைகளில் மந்திரிகள் ராஜிநாமாவைக் கோர வேண்டுமென்று சொல்லப்படுகிறது. ஆனால், அரசியல் சட்டத்தில் அந்த வழி சொல்லப்படவில்லை. ஆகவே கவர்னர்கள் அதை ஒப்புக்கொள்ள முடியாது. ராஜிநாமாவும் 'டிஸ்மிஸலும்' சாத்தியம்; முன்னது மந்திரிகளுடைய இஷ்டப்படி செய்வது; பின்னது கவர்னர்கள் இஷ்டப்படி நடப்பது. அதீத நிலைமையானது சாதாரணமாக ஏற்படுவதற்கில்லை. சகஜமாக ஏற்படக்கூடாத ஒரு நிலைமையில் என்ன செய்வதென்பதைப்பற்றி விவாதிப்பதும் உசிதமாகாது. இருதரத்தாரும் நல்லுணர்ச்சியுடன் வேலை செய்வார்களென்றே நாம் எதிர்பார்க்கிறோம். அவ்வித நிலைமையில் தகராறு ஏற்பட்டாலும் இருதரத்தாரும் நல்லுணர்ச்சியுடன் கலந்தாலோசித்தால் சவுஜன்யம் ஏற்பட்டுவிடும்; ராஜிநாமா டிஸ்மிஸா என்ற கேள்வியே எழுவதற்கு இடமில்லை.

### கிராம நலம்

இந்தத் திட்டத்தை யேற்றுப் பூர்த்தியாக நடத்துவதன் மூலம்தான் கிராமங்களும் கிராம வாசிகளும் நமது லக்ஷியத்திற்கேற்ப செழிப்படைய முடியும். சென்ற இரண்டு மாத காலத்தில் நடந்த விவாதங்களிலிருந்து இப்பிரச்னை பற்றிய பல்வகைப்பட்ட அபிப்பிராயங்களையும் நீங்கள் தெரிந்து கொண்டிருப்பீர்கள். இந்தியாவுக்கு எதிர்காலத்தில் நன்மை பயக்கக்கூடிய பெரியதொரு தீர்மானத்தை நீங்கள் இப்போது செய்தாக வேண்டும். தலைவர்களும் அவர்களைப் பின் பற்றும் ஊழியர்களும் ஆக்க வேலை மார்க்கத்தையே பின்பற்றுவார்களென்று எதிர்பார்க்கிறேன். என்ன நேர்ந்தபோதிலும், எவ்வளவு ஏமாற்றம் வந்தாலும், இந்தியாவில் பார்லிமெண்டரி ஆட்சி முறை ஏற்படுவதற்கு நான் சலியாமல் முயற்சிசெய்வேன. ஆனால் இப்போதைய நிலைமை திருப்திகரமாக முடிவுறுமன் பார்லிமெண்டரி பொறுப்பாட்சி முறை பல மாகாணங்களில் நிறுத்திவைக்கப்பட்டுவிடுமானால், அந்த நிலைமை நாம் சீக்கிரத்தில் மாற்றிவிட முடியாதுபோகும். எவ்வளவுதான் அதற்காக வருந்தியுப பயனில்லை. அநாவசியமாகக் காலம் வியர்த்தமாகும். படிப்படியாக முன்னேறவேண்டிய சீர்திருத்தமும் தடைப்படும்.

இந்த துக்ககரமான விஷயங்கள் நேருமென நாம் நம்பவில்லை. உங்களிடமும் இந்தியாவின் நற்கதியிலும் எனக்கு நம்பிக்கையுண்டு.

நாம் செல்லும் மார்க்கம் சில சமயங்களில் இருட்டாகவும் கரடுமுரடாகவுமிருக்கலாம். நமக்கு வழிகாட்டும் நக்ஷத்திரம் அணைந்து விடும் போலவும் காணலாம். ஆனால் நம்பிக்கையும் தைர்யமும் பெரிய சக்திகள். அவற்றின் உதவிகொண்டு நமது லக்ஷியத்தைப் பெற முன்னேறிச் செல்லுவோமாக!

* * * *

### பழைய காலத்துக் குகை

ஷோரனூநக்கருகாமையிலுள்ள பாயங்குளம் என்ற கிராமத்தில் சில தொழிலாளர் பூமியைத் தோண்டி வேலை செய்துகொண்டிருக்கும் போது ஆறடி ஆழத்தில் ஒரு கல் மூடியிருந்தது. அதை அப்புறப்படுத்தியபோது சுமார் 35 அடி நீளமுள்ள குகையிருப்பது தெரிய வந்தது. சரித்திர ஆராய்ச்சியாளர் பரிசீலனை செய்து வருகின்றனர்.

* * * *

### தனவந்த ஸ்திரீயின் கொலை

ஹைதராபாத் (ஸிந்து) தாந்தியோடாண்டோவென்ற இடத்தில் ஒரு கொடுமையான சம்பவம் நேர்ந்தது. அவ்வூர் பெரிய தனவந்தராகிய சேத் ஹாஸோமாலின் பங்களாவிலிருந்து உதவிகோரி பலத்த கூக்குரல் கேட்டது. அக்கம்பக்கத்திலிருந்தவர்கள் உடனே அங்கு ஓடிப்பார்க்க சேத்தின் மனைவி ஒரே ரத்த வெள்ளத்தில் கிடந்தாள். தலை உடலிலிருந்து தனியாகக்கிடந்தது. சில கொள்ளைக்காரர்கள் வீட்டில் புகுந்து அவரது நகைகளைக் கழற்ற முயன்றதாயும், சேத்தின் மனைவி எதிர்க்கவே கொள்ளைக்காரர்கள் அவரைத் தாக்கிவிட்டு நகைகளுடன் ஓடிவிட்டதாகவும் சொல்லப்படுகிறது.

* * * *

### வேஷ்டியே உத்தியோக உடை?

வங்காளத்தில் சாதாரணமாக வழங்கிவரும் உடுப்பாகிய வேஷ்டியே இனி சம்பிரதாய உடுப்பாக ஆகிவிடுமென்று தோன்றுகிறது. சம்பிரதாயச் சடங்குகளில் வேஷ்டியையே உடுத்திக்கொள்ள விரும்புகிறவர்களுக்கு வங்காளி தேசிய உடையாகிய அதுவே உத்தியோகத் தோரணையான உடையாகக் கருதப்படுமா வென்று சமீபத்தில் நடந்த மந்திரி சபைக் கூட்டத்தில் ஸ்ரீமான் சர்க்கார் ஒரு கேள்வியை எழுப்பினர். உடையின் சரியான விவரத்தைத் தம்மிடம் தெரிவித்தால், தாம் அதைப் பற்றி ஆலோசிக்கத் தயாராயிருப்பதாகக் கவர்னர் சொல்லியிருப்பதாகத் தெரிகிறது. உடை கவுரமான முறையிலிருந்தால் கவர்னர் அதை ஆமோதிக்காமலிருக்க மாட்டாரென்றே தோன்றுகிறது.

* * * *

### ஹரிஜன் கொலை

காரைக்குடியிலிருந்து பின் கண்ட செய்தி கிடைத்திருக்கிறது. ஜூன் 15-ந்தேதியன்று குறுந்தாம்பட்டியைச் சேர்ந்த அழகன் என்னும் ஹரிஜன் சாரங்கோட்டை வழியாக வேறொரு கிராமத்திற்குப் போய்க்கொண்டிருக்கையில் வழிநெடுக 'தீண்டக் கூடாதாம் சாமி தீண்டக் கூடாதாம்' என்ற பாட்டைப் பாடிக்கொண்டே போனான். இப்பாட்டு ஜாதி ஹிந்துக்களுக்குக் கோபத்தை மூட்டுமென்று ஒரு ஜாதி ஹிந்து கூறினர். அழகன் கேட்காமல் பாடிக்கொண்டே போனான். அவனோடுகூடச் சென்ற நண்பன் எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை. அவன் குடித்திருப்பதால் அப்படிப் பாடுகிறானென்று அவன் நண்பர் சொன்னார். ஆனால் ஜாதி ஹிந்துக் கிராமவாசிகள் பலர்கூடி அவனை யடித்து வெட்டிப் போட்டுவிட்டதாகச் சொல்லப்படுகிறது. போலீசார் வந்து பிரேதத்தைப் பரிசீலனைக்காக அனுப்பினர். அப்போது ஜாதி ஹிந்து கிராமவாசிகள் யாருமே காணப்படவில்லை. விசாரணை நடந்து வருகிறது.

(26-ம் பக்கம் பார்க்க)

பிரசித்திபெற்ற பழங்களைத் தரும்
**மாங்கன்றுகள்**
தர்பங்கா, முஸபர்பூர் இவ்விடங்களைச் சேர்ந்தவை. மலிவான விலைகளில் கிடைக்கும். காட்லாக்குக் கெழுதுக. BIHAR NURSERY, P.O. Bihar Nursery (Darbhanga) Bihar.



## பெற்ற மனம்

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

எனக்கு நிறைய ஆஸ்தியும் பணமும்—மூன்று லக்ஷம்—இருக்கிறது. எனக்கப்புறம் உங்கள் பொன்னுவே அத்தனையும் அடைவான். இன்றே வேண்டுமானாலும் அவன் பெயருக்கு ஐம்பதினாயிரம் தனியாக எழுதி வைத்துவிடுகிறேன். தவிரவும் உங்களுக்கும் மாதம் ஐம்பது ரூபாய் தருவதாக எழுதிக்கொடுக்கிறேன், புரிகிறதா?" என்றார்.

மீனாட்சி ஒரு சிறு சிறி நிமிர்ந்து நின்றாள்; பொன்னுவை விலைக்கு விற்றுவிடவா சொல்லுகிறீர்கள்! என்ன அநியாயம்! ஒரு தாயாரிடம் வந்து அவளுடைய தனயனை விலை பேச உங்களுக்கெப்படி நாவெழுந்தது? என்ன அக்ரமம்!" என்று கூச்சலிட்டாள். மீனாட்சி சொல்லுவது சரியென்பதாக நடேசன் தலையை யசைத்தான்.

ராதைக்கு அழுகை வந்தது. "ஐயோ! ஒரு குழந்தையை நான் வளர்க்கத் தரமாட்டேனென்கிறார்களே!" யென்றலறினாள். அவள் கணவன், "கொஞ்சம் யோசனை செய்து..." என்று ஆரம்பித்தார்.

ஆனால் மீனாட்சி அதையெல்லாம் காதில் போட்டுக்கொள்ள மறுத்துவிட்டாள். கோபமாய், "போதும் போதும்; வாயை மூடிக்கொள்ளுங்கள். பிள்ளையை விற்பதாமே; நல்ல நியாயம்! என் ஒரே பிள்ளையை! உங்கள் பணமும் வேண்டாம் நீங்களும் வேண்டாம். போங்கள் வெளியே" என்று கர்ஜித்தாள்.

ராதை அழுகையைச் சற்று அடக்கிக்கொண்டு, "இன்னொரு சின்ன பிள்ளைக் ' குழந்தையிருக்கிறதே. அது உன் பிள்ளையில்லையா?" என்று கேட்டாள்.

"ராசுவா? அது அடுத்த வீட்டு ஆண்டாளுவின் பிள்ளை. அவளைக் கேட்டுப் பாருங்கள். அவள் தன் பிள்ளையை விற்கத் துணிந்தாலும் துணிவாள்" என்றாள் மீனாட்சி.

ராதையும் அவள் கணவனும் அய்யாசாமி வீட்டுக்குள் நுழைந்தனர். அப்போதுதான் அய்யாசாமியும் அவன் மனைவியும் மறுநாள் அரிசி வாங்கக் காசில்லாததுபற்றியும், நாலைந்து நாளாக அவனுக்கு வேலையே அகப்படாது போனதுபற்றியும் பேசிக்கொண்டிருந்தனர். ராதையைப் பேசவிடாமல் அவள் கணவன் தன் ஸ்திதியையும் தங்கள் ஆசையையும் அய்யாசாமியிடம் தெரிவித்தார். முதலில் அவனும் ஆண்டாளும் 'முடியாது' என்ற பாவனையாகத் தலையை ஆட்டினர். ஆனால், தங்களுக்கும் மாதா மாதம் ஐம்பது ரூபாய் வரும் என்று தெரிந்தவுடன் தலையாட்டம் சற்று நின்றது. ஒரு நிமிஷம் மௌனமாய் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். பின்னர் அய்யாசாமி "என்ன ஆண்டாளு" என்றார். அதே க்ஷணத்தில் ஆண்டாளும் "என்ன?" என்று கேட்க வாயைத் திறந்தாள்.

ராதை துடித்தாள். அவர்களுடைய ராசுவுக்கும் பின்னர் வரப்போகும் பணத்தையும் பதவியையும், அவன் அதிர்ஷ்டத்தையும் பற்றி விரித்தார் அவள் கணவன்.

கடைசியாக அய்யாசாமி "மாதந் தவறாது ஐம்பது ரூபாய் தருவதாகப் பத்திரம் ரிஜிஸ்தர் செய்து தருவீர்களா?" என்று கேட்டான்.

"ஓ! இன்றே!"

"எங்கள் செல்ல ராசுவுக்கு ஈடாக ஐம்பது ரூபாய் போறாது. அறுபது வேணு" மென்றாள் ஆண்டாளு.

"சரி" யென்றாள் ராதை; அப்போதே ராசுவை யெடுத்துப் போவதாகவும் அதற்காகக் கையில் நூறு ரூபாய் கொடுப்பதாகவும் சொன்னாள். நடேசனும் சம்மதித்தான். ராதை தன் ஸ்வீகாரப் புத்திரனை வண்டிக்குத் தூக்கிச் சென்றாள்.

இதை முழுவதும் நடேசனும் மீனாட்சியும் பார்த்துக்கொண்டேயிருந்தனர்.

அதற்கப்புறம் பலநாள் ராசுவைப்பற்றி யாருக்கும் ஒன்றுந் தெரியாது. அய்யாசாமி மாதாமாதம் கும்பகோணம்போய் ஒரு வக்கீலிடமிருந்து தன் அறுபது ரூபாயைப் பெற்றுக்கொண்டு வருவான்.

பக்கத்து வீட்டுக்காரர்களுக்குள் இப்போது முன்னிருந்ததுபோல நட்புக்கிடையாது. ஏனெனில் மீனாட்சி கண்டவிடத்திலெல்லாம், கண்டவரிடத்திலெல்லாம் ஆண்டாளு காசுக்காசைப்பட்டுப் பெற்ற பிள்ளையையே விற்றவளென்றும், அப்படிச் செய்தவள் ராக்ஷஸ குலமே தவிர மனுஷ ஜன்மம் அல்லவென்றும் வம்படிக்க ஆரம்பித்தாள். இதனால் அய்யாசாமிக்கும் நடேசனுக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டுச் சண்டையும் பூசலுமெழுந்தது.

மீனாட்சி தினம் ஒருதரம் பொன்னுவை இடுப்பில் வைத்துக்கொண்டு தெருவில் போகிறவர் வருபவர் காதிலும் அண்டை வீட்டார் காதிலும் விழும்படி "நான் உன்னை விற்கல்லேடா என் கண்ணு! நான் உன்னை விற்பேனா? நான் ஏழைதான்; ஆனால் நாத்தக் காசுக்காக என் பொன்னுவை விற்பேனா? நான் என்ன ராக்ஷஸப் பிசாசா?" என்று சொல்லிச் சீராட்டுவாள். சுற்றுவட்டத்திலும் இதனால் மீனாட்சியின் மதிப்பேறியது. ஆனால் அய்யாசாமி வீட்டாரின் மதிப்புக் குறையவில்லை; ஏனெனில், அவன் கையில் இப்போது பணம் புழங்கி வந்ததல்லவா?





FLIT பிளிட் உண்மையில் பூச்சிகளைக் கொல்லுகிறது.

போலிச்சரக்குகளை ஏற்காதீர்கள். பிளிட் ஒன்றுதானிருக்கிறதென்பதை மறக்க வேண்டாம். கறுப்புப்பட்டையுடன் கூடிய சோல்ஜர் கொண்ட ஸீலிட்ட டின்னில் கிடைக்கும். கரைபடாதது.

இடெக்குகளில் பிளிட்; தெளியுங்கள்.

ஸோல்ஜர் உருவம் இல்லாத டின் பிளிட் அல்ல.

தென்னிந்தியாவிற்கு சோல் டிஸ்டிரிபியூட்டர்கள்:—
டி. டி. கிருஷ்ணமாச்சாரி, 11-14, அரமனைக்காரத்தெரு, மதராஸ்.

### வலி உடனே ஒழியும்

ஆட்மென்ஸ் ஸைப்ரஸ் ஸால்வ் (ரிஜிஸ்டர்ட்)
(பெயின் பாம்)



அற்புதமான பலன்; தலைவலி, கீல் பிடிப்பு முதலிய எதுவாயினும் சரி, இதைத் தடவினால் உடனே சௌக்கியமேற்படும். இன்றே வாங்கிப்பாருங்கள்; பிறகு இதில்லாமலிருக்கமாட்டீர்கள். விலை புட்டி 1-க்கு ரூ. 1. வி. பி. செலவு தனி. 2 அணா ஸ்டாம்பனுப்பினால் சாம்பிள் கிடைக்கும்.

மொத்த ஏஜண்டுகள்:
The Anglo Indian Drug & Chemical Co., Bombay 2.

### நம்பிக்கையான நிவாரணி




எல்லா சூதகக் கோளாறுகளையும் போக்குவது. ஸ்திரீகளின் தேகத்திற்கு வலுவூட்டும் சிறந்த டானிக்

### லோத்ரா

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

மதராஸ

குணமுற்றது மலிவுற்றது தீங்கற்றது
நஞ்சன்கூடு பல்பொடி
சாதாரணம் புதுபாக்கெட்

டிப்போ : 42, செட்டி தெரு, கொழும்பு.
204, ராஜா தெரு, கோயமுத்தூர்.

பொன்னுவும் தன் பதினெட்டாவது வயது வரையில் தான் "விற்கப்படாத" குழந்தையென்று பெருமை பாராட்டிக்கொண்டான். ஆனால் சில சமயங்களில் தங்கள் ஏழ்மையையும் அடுத்த வீட்டின் ஏழ்மையில்லாமையையும் கவனிக்கும் போது அவனுக்குச் சற்று அதிருப்தி தோன்றும். ஆனால், அவன் அதைவளரவிட்டதில்லை

பொன்னுவுக்கு இருபத்திரண்டாவது வயது நடந்து கொண்டிருக்கையில், ஒருநாள் காலை ஏழுமணி சுமாருக்குத் தெருவில் ஒரு பெரிய மோட்டார் கார் வந்து நின்றது. அதினின்றும் இருபத்திரண்டு வயது நிரம்பாத ஒரு வாலிபனும் ஒரு கிழ மாதும் இறங்கினர்.

"அந்த வீடில்லேடாப்பா! இரண்டாவது வீடுதான்" என்றாள் அம்மாது. இருவரும் அய்யாசாமியின் வீட்டிற்குள் நுழைந்தனர். அய்யாசாமி கட்டிலில் படுத்திருந்தான். ஆண்டாளு அவனுக்கு விசிறிக்கொண்டிருந்தாள்.

"அப்பா! அம்மா!" என்று கூப்பிட்டான் அவ்வாலிபன்.

"என் ராசுவா?" என்று ஒரே மூச்சில் சொல்லியவண்ணம் பெற்றோர் இருவரும் அவனைத் தாவியணைத்துக்கொண்டனர். பின்னர் க்ஷேமம் விசாரித்து ஆனபிறகு ஊரில் தங்கள் சிநேகிதர்களுக்கெல்லாம் சொல்லியனுப்பி, ராசு திரும்பி வந்ததற்காக ஒரு விருந்திட்டான் அய்யாசாமி. அவ்விருந்துக்கு பொன்னுவின் வீட்டில் யாரும் கூப்பிடப்படவில்லை. விருந்தெல்லாம் ஆன பிறகு மத்தியானம் இரண்டு மணிக்கு ராசுவும் அக் கிழமாதும் (ராதை) விடை பெற்றுக்கொண்டு வண்டியிலேறித் தங்கள் வீட்டுக்குப்புறப்பட்டனர்

பொன்னு தன் வீட்டுத் திண்ணையிலிருந்தபடியே எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டிருந்தான். அவன் அன்று வேலைக்குப் போகவுமில்லை; வீட்டிலேய சாப்பிடவும் போகவில்லை. ராசு கிளம்பிப் போனபிறகு பொன்னன் மனக்குரங்கு அவனை ராசுவின் இடத்தில் வைத்துக் கற்பனைகள் செய்துகொண்டிருந்தது. அவன் அகக்கண் முன் ராசுவின் தோற்றமும், நடையுடைபாவனைகளும் காரும் அகலாது நின்றன. தன்னைத் தள்ளிவிட்டு ராசு தன் இடத்தில் இருக்கிறான் என்று அவன் மேல் முதலில் கோபம்வந்தது. பின்னர் தன் பெற்றோர் மேல் அக்கோபம் திரும்பிற்று.

அன்றிரவு சாப்பிடும்போது தன் பெற்றோர்களிடம் பொன்னு, "அன்று எனக்குப் பதில் ராசுவையனுப்பி போகவிட்டது மடத்தனம்" என்றான்.

"நான் பெற்ற பிள்ளையை விற்க நான் என்ன ராக்ஷஸியா?" என்று மீனாட்சி தன் பழைய பாடத்தை ஒப்பித்தாள்.

நடேசன் ஒன்றுஞ் சொல்லவில்லை.

"என் ஆயுளைப் பாழ்படுத்திவிட்டீர்கள்" என்றான் பொன்னு மறுபடியும்.

நடேசனுக்குக் கோபம் வந்தது. "இருபது வருஷங்களுக்கு முன் உன்னைநாங்கள் விற்காமல் வைத்துக்கொண்டு விட்டதற்காக இன்று நீ எங்களைக் குறைகூறுகிறாயா?"

"உங்களைப்போன்ற மடையர்கள் கிடையாது. குழந்தைகள் குட்டிச்சுவர் ஆவது உங்களைப் போன்ற பெற்றோர்களால் தான்" என்றான் பொன்னு.

மீனாட்சி விம்மினாள். அவள் கண்கள் கலங்கின. "பெற்ற பிள்ளையை..."

"உங்களால்தான்நான் இன்று தினங்குடிக்கும் கஞ்சிக்குக் கூட வழியில்லாதிருக்கிறேன். இப்படி வாழ்வதைவிடப் பிறக்காமலேயிருந்திருக்கலாம். இன்று காலையில் வந்தானே ராசு—இருந்தால் அவனைப் போலவன்றோ இருக்க வேணும்? அவன் பதவி எனக்குக் கிடைக்காமல் செய்தது நீங்கள் தான்" இலையை விட்டெழுந்தான் பொன்னு. "இனி நான் உங்களுடன் இருந்தால் தினம் ஒரு தரமாவது இதைச் சொல்லிக் காட்டாமலிருக்க மாட்டேன். அது உங்களுக்குந்துன்பம். எனக்கும் துன்பம். அன்று என்னை ஸ்ரீதேவி அழைத்த போது நீங்கள் போகவிடமாட்டேனென்று விட்டீர்கள். இன்று நானாகவே உங்களைவிட்டுப் போய்விடுகிறேன்."

நடேசனும் மீனாட்சியும் மௌனமாய்க் கண்ணீர் பெருக்கினர்.

வாசற்கதவு வெளியிலிருந்து படீரென்று சாத்தப்பட்டது.


இந்தியா கவர்ன்மெண்டில் மெடிகல் ஸன்னதுடன் வைத்தியப் பட்டம் பெற்றவரும், கவர்ன்மெண்டு வைத்திய ஆலோசனை போர்டு & கமிட்டி, கவர்ன்மெண்டு இந்திய வைத்திய கவர்னிங்பாடி & ஸெண்டிரல் போர்டு இவைகளில் மெம்பரும், கவர்ன்மெண்டு வைத்திய கலாசாலை & ஹாஸ்பிடல் இவைகளில் நடத்தப்படும் வைத்திய சாஸ்திர பரீக்ஷைகளுக்கும், ரோக பரிசோதன பரீக்ஷைகளுக்கும் பரீக்ஷாதிகாரியான

வைத்தியரத்ன பண்டிட் யு. ராமநாத சாஸ்திரியாருடைய



(Sastriar in Govt. Medical dress)

**மஹா பில்வாதி லேகியம்**

பித்தவாயு, கீல் பிடிப்பு, பித்த மயக்கம், பலஹீனம், அன்னத்துவேஷம், அஜீர்ணம், மலச்சிக்கல் இவைகளைக் கண்டிக்கும். 1 சேர் கொண்ட டப்பி 1-க்கு ரூபா 3. வி. பி. வேறு.

**ஆனந்த பற்பொடி**

குணம், ருசி, வாசனை இவைகளில் இது ஒன்று தான் மார்க்கெட்டில் சிறந்தது. டப்பி 1-க்கு 0—2—9. ஒரு டஜன் கொண்ட பெட்டி 1-க்கு ரூபா 1—14—0. வி. பி. வேறு. எங்கும்கிடைக்கும்.

**ஆனந்த பற்பசை**

ஆனந்த பற்பொடியை பசை ரூபமாக செய்யப்பட்டிருக்கிறது. ட்யூப் 1-க்கு 0-8-0 வி. பி. வேறு எங்கும் கிடைக்கும்.

**ஸ்ரீ தன்வந்தரி கவசம்:**—வியாதி, மனோவிசாரம். தரித்திரம், இவைகளை விலக்கி உத்தியோக வியாபார லாபங்கள் ஜனவசியம் இவைகளை அளிப்பதில் அபாரமான சக்தி உள்ளது. கவசம் 1-க்கு ரூ. 2—8—0. வி. பி. வேறு.

**ஆனந்த கூந்தல் தைலம்:**—குளிர்ச்சியுடன் அபாரமாய் புஷ்பத்தின் வாஸனை வீசிக்கொண்டே இருக்கும். மயிர்கள் வெளுக்காமலும், கொட்டாமலும், செழிப்புடன் அழகாய் கருத்து நீண்டு வளரும். சாஸ்திரோக்தமாய் அசல் நெல்லெண்ணெயைக் கொண்டே தயார் செய்யப்பட்டு இருக்கிறது. புட்டி 1-க்கு ரூ. 1—0—0. வி. பி. வேறு.

**ஆனந்த படை நிவாரணி:**—இதை மேலுக்கு உபயோகிக்க எரிச்சல் இல்லாமல் எவ்விதமான படைகளையும் திரும்பி வராமல் இருக்கும்படி உடனே போக்கிவிடும். சீசா 1-க்கு அணா 12. வீ. பி. வேறு.

சகல ஆயர்வேத ஔஷதங்களும் கிடைக்கும். கேட்லாக் இனம்.

**வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரி,**

வைத்திய ஸித்தாச்ரமம், 39, பஜார்ரோட், மயிலாப்பூர், மதராஸ்.



உலகப் பிரசித்தி பெற்ற

ஆர். மூகம் அண்டு கம்பெனியாரின்

**நெ. 1. மணிமார்க் பட்டணம்**

**மூக்குத் தூளை**

உபயோகியுங்கள்.

1. நெ. வீசை 1-க்கு விலை ரூ. 4 0
2. நெ. வீசை 1-க்கு விலை ரூ. 3 8

ஏஜண்டுகள் தேவை:—

விலாசம்: ஆர். மூகம் அண்டு கம்பெனி, நெ. 5, ஓல்டு ஜெயில் தெருவு, மதராஸ்.








பிரபாத் பிலிம் கம்பெனியாரின்

"வாஹா"

என்ற ஹிந்தி பேசும் படத்திலிருந்து காட்சிகள்



டென்னஸ்ஸிவாஸி (அமெரிக்கா) மெம்பிஸ் என்னுமிடத்திலுள்ள "டாமி" என்ற ஆபி கோல்ட்பர்க் தன்னை "பலூன் மனிதன்" என்று
படி செய்கிறார். பிறகு அவருடைய சகா ஒருவர் 500 ராத்தல் எடையுள்ள ஒரு இரும்பை வயிற்றில்



பலூன் மனிதன் டாமி. (நடுப் படம்) ஸர் ஜார்ஜ் பிரஸ்காட் என்ற பிரபல வேட்டையாடும் நிபுணரின் மனைவி வரிகொடாமல் அச்
வெளிவருகையில் எடுத்த படம். (வலது பக்கம்) விமான விபத்துக்கள் அதிகரித்துவருவதால் அவ்விபத்துக்களிலிருந்து தப்புவத



சொல்லிக்கொள்ளுகிறார். 41 அங்குலம் சுற்றளவுள்ள தமது வயிற்றை காற்றை வயிற்றிற்குள் புகவிட்டு 75 அங்குலம்வரை பெருக்கும் வைத்து அதன்மீது சம்மட்டியால் அடிக்கிறார். இதை "டாமி" சுலபமாகத் தாங்கிக்கொள்ளுகிறார்.





ிய நாடுகளிலிருந்து சாமான்கள் கொண்டுவந்ததற்காக லண்டனில் 1,500 பவுன் அபராதம் விதிக்கப்பட்டார். கோர்ட்டிலிருந்து ற்கு நிலத்திலும், நீரிலும் உபயோகப்படக்கூடிய பெல்ட் செய்யப்பட்டிருக்கிறது. அது நீரில் பரீக்ஷிக்கப்பட்ட போது எடுத்த படம்.





பாதாமி குகைக் கோயிலின் இரு தோற்றங்கள். இக் கோயில் மிகுந்த சித்திரவேலைப்பாடமைந்ததாய் இருக்கிறது.



பாதாமி குகைச் கோயிலிலுள்ள கல்லில் செதுக்கப்பட்ட புத்தர் உருவம்.




## ஒட்டை ஒட்டியாணம்

(காசினி எழுதியது.)

* * * 'என்னுடைய அக்காள் பேத்திக்கு ஒரு ஒட்டியாணம் பண்ண வேண்டும் என்று ரொம்ப ஆசைப்படுகிறாள். இந்த ஆவணியில் பேத்தியைப் புக்ககத்திற்கு அனுப்ப வேண்டுமாம். அதற்குள் ஒரு ஒட்டியாணம் செய்து போட வேண்டுமாம். 'பவுன் மலியும் மலியும் என்று ஒரு வருஷமாக ராமுவும்—ராமு தான் என் அக்காளுடைய பிள்ளை—சால்சாப்புச் சொல்லிக் காலத்தைக் கழித்துவிட்டான். பவுன் விலை குறைகிற வழியாக இல்லை. அவாளோ கட்டாயமாக இந்த ஆவணியில் மாட்டுப்பெண்ணை அழைத்துக்கொண்டு போய் குடித்தனம் வைக்க வேண்டும் என்கிறார்கள். அவா பிள்ளைக்கு ஹோட்டல் சாப்பாடு வயிற்று வலி வருகிறதாம். அதற்குள் ஒரு ஒட்டியாணம் பண்ணிப் போடு என்று ராமுவிடம் எவ்வளவோ சொல்லி இருபத்தி இரண்டு பவுன்கள் வாங்கி வைத்திருக்கிறேன். பட்டணத்தில் உன் சிநேகிதிக்கு எழுதி ஏதாவது புதிய 'பாஷன்' இருந்தால் அனுப்பச் சொல்லேன் என்று என்னுடைய அக்காள் இரண்டு நாள்களாக என்னை அலட்டுகிறாள். ஒட்டியாணம் சலங்கை கட்டினதாக இருக்க வேண்டுமாம். நல்ல தினுசாக ஒன்று எழுது' என்று நீ கேட்டிருந்தாய்.

ஒட்டியாணத்தில் இப்பொழுது புதிய தினுசுகள் ஒன்றும் ஏற்பட்டதாகக் காணேமே? இருபத்தி இரண்டு பவுன்களுக்கு ஒட்டியாணம் செய்வதென்றால், அதிலும் சலங்கையும் வேண்டுமென்றால், மெல்லிய தகடாகன்றோ இருக்கும்? இதில் லேடி சின்னையா சொன்ன மாதிரியில் 'ஒட்டை' ஒட்டியாணமாகச் செய்தால் 'பாஷனுக்கு பாஷனாகவும்' இருக்கும். கெட்டியாகவும் இருக்கும். ஒட்டை ஒட்டியாணம் என்றதும், ஸர் சின்னையா மாதிரியில், உதவாக்கரை நகை என்று எண்ணிவிடாதே! லேடி சின்னையா தன் பெண்ணுடைய பெண்ணுக்குப் போன மாதம் ஒரு ஒட்டியாணம் பண்ணினாள். இவள் தன் கணவரிடம், 'குழந்தை ஒட்டியாணம் வேண்டும் என்று அலட்டுகிறாள். அவளுக்கு ஒரு ஒட்டை ஒட்டியாணம் பண்ண உத்தேசிக்கிறேன்,' என்றாளாம். 'சரி; இஷ்டப்படிச் செய்' என்று ஸர் சின்னையா சொன்னதும், 'ஏது, நகை என்றால் வழக்கமாகக் குழந்தைகளுக்கு நகை எதற்கு என்று சொல்லுபவர் உடனேயே செய் என்று விட்டாரே' என்று எண்ணிக்கொண்டே வந்து விட்டாளாம். பதினைந்து பவுன்களுக்கு, கொத்துக் கொத்தாகச் சலங்கைகள் கட்டி, 'ஓபன்-வொர்க்' ஒட்டியாணம் செய்தாள். கூலி உள்பட முன்னூற்று எழுபத்தி ஐந்து, ரூபாய்களுக்கு ஸர் சின்னையாவிடம் 'பில்லை' நீட்டினதும் அவர் அப்படியே பிரமித்துவிட்டார். 'ஒட்டை' ஒட்டியாணம் என்றதும் ஏதோ ஒட்டை விலைக்கு ஏழெட்டு ரூபாய்களுக்கு ஒன்று வாங்கப் போகிறாய் என்று நினைத்தேன்! 'ஓபன்-வொர்க்கையா' ஒட்டை என்றாய்?' என்றார். ஒட்டியாணம் மிகவும் அழகாக இருந்தது. லேடி சின்னையா, இது ஒட்டை, ஒட்டையாகத் தெரிவதினால் வேடிக்கைக்கு



ஸ்ரீமான் ஆர். வி. லக்ஷ்மி ரட்டன் ஜூனியரின் சகோதரர் குமாரி பாலாம்பாளுக்கும் சென்னை ஸிவில் ஸர்வீஸ் ஸ்ரீமான் பி. வெங்கடேசன் குமாரன் சுப்ரமணியனுக்கும் விவாகம் நடந்தது.



முசிரி வக்கீல் ஸ்ரீமான் துரைசாமி அய்யர் குமாரன் பால சுப்ரமணியனுக்கும் திருவத்திபுரம் உதவி எஞ்சினீயர் ஸ்ரீமான் ராமஸ்வாமி அய்யர் குமாரி கோகிலாம்பாளுக்கும் விவாகம் நடந்தது.



புதுச்சேரி செக்ரடேரியட் ஜெனரல் ஸ்ரீமான் லோகனாதய்யர் குமாரி கோகிலாம்பாளுக்கும் சிதம்பரம் ஸ்ரீமான் கே. எஸ். ஜெயராமனுக்கும் சமீபத்தில் விவாகம் நடந்தது.



எனது சருமத்தின் மிருதுத்தன்மையை யாவரும் போற்றுகின்றனர்

ரகஸியம்

சிறந்த சரும டானிக்தான்

சிறந்த சரும டானிக் சரும அழகை எவ்வளவு தூரம் பெருக்குகிறதென்பதை ஸ்திரீகளில் வெகு சிலரே உணர்கின்றனர். உணருபவர்கள் மேலான சரும டானிக்கைத்தான் உபயோகிக்கிறார்கள். டாகெட் & ராம்ஸ்டெல்ஸ் சிறந்த கோல்ட் க்ரீமை உபயோகித்தால் சருமத்துவாரங்கள் சுத்தமடைந்து, இரத்த ஓட்டம் பெருகி, உங்களுக்கு வாலிபமும், புத்துயிரும் உண்டாகும். யாவரும் போற்றும் வசீகரம் ஏற்படும். வியர்வையால் ஏற்படக்கூடிய அசுத்தத்தையும் அகற்றும். இன்றே ஒரு புட்டி வாங்கி, புதிய சரும உல்லாசத்தை அனுபவியுங்கள்.



Daggett & Ramsdell

D 57—



சென்னை மாகாண கருணீக மாதர் மகாநாடு வேலூரில் நடைபெற்றது.

இதை இவ்விதம் சொல்லுவாள்.

இந்த ஒட்டியாணம் பார்வைக்கு ரொம்ப நன்ருகத்தான் இருக்கிறது. இடுக்குகள் வழியாகப் புடவை தெரிவது, இரத்தினம் இழைத்தாற்போல் பார்வைக்கு நேர்த்தியாக இருக்கிறது. மேலும், ஒரே பட்டையாகச் செய்யாமல், ஒட்டை, ஒட்டையாகச் செய்வதினுல், குறைந்த பவுன்களுக்கு நல்ல உறுதியாகச் செய்யலாம். இந்த மேகலையைச் சற்று அகலமாகவே செய்ய வேண்டும். இதைப் பல தினுசுகளில் செய்கிருர்கள். பாய்ப்பின்னல் மாதிரியில், நடுவில் இடைவிட்டுப் பண்ணுகிருர்கள். இடை, இடையே கத்தரித்து எடுத்த மாதிரியிலும் செய்கிருர்கள். இந்தத் தினுசில்தான் லேடி சின்னையா தன் பேத்தி ஒட்டியாணத்தைப் பண்ணி இருந்தாள். எவ்வளவோ அழகாக இருந்தது. உன் அக்காளையும் இதே மாதிரியில் செய்யச்சொல்லு.

* * * *



டாக்டர் வி. எஸ். கிருஷ்ணசாமியின் குமாரி சிதாலக்ஷ்மிக்கும் கிண்டி கிங் இன்ஸ்டிட்யூட் மானேஜர் ஸ்ரீமான் அருணஜடை அய்யர் குமாரன் ராஜகோபாலனுக்கும் சமீபத்தில் விவாகம் நடந்தது.

### மோர் சாம்பார்

நீ சொல்லுவது புளிசேரி என்று எண்ணுகிறேன். மோர் சாம்பாருக்குப் புளித்தண்ணீருக்குப் பதிலாக மோரை உபயோகிக்க வேண்டும்; புளியே சேர்க்கக் கூடாது. அதிகப் புளிப்பில்லாத கெட்டி மோரை வைத்துச் சாம்பார் பண்ணினுல் நல்ல ருசியாக இருக்கும். சாம்பாருக்குத் தயாரிப்பது போல் முதலில் பருப்பை நன்ருக வேக வைத்துக்கொள்ள வேண்டும். கத்தரிக்காய், வெண்டைக்காய், முருங்கக்காய், பூசணிக்காய் எதையும் மோர் சாம்பாருக்குத் தாளுகப் போடலாம். வெண்டைக்காயாக இருந்தால் வதக்கிக் கொள்ள வேண்டும். மற்றையத்தான்களைக்கொஞ்சம்உப்பு, மஞ்சள் பொடிபோட்டு வேக வைத்துக்கொள்ள வேண்டும். அடுப்பில் மோரை வைத்து, இதில் வெந்த தான், பருப்பு இவைகளைக் கொட்டித் தாளிக்க வேண்டும். இந்த சாம்பாருக்குப் பொடிபோட்டுப் பண்ணினுல் நன்ருக இருக்காது. காரம் வேண்டிய அளவுக்குக் கிள்ளு சாம்பாருக்குத் தாளிப்பதுபோல் மிளகாய்ப் பழத்தைத் தாளிக்க வேண்டும். வெந்தயம், கடுகு இரண்டையும் கூடச் சேர்த்துத் தாளிக்க வேண்டும். இந்த சாம்பார் ருசியாகவும், வாசனையாகவும் இருக்கும். இஷ்டமானுல் பெருங்காயத்தையும் தாளிக்கலாம். இந்த வாசனை பிடிக்காதவர்கள் கரைத்து விட்டுக்கொள்ளலாம்.

புளிசேரிக்குப் பாதிமோர், பாதிப் புளி சமமாகக் கலந்து, மோர்க்குழம்புக்கு அரைப்பது போல் தேங்காய், பச்சை மிளகாய் இவைகளை அரைத்து விட்டுப் பண்ணுகிருர்கள். இதில் மாங்காயையும் போட்டுச் சிலர் செய்கிருர்கள்.

* * * *



பெங்களூர் ஓரியண்டல் இன்ஷியூரனஸ் கம்பெனி ஏஜன்ஸி மானேஜா ஸ்ரீமான் பி. வி. சுப்ரமணிய அய்யர் குமாரன் ஸ்ரீனிவாஸனுக்கும் ஆலத்தூர் ஸ்ரீமான் பி. ஆர். சுப்ரமணிய அய்யர் குமாரி ராதாவுக்கும் விவாகம் நடந்தது.

"ZANDU"
KESARI JIVAN
THE IDEAL
TONIC FOOD
SOLE AGENTS DAMODER & Co.
78, CHINA BAZAAR ROAD MADRAS.

கியாரண்டியுள்ள அசல்பவுன்
வெள்ளிசாமான்களுக்கு
K. ராமசந்திர அய்யர் & Co.
நகைவியாபாரிகள்
237. கோவிந்தப்பநாய்கன் தெரு.
பிராஞ்சு: மாம்பலம். மதாஸ்



கூந்தல் மட்டுமேல்லாமல், அழகிய சுருண்ட முன் நெற்றி மயிரையும், காதோரங்களிலும், புறங்கழுத்திலுமுள்ள ஸூக்ஷ்மமான கேசராசிகளையும் வளரச் செய்வதால் கேசவர்த்தினி, மனம் கவரும் ஸௌந்தர்யத்தை மாதர் முகத்துக்குத் தருகிறது. கூந்தல் அழகுக்கும் முக அழகுக்கும் ஒருங்கே காரணமாவது

**கேசவர்த்தினி**

ஒன்றே.

மாத உபயோகத்துக்கும் போதுமான புட்டி விலை அணு 12.
மேற்செலவு வேறு.

தயாரிப்பவர்:— தென் இந்திய ரஸாயனசாலை,
மயிலாப்பூர், சென்னை.

**ரஞ்சிதமான துணிமணிகள்**

எம்மிடம் ஏராளமாக இருக்கின்றன. எல்லாம் மனதிற்கு உகந்த ரகங்கள்; வந்து பாருங்கள்; வேண்டியதை மகிழ்வுடன் தெரிந்தெடுங்கள்.

என். வி. பாலுசாமி அய்யர் & ஸன்,

மூலைக் கடை

நைனியப்ப நாயக்கன் வீதி, மதராஸ்.


சமீபத்தில் ஆகாய விமானத்தில் உலக யாத்திரை செய்த மிஸ் அமிலியா இயர்ஹார்ட் கராச்சியில் வரவேற்கப்பட்டார்.

# பிரபஞ்ச வர்த்தமானம்

## விண்ட்ஸர் கோமகன் தானம்

போலந்து தேசத்தைச் சேர்ந்த இரு வாலிபக் காதலர்கள் கல்யாணம் செய்து கொண்டு சந்தோஷமாக வாழ முடியுமாறு விண்ட்ஸர் கோமகன் 100 பவுனுக்குச் "செக்" அனுப்பியிருக்கிறார். வியன்னா ஸர்வகலாசாலையில் படிப்பை முடித்த டாக்டர் கார்பெல், ஸ்டானிஸ்லாவில் வசிக்கும் ஒரு அழகான பெண்ணிடம் காதல்கொண்டார். ஆனால், ஏழ்மை காரணமாக அவர்கள் கலியாணம் செய்து கொள்ள முடியவில்லை. சில தினங்களுக்கு முன் அவர்கள் விண்ட்ஸர் கோமகனுக்குப் பாராட்டுதல் கடிதமொன்று எழுதி, அதில் தங்கள் நிலைமையையும் தெரிவித்திருந்தனர். அவர்கள் ஆச்சரியப்படுமாறு 100 பவுனுக்கு ஒரு 'செக்' வந்துவிட்டது. சீக்கிரத்தில் கல்யாணம் நடக்கும்.

* * * *

## ஜனநாயக நாடுகளின் விபரீதம்

மிஸ்டர் லாயிட் ஜார்ஜ் பாஸ்க் (ஸ்பெயின்) குடியரசுத் தலைவருக்கு அனுப்பியுள்ள ஒரு தந்தியில பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்:—

புராதனமானதும் கௌரவம் வாய்ந்ததுமான ஒரு சமூகத்தின் சுதந்திரத்தை ஐரோப்பிய சர்வாதிகாரிகள் நசுக்கி ஒழிப்பது கண்டு உலகிலுள்ள ஜனநாயக தேசங்கள் ஒரு கண்டன வார்த்தைகூட வெளியிடாமல் அதை அனுமதித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து நான் திடுக்கிட்டுள்ளேன். தங்கள் தந்தைமார்களின் சுதந்திரமோகம் காரணமாகச் சிறு குழந்தைகள் கொன்று குவிக்கப்படுவதைச் சுதந்திரமும் வலிமையும் கொண்ட எந்நாடாவது பார்த்துக்கொண்டு வாளாவிருக்குமாயின், அந்நாட்டுக்கு அதைப்போன்ற அபகீர்த்தி ஒன்றுமில்லை. பாஸ்க் சுதந்திரத்தைப் பாதுகாக்கப் போராடி வருவோர்களின் சக்தி வரவரப் பெருகக் கடவுள் அருள்புரிவாராக.

* * * *

## ஜேர்மனியைச் சங்கத்தில் சேர்க்க முயற்சி

சர்வதேசச் சங்க உடன்படிக்கையைச் சமாதான ஒப்பந்தங்களிலிருந்து பிரித்துவிட வேண்டுமென ஏகாதிபத்திய மகாநாடு விடுத்த யோசனை ஜெர்மனியில் உற்சாகத்துடன் வரவேற்கப்பட்டிருக்கிறது. இது மீண்டும் ஜெர்மனி சர்வதேசச் சங்கத்தில் சேருமாறு செய்வதற்கான ஒரு நடவடிக்கையென அந்நாட்டில் கருதப்படுகிறது. பிரஞ்சு சர்க்கார் இதற்கு எவ்விதத்திலும் முட்டுக்கட்டைபோடுவரென எதிர்பார்க்கப்படவில்லை.

* * * *

## பிரேஞ்சு மந்திரிசபை ராஜிநாமா

பிரெஞ்சு பிரதிநிதிகள் சபையில் பிரதமமந்திரி சர்க்காரின் விசேஷ அதிகார மசோதாவைப் பிரேரித்தார். தற்போதுள்ள மோசமான செல்வ நிலைமையில் சர்க்கார் தங்கள் உசிதம்போல் நடவடிக்கை எடுத்துக் கொள்ள அவர்களுக்கு ஜூலை 31-ந் தேதி வரை விசேஷ அதிகாரமளிக்க வேண்டுமென்பது இம்மசோதாவின் கருத்து. நிதி மந்திரியான மிஸ்டர் வின்ஸன்ட் ஆரியல் முதலில் பேசுகையில் சென்ற சில வாரங்களில் பல கோடி பிராங்குகள் பிரான்ஸிலிருந்தும் வெளியேறி விட்டனவென்றும், நெருக்கடியான செலவ நிலைமை ஏற்பட்டிருக்கிறதென்றும் கூறினார்.

மசோதா தோற்றுப் போய் விட்டதால், பிரதம மந்திரியும் சர்க்காரின் மந்திரி சபை கலைந்துவிட்டது. மந்திரிகள் ராஜிநாமாச் செய்து விட்டனர்.

* * * *

## துருக்கியில் கலகம்

துருக்கி டோக் பிரதேசத்திலுள்ள கூர்து ஜாதியினர் பெருங் கலகம் செய்து வருவதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. சர்க்காரின் சீர்திருத்த யோசனைகளைக் கண்டு அந்த ஜாதியின் தலைவர்கள் மிக்க ஆத்திரமடைந்திருப்பதே இக் கலகத்திற்குக் காரணம்.

கலகக்காரர்களை எதிர்த்து அடக்கச் சர்க்கார் பல விமானங்களுடன் 25000 துருப்புகளை அனுப்பினர். கலகக்காரர்களில் உயிரிழந்தோர், காயமடைந்தவர்கள் இவர்களின் மொத்த தொகை 5000-க்குமேலிருக்கும் நிலைமை இப்பொழுது முற்றிலும் கட்டுக்கடங்கியதாகவே இருக்கிறது.

சாகசா தாப்பில் 13 பேர் கொல்லப்பட்டதுடன் 18 பேர் காயமடைந்தார்கள்.

For any type of Insurance in any Company of the World, or purchase or sale of any article and any other work, please refer to us. Wanted men and women to work in their spare time on a monthly remuneration of Rs 200 and more. Send us Rupees Twenty as a deposit with the application. Send Rs. 13 by cheque or Money Order, you may get Rs. 79687! For details apply to the undersigned with four annas stamps. Quote birthdate of all the members of your family.

**Bhogilal Hiralal Shah & Co**
Post Box No 713 (Bombay India)

4 5 6 7 8 9 10
ரங்கூன் வைரங்கள்
கல் 1க்கு
0-2-6 0-3-3
பி. கோபாலசுவாமி நாயுடு & சன்ஸ்
பறங்கிமலை, P.O. * சென்னை

அபார சக்திவாய்ந்த டானிக்!
S.K.M.
Dr N V ஸ்ரீராமாச்சார்லுவின்
—ஸித்தகல்ப—
மகரத்வஜம்
60 மாத்திரை ரூ. 10.
30 மாத்திரை ரூ. 5.
விவரத்திற்கு எழுதவும்:
மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடெட்.,
த. பெ. நெ. 151. (ஸ்தாபனம் 1915 ஷு) 284, எஸ்பிளனேட் மதராஸ்.

NO MORE GREY HAIR


வெள்ளையாயிருக்கும் கூந்தலை இயற்கை அழகுடனிருக்கச் செய்யுங்கள்—கேஷ்கலா கூந்தலுக்குப் புதிய அழகைக் கொடுக்கும்—கேஷ்கலாவையே உபயோகித்து உண்மையை உணர்வீர்.
KESHKALA
RESTORES NATURAL TINT
Obtainable from:—
அப்பா & கம்பெனி, 286, சைனாபஜார் ரோட், மதராஸ்; வி. எம். ஸேத், 3, பந்தர் தெரு, மதராஸ். ஸேய்த் ஹஸ்ஸான & கம்பெனி, 166 பிக் பஜார், பெங்களூர் ஸிடி. டி. ஜெ. பாரிக் & கம்பெனி, ஜும்மா மாஸ்ஜித். ஸெக்கந்தராபாத்; ஸுல்தான் பஜார், ஹைதராபாத். எஸ். பி. பெய்வா, பிரவட் தெரு, கொழும்பு.
Further Inquiries to:—THE KESHKALA CHEMICAL CO., P. O. Box No. (M) 5506. Bombay 14.

### ரூஸ வல்ட் திட்டத்திற்கு எதிர்ப்பு

மிஸ்டர் ரூஸ்வெல்டைத் தலைவராகக்கொண்ட ஜனநாயகக் கட்சியில பிளவேற்படுமோவென அஞ்சத்தக்க நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதை முன்னிட்டுத் தலைவர் ரூஸ்வெல்ட் காங்கிரஸைச் சேர்ந்த நானூறு அங்கத்தினர்களுடன் ஜெப்பர்ஸன் தீவில் அந்தரங்கமாகக் கலந்து பேச ஏற்பாடு செய்திருக்கிறார்.

ஸுப்ரீம் கோர்ட் மசோதா, வேலை நிறுத்தங்கள்பற்றியும் பொருளாதார முன்னேற்ற விஷயத்திலும் சர்க்கார் கையாளும்கொள்கை,இவை சம்பந்தமாகவும் ஜனநாயகக் கட்சியில் பகிரங்கமாகப் பிளவேற்படக் கூடுமென மிஸ்டர் ரூஸ்வெல்டின் அந்தரங்கக் காரியதரிசிகள் அவரிடம் தெரிவிப்பதாகச் சொல்லப்படுகிறது.

ஒரு முன்னேற்றக் கொள்கையை நிறைவேற்றிவைக்கத் தேச மக்கள் தமக்கதிகாரம் அளித்திருக்கின்றனரென்றும், தாம் அதை நிறைவேற்றி வைக்கவில்லையாயின், ஜனங்கள் ஜனநாயக முறையில் நம்பிக்கை இழந்து மிக்க அபாயகரமான மார்க்கங்களைப் பின்பற்றக்கூடுமென்றும் மிஸ்டர் ரூஸ்வெல்ட் கருதுகிறார்.

* * * *

### முஸோலினியின் சீற்றம்

ஸ்பெயின் யுத்ததில் கூடலஜாரா போர்முனையல் இத்தாலியர் பின்வாங்கியது பற்றி அந்நியப் பத்திரிகைகளில் வெளியான அவதூறுகளுக்கு ஸீனர் முஸோலினி மிக்க ஆத்திரத்துடன் பதில் விடுத்திருக்கிறார். இப்பதில் ஒரு இத்தாலியப் பத்திரிகையல் வெளியாகியிருக்கிறது. அது முஸோலினி வரைந்ததென்பது பற்றிச் சிறிதும் சந்தேகமில்லை. அதன் முக்கிய பாகங்கள் வருமாறு:—

“பாஸிஸ்ட் கோஷ்டியைச் சேர்ந்தவர்களில் நூற்றுக்கணக்கானவர் மாண்டனர். 2000 பேர் காயமடைந்தார்கள். இதற்கு நாங்கள் பழிக்குப்பழி வாங்கியே தீர்வோமென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. எங்கு, எப்பொழுது, எவ்வாறு பழிக்குப்பழி வாங்குவோமென இப்பொழுது சொல்வதற்கில்லை.

“காயமடைந்த பாஸிஸ்டுகளை ஆஸ்பத்திரிகளுக்குக் கொண்டுபோய்ச் சேர்க்குமுன், பாஸிஸ்ட் இயக்கத்திற்கு விரோதிகளாயுள்ள பத்திரிகைகள் பொய்யான அவதூறுகளையும் துவேஷக் கூற்றுகளையும் சரமாரியாகப்பிரசுரிக்கத் துவக்கிவிட்டன. கொள்ளையருக்குரிய இத்தொழிலில் முன்னணியில் நின்றவை பிரிட்டிஷ் பத்திரிகைகள்தான். பிரான்ஸிலுள்ள தீவிரவாதப் பத்திரிகைகளும் அவைகளுடன் சேர்ந்துகொண்டிருக்கின்றன.”

• • • •

### பாடும் சுண்டெலி

மாஸ்கோ மிருகக் காட்சிச் சாலையில் பாடும் சுண்டெலியொன்றிருக்கிறது அது காலையிலும் மத்தியானத்திலும் சாயங்காலத்திலும் பாடுகிறது அதனிடத்தில் எல்லோரும் அளவு மீறிய பக்ஷம் காட்டி வருகிறார்கள்.

* • * *

### ஜேர்மனியில் ரப்பர் இறக்குமதி வரி

ஜெர்மனியில் இதுகாறும் இறக்குமதி செய்யப்படும் ரப்பருக்கு இறக்குமதி வரியில்லாமலிருந்தது. இனி ஜெர்மனியில் 100 கிலோகிராம் எடையுள்ள ரப்பருக்கு 125 மார்க்குகள் இறக்குமதி வரி விதிக்கப்படும்.

* • * *

### ஹிட்லர், கோயரிங் பெயர் வைக்கக் கூடாது

ஜெர்மன் குழந்தைகளுக்கு “ஹிட்லர்” என்று பெயர் வைக்கக்கூடாதென ஏற்கனவே ஒரு அறிக்கை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது வெளியாகியுள்ள அறிக்கையில்கோயரிங்,கபல்ஸ் இப்பெயர்களையோ, வேறு பிரபல அரசியல் வாதிகளின் பெயர்களையோ ஜெர்மன் குழந்தைகளுக்கு வைக்கக்கூடாதெனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சமீபத்தில் ஒரு பெண் குழந்தைக்கு “ஹிட்லரிக்” எனப் பெயர் வைக்க அனுமதி கோரப்பட்டது. ஆனால் அதிகாரிகள் அனுமதி மறுத்துவிட்டனர்.

* • * *

## இந்திய வர்த்தமானம்

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

### பிரிட்டிஷ்பத்திரிகை மன்னிப்புக் கேட்கிறது.

ஆண்டு ராஜாசாகிப் தமது சமஸ்தான ஸ்திரீ பிரஜைகளைத் தேகக் கட்டுள்ளவர்களாக மெலியச் செய்வதாக ஒரு தலைப்புடன் “ஸண்டே ரெபிரீ” என்ற லண்டன் பத்திரிகை ஆண்டு ராஜாவைப் பற்றி அவதூறாக எழுதியதற்கு இப்பொழுது நிபந்தனையின்றி மன்னிப்புக் கேட்டுக்கொண்டு 2000 பவுன் மானநஷ்ட ஈடும் கொடுத்திருக்கிறது.

சென்ற ஜனவரி 3-ந் தேதி வெளியான இப்பத்திரிகையில் இக்கட்டுரை வெளியாகி யிருக்கிறது. ஆண்டு ராஜா சூரிய நமஸ்காரம் என்ற ஒரு புதிய முறை தேகாப்பியாசத்தைத் தமது சமஸ்தான ஸ்திரீகளுக்காக ஏற்படுத்தியிருப்பதாகவும், இந்தத் தேகாப்பியாசம் செய்யும் ஸ்திரீகள் முக்கியமாக ராஜாசாகிபின் அந்தப்புரத்திற்குச் சேர்த்துக்கொள்ளப்படுவதாக வதந்தியிருக்கிறதென்றும் இப்பத்திரிகை எழுதியிருந்தது.

• • * •

### கருங்குழி பார்ஸல் வழக்கு

கருங்குழி பிரேதப் பார்ஸல் வழக்கைப்பற்றி எம். ராமானுஜத்தின் தாயார் சென்னை சர்க்காருக்கும் வைஸிராய்க்கும் செய்துகொண்டிருக்கும் மனுவிருந்து மற்றும் பல விவரங்கள் தெரியவருகின்றன. எதிரியான ராமானுஜம் கண்ணனூர் ஜெயிலில் தண்டனை அனுபவித்து வருகிறார்.

கொண்டித்தோப்பு மெத்தை வீட்டறையில் சீதம்மாள் கொல்லப்பட்டாளென அவ்வழக்கில் கூறப்பட்டது. அவ்வறைக்குப் போகும் மாடிப்படியின் அளவையும் சீதம்மாளின் சவ மடங்கிய பார்சலின் அளவையும் பார்த்தால் சவப் பார்சலை மாடிப்படி வழியாகக் கொண்டுவர முடியாதென்று தெரியவருமென்றும் மாடிப்படி வழி மிகவும் குறுகியதென்றும் ராமானுஜத்தின் தாயார் மனுவில் கூறுகிறார். இரண்டின் அளவையுங்கூட அவர் எடுத்தனுப்பியிருக்கிறாரென்றும் ஸ்தலத்தின் அளவையும் பிரேதப் பெட்டியின் அளவையும் காட்டப் போட்டோக்களும் எடுத்தனுப்பப்போகிறாரென்றும் தெரிகிறது. இம்மாதிரியே ராமானுஜமும் ஒரு மனு தாக்கல் செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

* * * *

### ராணுவச் சட்டக் கைதிகளுக்கு விடுதலை

1919-ம் வருஷத்திய ராணுவச் சட்டக்கைதிகள் எல்லோரையும் உடனே விடுதலைசெய்யும்படிப் பஞ்சாப் கவர்ன்மெண்டு முதல் மந்திரி உத்தரவிட்டிருப்பதாகத் தெரிகிறது. இவர்கள் மொத்தம் 12-பேர்கள் இருக்கின்றனர்.

* * * *

**பயனற்றவை வேண்டாம்.**

இந்த ஆயிலை உபயோகித்தால் தலை நரை ஏற்படாது; வெள்ளை மயிர் கறுமை பெறும். தவறினால் இரட்டிப்பு விலையைத் திருப்பிக் கொடுக்க உத்தரவாதம். பாதி நரைக்கு ரூ. 5; அதிக நரைக்கு ரூ 9. BAL KALA STORES., P. O. Kansisimri, Darbhanga.)

**CATARACT**

and all Eye diseases cured radically by, COCOANUT Brand LOTUS Honey. World-wide Reputed and Tested ½ Dram Re. 1-4, 1 Dram Rs. 2.

**ULCERINE**

A sovereign remedy for all sorts of Boils, Piles, Sinus, Fistulla Carbuncles, Jangrenes, Foul-ulcers operated wounds, etc. Bottle Rs. 1-4 For genuineness of these products All-India Exhibition awarded medals. Free details from:-

NEW FORMULA Co., Kandi (Bengal).

**Price Re. 1-4 only !**

Even new beginners can easily take



Card size (2" x 1½") photos of any thing in a moment with this camera After learning the art with this, an unemployed may earn Rs 5 daily 1 Doz ptg Paper Film, Developing Chemicals and simple Directions etc are given FREE with each Camera. PRICES: Box Camera No 2, Re 1-4, No 1 Rs 2-8 Folding Camera as illustrated above Rs 3. Superior Rs 4-8 Extra films at Re. 1 per Doz. Printing paper at As 6 per Doz Postage packing As. 10

YOUNG INDIA WATCH CO.,

(Depot. 12)

1, Mechua Bazar Street Calcutta.

BLACKLOCK & MACARTHUR LTD., GLASGOW




வெள்ளை வர்ணத்தில் 541 வெள்ளைதான் உயர்ந்தது. வெண்மை மாறாது. வெடிக்கவும் செய்யாது. அதிக ஸனனமாதலால் ஆண்டுவரும். 541 ஈய வெள்ளையை வாங்கி உபயோகித்தால் கூலி மிச்சமாகும். அடிக்கடி வர்ணம் கொடுக்கவேண்டிய அவசியமிராது. 541 டெக்கின்பேரில் மான்மார்க்கும் இரண்டு ஈய வீல்களும் இருக்கிறதென்பதைக் கவனித்துப் பார்த்து வாங்குங்கள். போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள். செந்தூரத்தில் “மான்மார்க்” செந்தூரம்தான் உயர்ந்தது. இவைகள் எல்லா வர்ண வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்.

Sole Agents: M. R. V. AIYER & Co., 49, பந்தர் தெரு, மதராஸ்





மஹாபலிபுரத்திலுள்ள பாண்டவர் ரதங்கள்

மஹாபாரதம் ஆஸ்வமேதிகபர்வம்

# கிருஷ்ணன் அநுகீதை உபதேசம்

—:[O]:—

வியாஸர் மருத்தன் கதையைச் சொல்லி யாகம் செய்யும்படி யுதிஷ்டிரருக்குப் புத்திமதி சொன்ன பிறகு கிருஷ்ணனும் யுதிஷ்டிரருக்குப் பின்வருமாறு ஆறுதல் வார்த்தைகளைச் சொன்னர்:—காம முதலிய எல்லாம் ஸம்ஸாரத்தைக் கொடுக்கக்கூடியவை. சம முதலானவை மோக்ஷத்தைக் கொடுக்கக்கூடியவை. இவ்வளவுதான் அறியவேண்டும். வீணான வார்த்தையால் பயனில்லை. உம்மால் செய்யப்படவேண்டிய காரியம் செய்யப்படவில்லை. உமது சரீரத்திலிருக்கும் அக்ஞான ரூபமான சத்ருவைத் தெரிந்துகொள்ளவில்லை. இந்த விஷயமாக இந்திரனுக்கு வ்ருத்ரனுடன் யுத்தம் நடந்த விதத்தைச் சொல்லுகிறேன்.

முற்காலத்தில் வ்ருத்ரன் பூமியை வியாபித்துக்கொண்டான். (வ்ருத்ரன் என்பதற்குப் பின்கண்ட கருத்து சொல்லப்படுகிறது. அஹங்காரமானது ஸ்தூல சரீரத்தை ஆத்மா என்று எண்ணிற்று. பிறகு பிரும்மாண்டத்தையும் தனக்கு விஷயமாக எண்ணிற்று. உடனே ஆத்மா விவேகத்தையடைந்து சரீரம ஆத்மா இல்லை என்று தெரிவித்தது. பிறகு அகங்காரமானது சந்திர லோகத்தில் போகத்திற்காகக் கிடைத்த ஜலமயமான திவ்ய சரீரத்தை ஆத்மாவென்று கருதி, திவ்யலோகம் தன்னுடையதென்று எண்ண ஆத்மா விவேகத்தால் அந்த எண்ணத்தைப் போக்கிற்று பிறகு அகங்காரமானது, கிடைத்த தேஜோமயமான சரீரத்தை ஆத்மா என்றும் அங்கு காணப்படுவதைத் தன்னுடையதென்றும் நினைக்க, ஆத்மா விவேகத்தால் அந்த எண்ணத்தையும் போக்கிற்று பிறகு அகங்காரமானது, கிடைத்த வாயு மயமான ஸமஷ்டி சரீரத்தை ஆத்மாவாகவும் பிரம்ம லோகத்தில் நினைத்த மாத்திரத்தில் கிடைத்தவைகளைத் தன்னுடையவை என்றும் நினைத்தது. ஆத்மா விவேகத்தால் அதையும் போக்கிற்று. பிறகு அஹங்காரமானது, கிடைத்த ஆகாய சரீரத்தை ஆத்மா என்றும் அதிலுள்ள விஷயத்தைத் தன்னுடையதென்றும் நினைக்க ஆத்மா விவேகத்தால் அந்த எண்ணத்தையும் போக்கிற்று. பிறகு அஹங்காரமானது ஆத்மாவைத் தெரிந்துகொண்டு அதன் குணங்களில் அபிமானம் பெற்றது. பிறகு குருவானவர் உபதேசத்தால் அஹங்காரத்தை விலக்கி ஆத்மாவுக்குப் பிரம்ம ஞானத்தை யுண்டு பண்ணினர் ) பூமி வியாபிக்கப்பட்டதைக் கண்டு கந்தமென்னும் விஷயமானது அபகரிக்கப்பட்டவுடன் பூமியை அபஹரித்ததாலுண்டான துர்க்கந்தமென்னும் விஷயம் உண்டாயிற்று. இதைக்கண்டு இந்திரன் கோபம்கொண்டு வ்ருத்திரன் மீது வஜ்ராயுதத்தைப் பிரயோகித்தான். வ்ருத்திரன் ஜலத்தில் ஒளிந்தான். அதிலும் இந்திரன் வஜ்ராயுதத்தைப் பிரயோகம் செய்தான். வ்ருத்திரன் ஒவ்வொரு இடமாக ஒளிந்துகொண்டும் பயனில்லாமல் இந்திரன்மீது பிரவேசித்தான். இந்திரனுக்குப் பெரியமயக்கம் உண்டாயிற்று. வஸிஷ்டர் அவனுக்குப் பிரக்ஞை வரும்படிச் செய்தார். பிறகு இந்திரன் சரீரத்திலிருந்த வ்ருத்திரனைக் கொன்ருன்.

சாரீரம் மானஸம் என்று இரண்டு விதமான வியாதிகள் உண்டாகின்றன. அவைகளின் பிறப்பு ஒன்ரேடொன்று சேர்ந்து இரட்டையாகவன்றி உண்டாகிறதில்லை. சரீரத்தில் உண்டாகும் வியாதி சாரீரமென்றும் மனதில் உண்டாகும் வியாதி மானஸமென்றும் சொல்லப்படுகின்றன. சீதம், உஷ்ணம், வாயு சரீரத்திலுண்டான குணங்கள் அககுணங்கள் சமமாகவிருந்தால் அதை ஆத்மா தன்னிலையில் இருப்பதற்கு அடையாளம் என்று சொல்லுகிருர்கள். உஷ்ணத்தால் சீதமும் சீதத்தால் உஷ்ணமும் தடுக்கப்படுகின்றன. ஸத்வம், ரஜஸ், தமஸ் மூன்றும் ஆத்மாவின் குணங்களாகக் கருதப்படுகின்றன. அந்தக் குணங்கள் ஸமமாகவிருந்தால் ஆத்மா ஸ்வஸ்தனுகவிருப்பதற்கு அடையாளமாகச் சொல்லுகிருர்கள். அவைகளுள் ஒன்று விருத்தியடைந்தால், அதை அடக்க உபாயம் உபதேசிக்கப்படுகிறது. மகிழ்ச்சியால் சோகமும், சோகத்தால் மகிழ்ச்சியும் பாதிக்கப்படுகின்றன. துக்கத்தை அனுபவிக்கும் ஒருவன் முன் சென்ற சுகத்தையும் சுகத்தையனுபவிக்கும் ஒருவன் முன்சென்ற துக்கத்தையும் நினைக்க விரும்புகிருன். நீர் துக்கத்தையனுபவிக்கும் போது அந்தத் துக்கத்தையும், சுகத்தையனுபவிக்கும் போது அந்த நல்ல சுகத்தையும் நினைக்க விரும்பவேண்டாம். தெய்வம் மிக்க பலமுள்ளது. அவ்யக்த ரூபமான மனத்தினுடைய அக்கரையை யோகத்தினுலும் கர்மங்களாலும் அடையவேண்டும். பாணங்களாலும், வேலைக்காரர்களாலும் பந்துக்களாலும் செய்யத் தகாததும் ஆத்மா ஒன்ருலேயே செய்யத் தக்கதுமான அந்த யுத்தம் உமக்குச் சமீபத்திலிருக்கிறது யுத்தத்தில் அந்த மனத்தை ஜயிக்காவிட்டால் துக்கப்படும் நிலையை அடைவீர். நீர் இதை தெரிந்துகொண்டால் கிருதகிருத்யராகிவிடுவீர். இந்தப் புத்தியையும் பிராணிகள் உத்பத்தி லயங்களையும் நன்கு நிச்சயித்துத் தகப்பன் பாட்டன்மார்களின் நடையை அனுசரித்து ராஜ்யத்தை ஆளுவீராக.

இவ்வாறு தேற்றப்பட்ட யுதிஷ்டிரர் மனக்லேசத்தை விட்டு அனைவருடனும் ஹஸ்தினுபுரம் வந்து ராஜ்யத்தைப் பரிபாலித்து வந்தார். அவர் ராஜ்யபாரம் செய்து வருகையில் ஜனங்கள் மிக்க நன்மையடைந்து க்ஷேமமாகவிருந்த


மூலவியாதி அடியோடு நீங்கும்

“ஹடன்ஸா”




இரத்தம் வடிதலை நிறுத்தி மூலவியாதி எந்த நிலைமையிலிருந்தாலும் குணப்படுத்துகிறது. உலகப்பிரசித்திப்பெற்ற வைத்தியர்களால் சிபார்சு செய்யப்பட்டது. எல்லா ஆஸ்பத்திரிகளிலும் உபயோகிப்பது. மூலம் பௌத்திரம் வியாதிகளுக்கு பத்திரமும் சீக்கிரமுமான நிவாரணி. ஆபரேஷன் செய்யவேண்டிய அவசியம் இல்லை.

ஸ்டாகிஸ்ட்டுகள் :

தாதா & கம்பெனி, 52, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்.

னர். நாடு செழிப்புற்று விளங்கியது.

யுதிஷ்டிரர் ராஜ்யத்தை ஆண்டு வருகையில் சில காலம் கழித்து கிருஷ்ணன் தான் த்வாரகைக்குப் போகவேண்டுமென்றும் அவ்விஷயத்தை யுதிஷ்டிரருக்குத் தெரிவிக்கும்படியும் அர்ஜுனனிடம் சொன்னார். அர்ஜுனனும் அவ்வாறே சொல்வதாகக் கூறிவிட்டு யுத்தத்தின்போது தனக்கு உபதேசித்த விஷயங்களைக் கவலையினால் மறந்துவிட்டதாயும், ஆகையால் அந்த விஷயங்களை மறுபடி சொல்ல வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டான்.

கிருஷ்ணன் இதற்குப் பதில் சொன்னதாவது:—நான் உனக்கு ரஹஸ்யமும் ஸனாதனமுமான தர்மத்தின் ஸ்வரூபத்தையும் சாஸ்வதமான எல்லா உலகங்களையும் சொன்னேன். நீ புத்திக் குறைவால் அதனைக் கிரஹித்துக் கொள்ளவில்லை. இப்பொழுது மறுபடியும் அது முழுவதயும் சொல்லமுடியாது. இப்பொழுது புராதனமான ஒரு இதஹாஸத்தைச் சொல்லுகிறேன். அதைத் தெரிந்து கொண்டால் மேலான கதியை அடைவாய். ஒரு பிராம்மணர் பிரம்மலோகத்திற்கும் ஸ்வர்க்க லோகத்திற்கும் போய்விட்டு வந்தார். அவர் எனக்குப் பின்கண்ட விஷயத்தைச் சொன்னார்:—ஒரு சமயம் காஸ்யபர் ஒரு பிராம்மணரை அடைந்த போது காஸ்யபருக்கு அந்தப் பிராமணர் சொன்னதாவது:— மனிதர்கள் பலவிதக் கர்மங்களால் இவ்வுலகில் அடைய வேண்டியதையும் தனித்த புண்ணியங்களால் தேவலோகத்தில் இருப்பையும் அடைகிறார்கள். ஓரிடத்திலும் அழிவற்ற சுகத்தை அடைகிறதில்லை. ஓரிடத்திலும் சாஸ்வதமாக இருக்கிறதில்லை. சிரமப்பட்டு அடையப்பட்ட பெரிய ஸ்தானத்தினின்றும் அடிக்கடி நழுவுதல் ஏற்படுகிறது.

காஸ்யபர் அவரிடம் பின்கண்ட கேள்விகளைக் கேட்டார்:— ஜீவன் சரீரத்திலிருந்து எவ்விதம விலகுகிறது? எவ்விதம் சரீரத்தை அடைகிறது? ஜனன மரணமாகிற ஸம்ஸாரத்தையடைந்த ஜீவன் கஷ்டமான அதிலிருந்து எவ்விதம் விடுதலையடைகிறது? ஆத்மாவானது பிரகிருதியையும் அதனாலுண்டான சரீரத்தையும் எவ்விதம் விடுகிறது? சரீரத்திலிருந்து விடுபட்டு வேறொன்றை எவ்விதம் அடைகிறது? இந்தப் புருஷன் சுபாசுப கர்மங்களை எவ்வாறு அனுபவிக்கிறான்? சரீரமற்ற ஆத்மாவுக்கு சரீரத்திற்குக் காரணமான கர்மம் எங்கிருந்து வருகிறது?

பிராம்மணர் இந்தக் கேள்விகளுக்குப் பின்வருமாறு பதில் சொன்னார்:—கர்மங்கள் இந்த ஜன்மத்திலேயே சீக்கிரத்தில் பயனைத் தருபவைகளும் ஆயுளை விருத்தி செய்கின்றவைகளுமாகக் கருதப்படுகின்றன. மனிதன் இந்த ஜன்மத்தில் ஆயுளையும் கீர்த்தியையும் உண்டுபண்ணுகிற எந்தக் கர்மங்களைச் செய்கிறானோ அவைகள் வேறு சரீரமெடுத்து முழுதும் நசித்தபின் ஆயுளின் குறைவை அடைந்த அம்மனிதன் விபரீதமான கர்மங்களைச் செய்கிறான். விநாசம் நெருங்கின பொழுது அவனுடைய புத்தியும் மாறுகிறது. மனிதன் தானாகத் தன் தோஷங்களை விருத்தி செய்துகொண்டு மரணத்தை முடிவாகக் கொண்ட ரோகத்தையடைகிறான்; அல்லது கழுத்தில் சுருக்கிட்டுக்கொள்வது முதலிய காரியங்களைச் செய்கிறான்.

சரீரத்திலுள்ள உஷ்ணமானது கடுமையான வாயுவினால் தூண்டப்பட்டு விருத்தியடைந்து சரீரத்தில் ரவி எல்லாப் பிராணன்களையும் தகிக்கிறது. உஷ்ணமானது விருத்தியடைந்து ஜீவஸ்தானங்களான மர்மங்களைப் பிளக்கிறது. பிறகு ஜீவன் சரீரத்திலிருந்து விடுபடுகிறான். ஜீவனானவன் மர்மங்கள் பிளக்கப்படும்போது வேதனைகள் சூழ்ந்த ஸ்வரூபமுள்ளவனாகிச் சரீரத்தை விடுகிறான். எப்பொழுதும் எல்லாப்பிராணிகளும் ஜனன மரணங்களில் பயமுள்ளனவாகவும் சரீரங்களை விடுகின்றனவாகவும் காணப்படுகின்றன. மனிதன் கர்ப்பத்திலுள்ள சரீரத்தை யடையும்பொழுதும் கர்ப்பத்திலிருந்து வெளிப்படும் பொழுதும் அப்படிப்பட்ட வேதனையையே அடைகிறான்.

ஜீவன் சரீரத்திலிருந்து வெளிப்பட்டுத் தன்னுடையவைகளான நன்மையைச் செய்யும் புண்ய கர்மங்களாலும் பாவ கர்மங்களாலும் சூழப்பட்டவனும் அடையாளம் செய்யப்பட்டவனுமாகிறான். பிராணிகள் வஸிக்கும் இந்தப் பூமியானது கர்மபூமி ஆகையால் எல்லாப் பிராணிகளும் புண்ணிய பாப கர்மங்களைச் செய்து இவ்வுலகத்திலேயே தம் கர்மங்களால் பலவிதமான போகங்களை அடைகின்றன. இவ்வுலகத்திலேயே பாபகர்மங்களைச் செய்தவர்கள் நரகத்தையடைகிறார்கள். இந்தக்கதியானது இழிந்ததும் கஷ்டமுமானது. இதிலிருந்து மோக்ஷம் கிடைப்பது மிக அரிது. ஆகையால் ஆத்மாவை நன்கு ரக்ஷித்துக்கொள்ள வேண்டும்.

எந்த இடத்தில் சூர்யமண்டலமானது பிரகாசிக்கிறதோ அது புண்ணியம் செய்தவர்கள் வஸிக்கும் இடம். அவர்களெல்லாரும் கர்மங்களை அனுபவித்து நசித்தவுடன் அடிக்கடி அவ்விடங்களிலிருந்து கீழுலகத்திற்கு வருகின்றனர்.

(தொடரும்)


## ஈறுகள் கெட விடாதீர்கள்.

ஈறுகளைச் சுத்திசெய்யாமல் பற்களை மாத்திரம் சுத்தப்படுத்தும் பல்பசை பாதி வேலையைத்தான் செய்கிறது. ஏனெனில் பற்கள், ஈறுகள் இரண்டுதான் பாதுகாக்கப்பட வேண்டும்; அவற்றிற்குப் போஷாக்கும், வலுவு மூட்டப்பட வேண்டும். ஈறுகள் சரியாக இராவிடில், பற்களும் சரியாக இரா. "நீம் டூத் பேஸ்ட்" பற்களையும், வாயையும் நன்கு சுத்தகரிப்பதுடன், ஈறுகளையும் கெட்டிப்படுத்துகிறது. ஈறுகளிலிருந்து இரத்தம் வருவதை நிச்சயமாக நிறுத்துகிறது. பழங்காலத்தில் நம்முன்னோர்கள் வேப்பங்குச்சியை உபயோகித்தே அற்புதமான பற்களைப் பெற்று வந்தனர்; "நீம் டூத் பேஸ்ட்" அத்தனையும் அதன் சத்துக் தான். இன்றே "நீம் டூத் பேஸ்ட்" உபயோகிக்கத் தொடங்குங்கள்



'Neem' TOOTH-PASTE

கடை வேண்டுமானால் "மார்கோ ப்ரிஸ் நீம் டூத் பவுடர்" உபயோகியுங்கள். கல்கத்தா கெமிகல்.

NTP 6



Tele:—"SIMILICURE" Box 643 CAL

வெளிவந்து விட்டன!

# ஹோமியோ புத்தகங்கள்

ஹோமியோ வைத்திய முறை

தத்துவம்

தெலுங்குப்பதிப்பு விலை ரூ. 1 தான்.

M. BHATTACHARYYA & Co.,

Economic Pharmacy, 84, Clive Street, CALCUTTA.






போலிகளைக்கண்டுஉஷார் !!!

# அமிர்தாஞ்சனம்

சகலவலிகளையும் போக்கும் இந்திய திவ்யாமிர்தம்

அமிர்தாஞ்சனம் லிமிடெட்.

பம்பாய். மதராஸ், கல்கத்தா,



## தமிழன்பர்களுக்கு ஓர் நல்விருந்து!

புதுமைக்கவி ஸ்ரீ பாரதியாரின் நூல்களைப் படித்து ஆனந்த மடையுங்கள்

| | | |
|---|---|---|
| 1. | கவிதைகள் (8-பாகங்கள்) | ரூ. 2—8—0 |
| 2. | வசனங்கள் (6-பாகங்கள்) | ,, 2—0—0 |
| 3. | கதைக்கொத்து | ,, 0—8—0 |
| 4. | பகவத்கீதை | ,, 0—8—0 |
| 5. | கட்டுரைகள் பகுதி 1 தத்துவம் | ,, 0—10—0 |
| | ,, ,, 2 மாதர் | 0—8—0 |
| | ,, ,, 3 கலைகள் | ,, 0—8—0 |
| | ,, ,, 4 சமூகம் | ,, 0—12—0 |
| 6. | Bharathi and his works by Mr. C Visvanathan, Brother of Bharathi | 0 4 0 |

பாரதி பிரசுராலயம்,

திருவல்லிக்கேணி, சென்னை.



## காங்கிரஸ் மகாசபை சரித்திரம்

மூன்று பாகங்கள் விலை ரூ. 6.

மானேஜர், சுதேசமித்திரன் புத்தகசாலை, சென்னை.



# கங்காள மூர்த்தி

"கௌரீ குமாரன்"

இன்றைக்கு இருந்த ஊரில் நாளைக்கு இருக்காமல் ஊர் ஊராகத் திரிவதிலும் ஓர் ஆனந்தம் உண்டு. அதுவும், ஓர் இடத்தையடைந்தவுடன், இவ்விதம் பிரயாணம் செய்பவன் விரும்பிய பொருள் கைகூடும் என்று விதிக்கப்படுமாயின், அந்த ஆனந்தத்துக்கு அளவேயில்லை. அவ்வித நிலையையே தெரிவிக்கின்றது பரமசிவனுடைய உருவங்களுள் ஒன்றாகிய கங்காளமூர்த்தியின் உருவம்.

ஊர் ஊராகத் திரியும் அவஸரத்தையே தெரிவிக்கும் பரமசிவனுடைய மற்றொரு உருவமான பிக்ஷாடனமூர்த்திக்கும் கங்காளமூர்த்திக்கும் அதிக வேறுபாடு கிடையாது. இவ்விரு உருவங்களைப்பற்றித் தெரிவிக்கும் புராணக் கதைகளும் ஒன்றோடொன்று பிணைந்து உருத்தெரியாதபடி உள்ளன. இந்த உருவத்தைப் பற்றிக் கூர்ம புராணத்தில் கூறப்பட்டுள்ள கதை பின்வருமாறு:

ஒரு சமயம் தேவர்களுள் சிறந்தவர் யார் என்பதையறிய விரும்பிய ரிஷிகள் மேருமலையையடைந்து பிரும்மாவைக் கேட்டார்கள். உலகத்தின் சகல ஜீவராசிகளையும் சிருஷ்டிக்கும் தாமே உயர்ந்தவர் என்று பிரும்மா தெரிவித்தார். ஆனால் அச்சமயத்தில் அங்கே வந்த சிவபெருமான் தாமே உயர்ந்தவர் என்று கூறினார். அவருக்கு உதவியாக வேதங்களும் பிரணவமும் சாக்ஷி கூறின. ஆயினும் பிரும்மா ஒப்புக்கொள்ளவில்லை. சிவபெருமான் தமது அருளால் ஜ்யோதிர் மயமான ஒரு தூணைக் காண்பித்தார். அப்பொழுதும் பிடிவாதமாக இருந்த பிரும்மாவைக் கண்டு கோபங்கொண்ட சிவபெருமான், பிரும்மாவைக் கொன்றுவிடும்படி பைரவருக்கு ஆஞ்ஞாபித்தார். பைரவரும் பிரும்மாவைக் கொன்றுவிட்டாலும் அவர் தபோ விசேஷத்தால் மறுபடியும் பிழைத்துச் சிவபெருமானின் பெருமையை ஒப்புக்கொண்டு பழையபடி ஐந்து தலைகளுடன் இல்லாமல் நான்கு முகங்களுடன் விளங்கினார். எனினும், பைரவரைப் பிரும்மஹத்தி தோஷம் சூழ்ந்துகொண்டது. அவரும், ஏதாவது ஒரு பிராயச்சித்தத்தை அருளும்படி பிரும்மாவையே வேண்டிக்கொண்டார். பைரவர் கொய்த தம்முடைய ஐந்தாவது தலையின் கபாலத்திலே பிக்ஷை வாங்கிக்கொண்டு சென்று விஷ்ணுவைத் தரிசித்தால் அவர் அந்தப் பாபம் விலகுவதற்கு ஓர் உபாயம் தெரிவிப்பார் என்றும் அதுவரையில் பிரும்மஹத்தி ஒரு பெண்ணுருக்கொண்டு தொடர்ந்து வரும் என்றும் பிரும்மா கூறினார். விமோசனம் ஏற்படும் என்று சந்தோஷத்தை உடையாராகி 'பைரவர் பூத கணங்கள் புடைசூழ ஊர் ஊராகப் பிக்ஷை எடுத்துக்கொண்டு விஷ்ணுவைத் தேடிச்சென்றார். அவர் பிக்ஷை வாங்குவதற்குச் சென்ற வீடுகளில் இருந்த பெண் மக்கள் யாவரும் அவர் மேல் மையல் கொண்டு ஆடிப்பாடி ஆனந்தப் பரவசராகி அவரைப் பின் தொடர்ந்து சென்றனர். கடைசியாகப் பைரவர் வைகுண்டத்தை அடைந்து உள்ளே நுழையப்பார்த்தார். ஆனால் வாயிலைக்காத்துவந்த விஷ்வக்ஸேனர் அவரை உள்ளே விடாமல் தடுத்துவிட்டார். அதனால் கோபம் கொண்ட பைரவர் அவரைக் கொன்று பாபமூட்டையை அதிகமாக்கிக்கொண்டார். விஷ்வக்ஸேனருடைய உடலைச் சூலத்தில் சொருகிக்கொண்டு உள்ளே சென்று விஷ்ணுவைப் பிக்ஷை அளிக்கும்படி கேட்டார். விஷ்ணுவும் பைரவருடைய நெற்றியின் நரம்பு ஒன்றைக் கிழித்து அதிலிருந்து ஒழுகும் இரத்தமே அவருக்குத் தகுந்த ஆகாரம் என்று கூறினார். வெறியடங்கிய பைரவர் தமக்கு விமோசனத்தை அருளும்படி விஷ்ணுவை வேண்டிக்கொண்டார். என்ன வேண்டியும் விலகாதிருந்த பெண்ணுருக்கொண்ட பிரும்மஹத்தி விலகுவதற்குப் பைரவர் காசி க்ஷேத்திரத்தை அடையவேண்டுமென்று விஷ்ணு தெரிவித்தார். சந்தோஷத்தால் கூத்தாடிக்கொண்டு பைரவர் வாரணாசியை அடைந்தார். பிரும்மஹத்தியும் ஓடிப்பாதா



## கால் புண்கள், ரணங்கள் இவற்றிற்கு மாய நிவர்த்தி

ஜாம்-பெக் அசங்கியத் தழும்புகளை உண்டாக்குவதில்லை

சிறிய சிராய்ப்பு அல்லது அதிர்ச்சி காரணமாக பெரிய ரணங்கள் ஏற்படலாம். இவை பீடித்தவர்கள் வலியாலும், எரிச்சலாலும் கஷ்டப்படுவார்கள். இதற்கு நிவர்த்தி ஜாம்-பெக் மெழுகை உபயோகிப்பதுதான். டாக்டர்கள் சிபார்சு செய்வது. ஜாம்-பெக்கிலுள்ள சுத்த மூலிகைச் சத்துக்கள் தசையினுள் ஊடுருவிச் சென்று விஷத்தையும், ரணத்தையும் ஆற்றுகிறது. ஜாம்-பெக் வலியைத் தணித்து, எரிச்சலை அடக்கி, சீழை வெளிப்படுத்துகிறது. தழும்பின்றி ரணமாற்றுவது. நமைச்சல், மசாறி, சிரங்கு, வேர்க்கூர் முதலியவற்றை ஜாம்-பெக் அற்புதமாக நிவர்த்திக்கிறது. எல்லா மருந்து வியாபாரிகளிடமும் ஜாம்-பெக் பெட்டி 1-க்கு ரூ. 1 அல்லது ரூ. 2-4 வீதம் கிடைக்கும். ஏஜெண்டுகள்: மெஸர்ஸ் தாதா & கம்பெனி, பார்க்டவுன், மதராஸ்.

மிருகக் கொழுப்பற்றது.



ஜாம்பெக்

Zam Buk

ளத்தையடைந்தது. விஷ்வக்ஸேனரும் உயிர்பெற்று விஷ்ணு கைங்கரியத்துக்குத் திரும்பினர். பைரவரும், பாவங்கள் விலகப்பெற்றவராகி மஹேச்வரர் உருக்கொண்டு கைலாசத்தையடைந்தார்.

வேறு புராணங்களில் இக்கதை சில வேறுபாடுகளுடனும் காணப்படும். இக்கதையில், பலகாலத்தில் வழங்கிவந்த பல கதைகளின் பாகங்கள் பின்னப்பட்டுக் கிடக்கின்றன.

பிரும்மஹத்தி தோஷம் போவதற்குச் சிவபெருமான் அனுஷ்டித்த விருதம் தர்ம சாஸ்திரங்களில் காணப்படுவதேயாகும். உயர்ந்த பிராமணனைக் கொன்ற (ப்ரூணஹததி) தோஷத்தைப் போக்கிக்கொள்வதற்கு விதிக்கப்பட்டுள்ள பிராயச்சித்தம் வருமாறு:—பாபத்தைச் செய்தவன் காட்டுக்குச் சென்று தன் கையாலேயே ஒரு குடிசை எழுப்பி அதன் முகப்பில் தான் கொன்ற மனிதன் தலையை நட்டு அதில் வசித்துவரவேண்டும். முழங்கால் வரையில் தொங்கும்படி மாப்பட்டையைக் கட்டிக் கொண்டு மேலே கழுதைத் தோலைப் போர்த்திக்கொள்ளலாம். எப்பொழுதும் தான் செய்துவிட்ட பாபத்தை நினைந்து வருந்தி பௌன விருதத்தை அனுஷ்டிக்கவேண்டும். ஒரு கையில் கபாலத்தையும், மற்றொரு கையில், கையெலும்பான கட்வாங்கத்தையும் கொண்டு, "ப்ரூணஹத்தி செய்தவனுக்குப் பிக்ஷையிடுவோர் யாரேனும் உண்டோ?" என்று கூறி பிக்ஷைக்குச் செல்லவேண்டும். ஒரு நாளைக்கு ஏழு வீடுகளுக்குமேல் போகக் கூடாது. அந்த இடங்களில் ஒன்றும் கிடைக்காவிட்டால் அன்றைய தினம் பட்டினியாகவே இருக்க வேண்டும். பிக்ஷை வேளைகளில் தவிர, பிறசமயங்களில் கிராமங்களை நெருங்கக்கூடாது. தன்னை எப்பொழுதும் சண்டாளனாகவே பாவித்து ஒதுங்கிச் செல்லவேண்டும். இங்ஙனம் பன்னிரண்டு வருஷங்கள் வாழ்வானாகில் அவன் பாவம் விலகிவிடும்.

பிரும்மாவைக் கொன்று பிரும்மஹத்தி தோஷத்தைப் பெற்ற பரமசிவனும் நாடு நகரங்களை விடுத்துச் சுடுகாட்டில் வாழ்ந்து ஸப்த ரிஷிகளின் வீடுகளிலே கபாலத்திலே இரந்து உண்டு ஜீவித்தார் என்று கூறப்படுவதால் இதே பிராயச்சித்தத்தை அனுஷ்டித்தார் போலும்.

கங்காள மூர்த்தியின் உருவம் அநேகமாக எல்லாப் பெரிய சிவன் கோயில் களிலும் காணப்படும். இவ்விடம் காட்டப்பட்டுள்ள உருவம், திருச்சிராப்பள்ளி மலைக்கோயிலில் உள்ள திருமேனியினுடையது.

இவ்வுருவம் இடது காலை ஸ்திரமாக ஊன்றி வலதுகாலைச் சிறிது வளைத்து முன்னே செல்லும் பாவனையைத் தெரிவிக்கும்படி அமைந்துள்ளது. கால்களில் பாதக்குறடுகள் உள்ளன. தலையில் ஜடாமகுடமும், காதுகளில் குண்டலங்களும் காணப்படுகின்றன. முகம் பாந்து அழகாகச் சிரித்துக் கொண்டு இருப்பதுபோலக் காணப்படுகின்றது. திறந்தும் திறவாததுமாக உள்ள வாய், முத்துப்போன்ற பற்களைச் சிறிது வெளிப்படுத்தி, சந்தோஷத்துடன் பாடிக்கொண்டு செல்லும் நிலையை உணர்த்துகின்றது. இவ்வுருவத்துக்கு உள்ள நான்கு கைகளில், முன்புறம் உள்ள இடது கையில் ஒரு உடுக்கையும், வலது கரத்தில் அதைச் சப்தப்படுத்துவதற்கான ஒரு சிறு குச்சியும் காணப்படுகின்றன. அவர் உலகத்தை மறந்து பாடிச் செல்லும்பொழுது தாளம் போடுவதற்கு அவை உபயோகப்பட்டு வருவனபோலும். பின் கைகளில் வலது கைப் பக்கத்தில் துள்ளிக் குதித்து ஓடிவரும் மானுக்குப் புல் கொடுக்கும் பாவனையைத் தெரிவிக்கின்றது. செப்பு விக்கிரகங்களில், மான் எப்பொழுதும் தனியே வார்க்கப்படும். ஆதலால், இவ்விடம் காணப்படவில்லை. இடது கையில், கங்காளதண்டம் இருக்கின்றது. விஷ்வக்ஸேனருடைய உடல் முடியப்பட்ட கங்காளதண்டத்தை இவ்வுருவம் இடது தோளில் தாங்கிச் செல்கின்றது. கைகளிலும், கால்களிலும், தோள்களிலும், பாம்புகள் பலவகையாக அணியப்பட்டுள்ளன. அன்றி, இடுப்பில் பட்டாடையும் மார்பில் யஞ்யோபவீதமும் காணப்படுகின்றன.

கல்லிலே செய்யப்படும் உருவங்களில், இவரைச் சுற்றிப் பல பெண்களும், பூதகணங்களும், பாடிக் கூத்தாடுவன போல காட்டப் பெறுவார்கள். பிக்ஷை எடுத்த ஆகாரத்தைப் பெறுவதற்கு உபயோகமாகும்படி ஒரு பாத்திரத்தைப் பூதங்களுள் ஒன்று தலையில் ஏந்தி நிற்கும். பக்கத்தில் உள்ள பெண்களில் ஒவ்வொருத்தியும் அவர்பால்கொண்ட காமத்தைப் பலவிதமாக வெளிப்படுத்தி நிற்பாள். பக்கங்களில், தேவகந்தர்வர்களும் ரிஷிகளும், வணங்கி நிற்பதாகவும் காண்பிக்கப்படும். கல்லிலே உள்ள கங்காள மூர்த்தி உருவங்களில், கும்பகோணம் நாகேச்வர ஸ்வாமி கோயிலில் உள்ளதும் திருச்செங்காட்டாங்குடியில் உள்ளதும் வெகு அழகாக உள்ளவை.


## முத்திரிக்கப்பட்ட தேன்.

தேனீக்கள் புஷ்பங்களிலிருந்து தேனைச் சேமித்துக் கொண்டுவந்து கூட்டின் தட்டிலுள்ள அறைகளில் சேகரம் செய்து வைத்த பின்னர் அவைகளின் தேகத்திலிருந்து வெளிப்படும் உஷ்ணத்தைக்கொண்டு அத்தேனிலுள்ள நீரை ஆவியாகப் போக்கி, அந்த அறைகளின் வாயை மெல்லிய மெழுக்குத்துண்டால் மூடி "முத்திரை" போட்டுவிடும். அத்தகைய முத்திரிக்கப்பட்ட தேன் நெடுநாள் வரை கெடாமலும், அதிக உருசியுள்ளதாயும், உண்ண இனிமையாகவும் இருக்கும். முத்திரிக்கப்படாததேதாவென்றால் சீக்கிரத்தில் புளிப்பேறி, நுரைத்து சுவை கெட்டுப்போவதினால் சாப்பிடத்தக்கதன்று.

அவ்வாறே **T. S & Co.**, என்ற "முத்திரை" போடப்பட்ட 3, 5, 7 பவுன் துணிப்பைகளில் விற்கப்படும் காப்பிக்கொட்டையை வாங்கினால் உத்திரவாதமுள்ள கலப்பற்ற அசல் நீலகிரி சரக்கைப் பெறுவீர்கள். போலிச்சரக்குகளையும் பச்சைச்சாயமேற்றின காப்பியையும் வாங்கி ஏமாந்து போகாதீர்கள்; பைகளின் பேரில்,

REGISTERED. S. & CO, TRADE MARK

என்ற வியாபாரக்குறியுண்டோ என்று கவனித்து வாங்கவும்.

**டி.ஸ்டேன்ஸ்&கம்பெனி,**

**கோயமுத்தூர்.**



ஸ்தாபிதம் 1913

சவரன் மாத்து தங்கத்துக்கும், அசல் வெள்ளி சாமான்களுக்கும், மேன்மையான: வேலைப்பாட்டுக்கும் உத்திரவாதமுள்ள இடம்.

**கரம்சந்த் சபில்தாஸ் & ஸன்**

நகை வியாபாரிகள்

175, சைனாபஜார் ரோட் — மதராஸ்.

காட்லாக்குக்கு எழுதவும்.



## நரம்புகளுக்கு உறுதி : தசைகளுக்கு பலம்



இவையிரண்டும் மனிதவாழ்க்கைக்கு இன்றியமையாதவை இவை குறைந்த வளவில் இவற்றை மீண்டும் பெறுவதற்கு ஜீவாம்ருதப்" உபயோகமே சாதகமானது. "ஜீவாம்ருதம்" நரம்புகளுக்கு உறுதியையும் தசைகளுக்கு பலமும் சத்தும் பெருகச் செய்பவை "ஜீவாம்ருத" உபயோகம் வாழ்க்கையை இன்பமுறச் செய்யும்

**நரம்புகளின் உறுதிக்கும்**
**தசைகளின் பலத்திற்கும்**

**ஜீவாம்ருதம்**

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

**ஆயுர்வேதாஸ்ரமம்** 1898-ல் ஸ்தாபிதம் **மதராஸ்.**

சிறு தொழில் முயற்சி

# ஸெல்லுலாயிட் தொழில்

(ஓரத்தி ஒ. ப. தேசிகன்)

## ஸெல்லுலாயிட் சாமான்களுக்குக் கிராக்கி.

1933—34-ம் ஆண்டுகளில் ஜப்பானிலிருந்து மட்டும் இந்நாட்டிற்கு இறக்குமதியான ஸெல்லுலாயிட் சாமான்களின் மதிப்பை அடியில் காணலாம். அதனின்றும் இந்தத் தினுசு சாமான்களுக்கு இந்நாட்டிலுள்ள தேவையின் அளவு எப்படிப் பட்டது என்று புலப்படும்.

| சாமான்களின் பெயர். | 1933 | 1934 |
|---|---|---|
| (1) ஸெல்லு லாயிட் சீப்புகள் | 72,949 குரோஸ் மதிப்பு 359,334 யென் | 91,000 குரோஸ் மதிப்பு 513,0 16 யென் |
| (2) ஸெல்லு லாயிட் ஷீட்டுகள் | 105,300 கின்கள்' (ஒரு 'கின்' என்பது 1/8 இராத்தலுக்குச்சமமானது) மதிப்பு 119,204 யென் | 120,000 கின்கள் மதிப்பு—146, 501 யென் |
| (3) ஷை சில்லரை சாமான்கள் | ஷை—270,013 யென் | ஷை 339,804 யென் |
| (4) ஷை சுகப்ரஷ்கள்— | 10741 டஜன் மதிப்பு—25,396 யென் | 14046 டஜன் மதிப்பு—39479 யென் |
| (5) ஷை மிலிட்டரி பிரஷ்கள் | 12,512 டஜன் மதிப்பு—12250 யென் | 7522 டஜன் மதிப்பு—8190 யென் |
| (6) கூந்தல் பிரஷ்கள் | 26,167 டஜன் மதிப்பு—42,803 யென் | 14396 டஜன் மதிப்பு—30677 யென் |
| (7) ஷை பல் பிரஷ்கள்— | 76,77 குரோஸ் மதிப்பு—45,363 யென் | 15136 குரோஸ் மதிப்பு—87022 யென் |
| (8) ஸெல்லுலாயிட் பொம்மை வகைகள் | ,,—443,575 யென் — | ,,—395,342 யென் |

குறிப்பு:-'யென்' என்பது ஜப்பானின் செலாவணி நாணயம். இந்திய நாணயத்தில் ஒரு 'யென்னுக்கு' தற்சமயம் 0—14—0 அணுவாக மதிப்பிடலாம்.

கைத்தொழில் உலகத்தில் முன்னணியில் நிற்கும் பிரபலமான தொழில் முயற்சிகளில் இதுபோழ்து ஸெல்லுலாயிட் கைத்தொழில் முக்கியமான ஸ்தானத்தை வகித்துள்ளது. நாளுக்கு நாள் இத்தொழிலின் வியாபகம் அதிகரித்து வருவதே அதற்கோர் சிறந்த அத்தாட்சியாகும். ஸெல்லுலாயிட் உற்பத்தியில் வெகுவாக முன்னேற்றமடைந்துள்ள ஐரோப்பிய அமெரிக்க நாடுகளிலிருந்து பல லட்சக்கணக்கான மதிப்புள்ள சாமான்கள் பிரதி வருஷமும் இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஆனால், இத்தொழிலில் ஜப்பான் வாசிகள் அடைந்திருக்கும் அபிவிருத்தியையும் அவர்களுடைய் உற்பத்திப் பெருக்கையும் கருதுகையில் உலகத்திலுள்ள வேறெந்த நாட்டையும் அதனுடன் ஒப்பிடவே முடியாது. ஜப்பானில் 'ஸெல்லுலாயிட்டை'ப் பெருவாரியான அளவில் உற்பத்தி செய்யும் பிரம்மாண்டமான தொழிற்சாலைகளைத் தவிர, அவற்றினின்றும் உற்பத்தியாகும் ஸெல்லுலாயிட் ஷீட்டுகளைக் கொண்டு சிறிய அளவில் பற்பல சாமான்களைத் தயாரிக்கும் பாக்டரிகளும், ஒர்க் ஷாப்புகளும் (பட்டறைகள்) கணக்கின்றி மலிந்திருக்கின்றன. மேலும், குடிசைத் தொழில்களாகவே பெரும் பான்மையான கைத்தொழில்களும் நடைபெறுவதற்குச் சாதனங்களும் அரசாங்க ஆதரவும் மிருந்திருக்கும் அ சிறிய தீவி ஆ கணக்க குடும்பங்களில் சிறு குழந்தை முதல் வயது முதிர்ந்தவர்கள் ஈருக ஒருவர் பாக்கியாமல் இச்செல்லுலாயிட் ஷீட்டுகளினின்றும் பல்வேறு விதமான பொம்மைகளையும், புதுமை சாமான்களையும் தயாரிப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருக்கின்றனர்.

### இந்தியாவில் ஸெல்லுலாயிட் தொழில் அபிவிருத்தியடைவதற்குரிய சாதனங்கள்

நவநாகரீகத்தில் மக்களின் தினசரி வாழ்க்கையில் ஸெல்லுலாயிட் ஸாமான்கள் எத்தனை விதங்களில்தான் பயன்படுகின்றனவென்பதை அளவிட்டுக் கூறமுடியாது. சீப்புகள், பொம்மைகள், பிரஷுகள், விளையாட்டுக் கருவிகள் முதலிய சாதாரணமான சாமான்களிலிருந்து பிலிம் ரோல்கள் போடோ தொழிலுக்குத் தேவையான உபகரணங்கள் வரை ஸகலமும் ஸெல்லுலாயிட் மயமாகவேயிருக்கும் இக்காலத்தில் அதன் உபயோகங்களைக் குறித்து எழுதப் புகுவது அனுவசியமாகும்.

ஸெல்லுலாயிட் உற்பத்திக்கு இந்தியாவில் அளவற்ற சாதனங்கள் இருக்கின்றன. எனினும் இந்திய முதலாளிகள் இவ்விஷயமாகப் போதிய கவனம் செலுத்தியிருப்பதாகத் தெரியவில்லை. ஜப்பானைப் போலவே மார்க்கெட்டுகளில் ஆங்காங்கு ஏராளமான அளவில் விற்பனை செய்யப்படும் ஸெல்லுலாயிட் ஷீட்டுகளைக் கொண்டு பற்பல சாமான்களைத் தயாரிப்பதன் மூலம் குடிசைத் தொழிலாகவே இதை அபிவிருத்தி செய்வதற்கு எவ்வளவோ இடமிருக்கிறது. ஆயினும் பிற நாடுகளில் ஸெல்லுலாயிட்டானது அதனுடைய பிரதம நிலையில் எவ்வாறு உற்பத்தியாகின்றதோ, அது போன்ற முறையில் ஷீட்டுகளைத் தயாரிக்கக்கூடிய பெரிய கைத் தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு அதைவிடச்சிறந்த சாதனங்கள் இந்தியாவில் உள்ளன. இத்தொழிலை நடத்துவதற்கு இன்றியமையாத மூலப் பொருள்கள் இந்நாட்டில் சுலபமாகவே கிடைக்கின்றன. துணிச்சலுள்ள முதலாளிகள் மட்டில் இத்தொழிலில் ஈடுபடுவார்களேயாகில், எதிர்பார்ப்பதைவிட சீக்கிரமாகவே இத்தொழிலுக்கு உள்நாட்டில் அபரிமிதமான ஆதரவு ஏற்படுமென்பது திண்ணம். அதைத் தவிர இந்தியாவில் இப்பொழுது பேசும் படத்தொழில் நாளுக்கு நாள் அபிவிருத்தியடைந்து வருவதையுத்தேசிக்கும்போது அதற்கு முற்றிலும் இன்றியமையாத ஸெல்லுலாயிட் சாமான்களுக்குக் கிராக்கி ஏற்படாமலிருப்பதற்கில்லை. ஆனால் நாளது வரையில் சிறிய அளவிலாயினும், அல்லது பெருவாரியாகவேனும் ஸெல்லுலாயிட் சாமான்களை உபத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றுகூட இந்தியாவில் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

ஜப்பானிலிருந்து இந்தியாவுக்கு ஏற்றுமதியான ஸெல்லுலாயிட் சாமான்களின் விலை மதிப்பை மட்டும் மேலே கண்ட புள்ளி விவரங்கள் குறிப்பிடுகின்றன. அந்நாட்டிலிருந்து உலகத்தின்ஒவ்வொரு பாகத்திற்கும் ஏற்றுமதி செய்யப்படும் சாமான்களின் அளவையும், அவற்றின் மதிப்பையும் அறிவிக்கக்கூடிய கணக்குகளைப் பார்த்தால் அந்நாட்டில் இத்தொழில் எவ்வளவு உன்னதமான நிலையையெய்தியிருக்கிறதென்று நாம் மூக்கில் விரலை வைக்க நேரிடும்.

### தேவையான மூலப் பொருள்களும் முதலும்

ஸெல்லுலாயிட் தொழிலுக்கு முக்கியமாகத் தேவையானது பருத்தி, கந்தகத் திராவகம், நைட்ரிக் ஆஸிட், ஆல்கஹால் (மதுஸாரம்), கற்பூரம் ஆகிய பொருள்களேயாகும். இவைகளில் கற்பூரம் ஒன்றைத் தவிர மற்ற நான்கு பொருள்களும் இந்நாட்டில் சுலபமாகக் கிடைக்கக்கூடியனவே தவிரவும் மேற்படி பொருள்களின் இறக்குமதி விலைகளுக்கும் மார்க்கெட்டு விலைகளுக்கும் அதிகமான வித்தியாஸம் இருப்பதாகத் தெரியவில்லை.

மாதமொன்றுக்குச் சுமார் 30,000 ரூபாய் பெறுமானமுள்ள ஸெல்லுலாயிட் ஷீட்டுகளையும், இதர சாமான்களையும் உற்பத்தி செய்யக்கூடிய ஓர் தொழிற்சாலையை ஸ்தாபிப்பதற்கு, மெஷின்களுக்காக லட்சத்தி ஐம்பதினாயிரம் ரூபாயும், மூன்று மாத உற்பத்திக்கும் போதுமான மூலப் பொருள்களுக்காக 40,000 ரூபாயும், யந்திரங்களை ஸ்தாபிப்பதற்காகவும் மற்றும் கட்டட வேலைகளுக்காக 50,000 ரூபாயும் ஆக மூன்று லட்ச ரூபாய்க்குக் குறையாமல் முதல் தேவையாகவிருக்கும். இத்தகைய முதலுடன் ஆரம்பிக்கப்படும் தொழிற்சாலையொன்றின் உத்தேச உற்பத்தியையும் செலவுகளையும் மாதவாரியாகக் கணக்கிட்டு இந்திய வியாபாரச் சங்கத்தின் பத்திரிகையில் ஒரு நிபுணர் எழுதியிருக்கும் புள்ளி விவரங்களைக் கவனிக்குங்கால் இந்நாட்டில் ஏற்கனவே நிலை பெற்றுள்ள ஏனைய கைத்


## புத்துயிருடன் ஊக்கம்




விம்டோ கார்டியல் புகழ் பெற்றிருப்பதற்குக் காரணம் இதுதான். முதலில் அது விசேஷ புத்துயிரூட்டும் ருசி மிகுந்த பானம்—தவிர விம்டோ புதிய ஆரோக்யம், புதிய ஊக்கம், புதிய ஜீவ சக்தி இவற்றைத் தருகிறது! —விம்டோ, பானங்களில் மேலானது.

VIMTO

கார்டியலுடன்



கங்காருவின் பாய்ச்சல்.

தொழில்களைக்காட்டிலும் ஸெல்லுலாயிட் உற்பத்தியில் அதிகப்படியான வருமானமும் போட்ட முதலுக்குத் தகுந்த வட்டியும் கிடைப்பதற்கு ஏதுவுண்டு என்பது தெளிவாகும். அவருடைய கணக்கிலிருந்து பின்வரும் தகவல்களையெடுத்துக் காட்டியிருக்கிறோம்:

மாதச் செலவு

| | | |
|---|---|---|
| 1. தொழிலாளிகள் கூலி | ரூ. | 1500 |
| 2. யந்திரங்களின் தேய்வுக்காக | | 2000 |
| 3. ஆபீஸ், சிப்பந்தி ஸ்டேஷனரி தபால் வகையராக்களுக்காக | | 600 |
| 4. ஒருமாதத்திற்கு வேண்டிய மூலப் பொருள்களின் கிரயம் | | 13000 |
| 5. முதலுக்கு 6% வீதம் வட்டி | | 500 |
| 6. வரி, இன்ஷியூரன்ஸ் முதலியன | | 650 |
| | ஆக ரூ. | 19,250 |

ஒருமாத உற்பத்தி 19,348 (Kg)களுக்கு (Kg) ஒன்றுக்கு.
ரூ. 1-101-10 வீதம் ரூ. 31,430

பாக்கிங் சார்ஜுகளுக்காகவும் விற்பனைக் கமிஷன்களுக்காகவும் 10% சுழிவு 3130

நிகர உற்பத்தி ரூ 28,300
மாதாந்தர உற்பத்தி செலவு 19000

லாபம் ரூ ...00.

மேற்கூறிய புள்ளி விவரங்களிலிருந்து இத்தொழிலில் நன்கு தேர்ச்சிபெற்ற நிபுணர்களின் உதவியைக்கொண்டு முன் ஜாக்கிரதையுடன் நடத்தப்பட்டால், ஸெல்லுலாயிட் தொழிலில் நூற்றுக்கு 35%முதல் 40%வரையில் கூட இலாபமடைவது அஸாத்யமல்லவென்பது விளங்கும். இத்தகைய இலாபகரமான தொழிலைப்பற்றி நம் நாட்டுக் கைத்தொழில் முன்னேற்றத்தில் சிரத்தையுள்ள அறிவாளிகளும், முதலாளிகளும் அலட்சியமாகவிருந்து வருகிறார்கள் என்பது ஆச்சரியப்படத்தக்கதாகும். இத்தொழில்மட்டில் இந்தியாவில் சிறிது காலமேனும் நடைபெறுமானால், இமிடேஷன் தோல் உற்பத்தி, ஸினிமாவுக்குத் தேவையான பிலிம் தகடுகளைத் தயாரிப்பது முதலிய உபகைத்தொழில்களும் தாமாக அபிவிருத்தியடைந்துவிடுமென்பதில் ஐயமில்லை. இந்தியாவில் இதுகாலை கைத்தொழில் புனருத்தாரணத்திற்கான அறிகுறிகள் மிகுதியும் காணப்படுகின்றன. அதன்பயனைக் கூட்டுறவு முயற்சியாகவேனும், இத்தொழிலையாரம்பித்து நடத்துவதற்குத் தமது ஊக்கத்தையும் தொழில் திறமையையும் இந்நாட்டு முதலாளிகள் ஈடுபடுத்துவார்களாயாகில் ஆயிரக்கணக்கான மக்களுடைய பிழைப்புக்கு அவர்கள் வழிகாட்டியவர்களாவார்கள்.


வலுவாகவும்,
நிரந்தரமாகவும், பத்திரமாகவு
மிருக்க இரும்பையே
கட்டிடங்களில் உபயோகியுங்கள்.

உயர் ரகத்திற்கு
டாடா இரும்பையே
கேளுங்கள்.

ஒவ்வொரு பட்டணத்திலும்
வியாபாரிகளும், ஸ்டாக்கிஸ்டுகளும்
இருக்கின்றனர்.

Tata Iron & Steel Co., Ltd.,
18, ஏர்பாலு செட்டித் தெரு, மதராஸ்.
தந்தி. "IRONCO MADRAS" போன்: 2701

பெருவியாதி ஒழிந்தது!

பெருவியாதி எக்காரணத்தினாலும் ஏற்படும். உள்ளுக்கும் வெளிக்கும் எடுத்துக்கொள்ளும் மருந்தினால் உடனே நிவர்த்தியாகிறது,
45 நாள் மருந்து. ஸ்நானத்திற்குக்கூட செட் 1-க்கு ரூ. 10.

வெண் குஷ்டம் தீர்ந்தது

வெண்குஷ்டம் இரத்தக் கோளாறினாலோ அல்லது இதர காரணங்களினாலோ ஏற்படுவது. உள்ளுக்கும், வெளிக்கும் இம்மருந்தைச் சாப்பிடுவதால் நிச்சயமாகக் குணமாகிறது. குணத்திற்கு உத்தரவாதம்.
செட் 1-க்கு ரூ. 7-8. விஷமற்றது.

கிடைக்குமிடங்கள்:
BEHAR CHEMICAL WORKS,
Baghalpur.
அல்லது கீழ்க்கண்ட ஏஜண்டுகள் :—
மெஸர்ஸ் அப்பா & கம்பெனி, தாதா கம்பெனி, மதராஸ்.
ஸ்ரீராமா பார்மசி, மைசூர், பெங்களூர்.
கடிதங்களும், ஆர்டர்களும் ஆங்கிலத்திலேயே.

ஸ்ரீகர கஸ்தூரிமாத்திரை
குடும்ப சஞ்சீவி
ஸ்ரீகர கோரோஜனைமாத்திரை
சிசுக்களுக்கு அவசியம்
(இரண்டும் அணா 10) (கேட்டு எழுதுக)
யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, மதராஸ்.

சிறுவர் பகுதி

# மந்திரியின் மோசம்

(எஸ். கோபாலய்யர்)

வெகு காலத்துக்கு முன்னே மதுராபுரியில் தனகோடி என்ற ரத்தின வியாபாரி ஒருவன் இருந்தான். அவன் எப்பொழுதும் உண்மையே பேசுவான். வியாபாரத்தில் முயற்சியுடையவன். ஒரு சமயம் தனகோடி தூர தேசம் போக எண்ணினான். ஆகையால் அவன் தன்னிடமுள்ள ரத்தினங்கள், வைடூரியம், வைரம் முதலிய லக்ஷக் கணக்கான மதிப்புள்ளவைகளை யாரிடத்தில் கொடுத்துவிட்டுப் போவது என்று எண்ணினான்.

மதுராபுரியை மதனன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவனிடம் குடிலன் என்பவன் மந்திரியாக இருந்தான். அவன் எப்பொழுதும் சத்திய வசனங்களையே சிறப்பித்துப் பேசுவான். தனகோடிக்கு அம்மந்திரியே நம்பிக்கைக்குப் பாத்திரமானவன் என்று தோன்றிற்று. உடனே அவன் தன்னிடமுள்ள ரத்தினங்களையும் நகைகளையும் ஒரு குடத்தில் போட்டுக்குடிலனிடம் ஒப்புவித்துப் பிரயாணமானான்.



இரண்டு வருஷங்கள் கழிந்தன. தனகோடி திரும்பி மதுராபுரியையடைந்தான். பிறகு ஒரு நாள் மந்திரியினிடம் சென்று தன்னுடைய ரத்தினங்கள் அடைத்த குடத்தைக் கொடுக்கும்படிக் கேட்டான். மந்திரி, "நீ எப்பொழுது என்னிடம் கொடுத்தாய்? நீ யார்?" என்று முன்பின் அறியாதவன்போல் சொன்னான். தனகோடி திடுக்கிட்டான். "முன் சொன்ன தருமத்தை மறந்து பேசுகிறாயோ? என்னுடைய குடத்தைக் கொடுத்துவிடு" என்றான். மந்திரி, "இவன் யார் பைத்தியக்காரன்? இவனைப் பிடித்து வெளியே தள்ளுங்கள்" என்று கட்டளையிட்டான். சேவகர்கள் அப்படியே செய்தார்கள்.

தனத்தை இழந்த தனகோடி அரசனிடம் முறையிட்டான். அரசன் "நமது குடிலனா அப்படிச் செய்வான்" என்று எண்ணி விரட்டிவிட்டான். தனகோடி எப்பொழுதும் அதே பித்தாகப் பேசிக்கொண்டு இருந்தான். "மந்திரி ரத்தினங்கள் அடைத்த குடத்தை அபகரித்துக்கொண்டான்" என்று சொல்லித் திரிந்துகொண்டு இருந்தான். அந்நகரத்திலுள்ளோர் பலரும், மந்திரிமீதிருந்த நம்பிக்கையால் அரசனும் அவனைப் பைத்தியக்காரனென்றே எண்ணியிருந்தார்கள்.

இச்சமாசாரம் அரசனுடைய மகள் லீலாவதிக்கு எட்டிற்று. லீலாவதி புத்திசாலி. "பைத்தியக்காரன் வேளைக்கொன்றும் நிமிஷத்திற்கு ஒன்றுமாக அல்லவோ பேசுவான்? இவன் சொன்னதே சொல்லிக்கொண்டிருக்கிறான். இதில் ஏதோ சூது இருக்கிறது" என்று எண்ணினாள்.

பின்பு லீலாவதி மந்திரியை வரவழைத்துக் கொஞ்ச நேரம் ஏதேதோ பேசி, தன்னோடு சொக்கட்டான் ஆடச் செய்தாள். சொக்கட்டான் ஆடுவதில் லீலாவதி கைதேர்ந்தவள். முதல் ஆட்டத்திலேயே மந்திரியினுடைய முத்திரை மோதிரத்தை ஜயித்துக் கொண்டாள். அம்மோதிரத்தை இரகசியமாகத் தன் தோழியினிடம் கொடுத்து, மந்திரியின் மனைவியினிடமிருந்து தனகோடி கொடுத்திருந்த குடத்தை வாங்கி வரும்படி அனுப்பினாள்.



அத்தோழி மந்திரியின் மனைவியினிடம் போய் முத்திரை மோதிரத்தைக் காட்டி, "குடத்தை மந்திரி வாங்கி வரும்படி சொன்னார்" என்றாள். உடனே அவள் ரகசியமாக வைத்திருந்த குடத்தைத் தோழியினிடம் கொடுத்தாள். அவள் அதைப்பெற்று லீலாவதியிடம் கொடுத்தாள். லீலாவதி அரசனிடம் காட்டி, மந்திரியின் மோசத்தை விளக்கினாள். அரசன் லீலாவதியின் சாமர்த்தியத்தைக் கண்டு சந்தோஷமடைந்தான்.

உடனே அரசன் மந்திரியை வரவழைத்து, "நான் உண்மையயறி-



யாமல் தனகோடியை பைத்தியக்காரன் என்று விரட்டினேனே; என்னுடைய பெண் லீலாவதியால் அன்றோ உண்மை வெளியாயிற்று?" என்று கூறிச் சிறையிலிட உத்திரவிட்டான்.

தனகோடி லீலாவதியின் திறமைக்கு மெச்சினான். ஓர் நவரத்தின மாலையைப் பரிசாகக் கொடுத்தான். மந்திரி மோசச் செய்கையினால் பதவி இழந்து பலரால் நிந்திக்கப் பெற்று இழிவை அடைந்தான். அரசன் தனகோடியைத் தன் மந்திரியாக அமர்த்திக் கொண்டான்.

சமையலறையில்
எறும்புத்
தொல்லையா?
பிளிட் பவுடர்
அவற்றைக்கொல்லும்




புகழ் பெற்ற
பிளிட்
காரரின்
தயாரிப்பு.

ஜோதிஷ மகுடவர்த்தனர்

இந்து மன்னர் சமஸ்தான 25-வது தலைமுறை ஜோதிஷர்-பீமகவி-சகர்-புஜண்டா சாஸ்திர நிபுணர் இப்பூ மண்டலப் புகழுரையில் எதிர்கால பலன் கூறுவதில் "உலக சிரேஷ்டர்" என வெற்றி பாமாலையும் தங்க சன்னதங்களும் பெற்றவர்.



ஜாதகம் லக்கின நக்ஷத்திர ஸ்புடஞ்செய்து பொதுப் பலன் எழுத ரூ. 1. ஒரு தெசைக்கு புக்தி பலன் ரூ. 2. அஷ்ட வர்க்கம் ஆயுள்வரை புக்தி பலன் ரூபா 7. ஜாதகக் குறிப்பு முன் பணம் ரூபா 4. தேவை) 1 வருட மாதா மாதப் பலன் ரூ. 1-8. கேள்வி 6-க்கு ரூ. 1. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

புரொபஸர், N. சுப்பிரமணியம்,
நெ. 2, (ஜோதிஷ ஆசிரமம்)
வாலாஜாபாத், S. I. R. சென்னை

சூதகம் நின்றது

"த்ரீ நாட்ஸ் பில்ஸ்" 3 நாட்களுக்கு மட்டும் உபயோகித்துப்பாருங்கள்; சூதகக் கோளாறுகள் ஒழியும். உத்தரவாதத்துடன் கூடியது விலை ரூ. 5—8.

"சாலோமாட்" கர்ப்பம் வேண்டாத காலத்தில் உபயோகியுங்கள். 100-க்கு 100 பலன். விலை ரூ. 3—8.

Venereal & Birth Control Clinic
(S-IM) Parsi Bazar, Fort,
Bombay.




மரியாதைராமன் கதை
யானைக்கும் பானைக்கும் சரி
ஐயோ! ஊர்வலத்துக்கு வாங்கி வந்த இந்த யானை தெய்வாதீனமாய் இறந்ததே
என் யானையேதான் எனக்கு வேண்டும். வேறு யானையாவது அதன் விலையாவது வேண்டாம்
உன் வீட்டுக்கதவண்டையில் பழம் பானைகளை அடுக்கி வைத்திரு. அவன் அவசரமாக வந்து உன்னை அழைக்க கதவைத்திறப்பான் பானைகள் நொருங்கி விடும். பெரியோர் ஆண்டு வந்த பானையென்று பிராது கொடு
ஐயோ! பானைகள் உடைந்ததே
என் பெரியோர்கள் ஆண்டு வந்த பானையாதலால் அவைகளேதான் எனக்கு வேண்டும்
யானைக்கும் பானைக்கும் சரியாய் விட்டது
K. R. SARMA

## தென்னிந்தியப் பிரமுகர்கள்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கலாசாலையில் சுமார் 35 வருஷங்கள் சம்ஸ்கிருத பண்டிதராகவிருந்து 1933-ம் வருஷம் ஜூன் மாத ஆரம்பத்துடன் இவர் வயது முதிர்ச்சி பற்றி விலகிக்கொண்டார். அப்போது இவருக்குப் பிரிவு உபசாரங்கள் எங்கும் நடத்தப்பட்டன. காலேஜ் அதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் யாவரும் ஒருமித்து இவரது சேவையின் சிறப்பை எடுத்துக் கூறினர்.

1933-ம் வருஷம் ஜூன்மாதம் இவருக்கு இந்தியா கவர்ன்மெண்டாரால், "மஹாமஹோபாத்யாயர்" பட்டமும் அளிக்கப்பட்டது. காலஞ்சென்ற பெர்ட்ராம் பாதிரி இவரிடம் விசேஷ அன்பு பூண்டவராகி, இவரது க்ஷேமத்தில் சதா அக்கரைகொண்டு இருந்தவர். அவர் இச்சமயம் இவருக்கு எழுதிய பாராட்டுக் கடிதத்தில் சம்ஸ்கிருதக்கல்வியின் சிறப்பையும், அதன் மனோல்லாஸ புஷ்டிகளையும் குறிப்பிட்டு இவைமூலம் இவருக்குப் பெருமையும் கிடைத்தது எனவும் எழுதினர். இதன் பின்பு திருச்சியில் உள்ளவர்கள் ஒரு பெரிய சபையைக்கூட்டி இவருக்கு ஒரு தங்கப்பதக்கத்தையும் வழங்கினர்கள்.

நம் மஹாமஹோபாத்யாயர் சில புத்தகங்களையும் எழுதியுள்ளார். 1906-ல் சுபந்து எழுதிய "வாஸவதத்தா" என்ற கிரந்தத்தைத் தமது வியாக்யானத்துடன் பிரசுரித்து வெளியிட்டார்; மைசூர் மஹாராஜா கலாசாலை ஸம்ஸ்கிருத ஆசிரியரான ஸ்ரீமான் ஜி. கஸ்தூரிரங்கய்யங்கார் இப்புத்தகத்திற்குத் தாம் எழுதிய விஸ்தாரமான முகவுரையிலும், இவர் தாம் எழுதிய சமஸ்கிருத பூமிகையிலும் புத்தகத்தின் அழகுகளையும் சிறப்புகளையும் இந்தக் கர்த்தாவின் குணாதிசயங்களையும்
...டுள்ளார்கள். "நீங்
...ப்பிய வியாக்யானத்
...டிய வாஸ் வதத்தா
...த்தைப் பார்த்து
...ந்தேன். உங்
...ிப்புகள் தெளி
...தாகவும் இருக்
...ப் புஸ்தகத்தை
...க வைப்பதற்கு
... அதிகாரி
... சந்தோஷத்
... செய்வேன்"
... கிருஷ்ணஸ்
...ருக்கு எழுதி
... அநேகம்
...க் கொண்
...ஷம் இவர்
...ஹ"த்தை
...து பட்ட
...ங்கிரகமா
... சரிதமா
...டுகளுக்கு
... தேசத்

திய சமூக, ராஜீய வாழ்வைப் பற்றித் தெரிவிப்பதாகும். பட்டபாணனுடைய பெரிய புஸ்தகமானது மிகவும் கரடுமுரடாக விருப்பது பற்றியும், இப்புஸ்தகத்தை எல்லோரும் படிக்க வேண்டும் என்ற அபீஷ்டம் பற்றியும் இவர் கடின பிரயோகங்களை எல்லாம் விலக்கிவிட்டு, கோர்வையாக பாணனுடைய வார்த்தைகளைக்கொண்டே அதை சங்கிரக ரூபமாக வெளியிட்டார். இதனல் நமது பழைய நூல்கள் பரவுவது சாத்தியமாகியது.

'அக்ஷரமாலிகாஸ்தவ:' ஸ்ரீ 'கிருஷ்ணஸ்தவம்' 'ஸ்ரீஸ்தவம்' 'நிரோஷ்ட்ய தசாவதாரஸ்தவம்' ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸம்ஹ சதகம்' முதலிய சுலோக மாலைகளையும் இவர் எழுதியுள்ளார். இந்தச் சுலோகங்களின் லளிதமான நடையும் அழகுகளும் படிப்பவர்களுக்கு இவரது பாண்டியத்தை நிதர்சனமாக்குகின்றன.

நம் காலஞ்சென்ற ஐந்தாம் ஜார்ஜ் சக்கிரவர்த்தியின் மகுடாபிஷேகத்தின்போது இவர் "பாரத ஸார்வபௌம விஜயம்" என்ற மகுடத்துடன் 100 சுலோகங்களை எழுதினர். இதில் இவ்விந்திய சாம்ராஜ்ஜியத்தைப் பற்றின தகவல்கள் யாவும் காணப்படுகின்றன.

மஹா மஹோபாத்யாய ம. வி. இராமாநுஜாச்சார்ய ஸ்வாமிதமிழ்நாட்டிற்கு வியாஸ மஹாபாரதத்தைத் தமிழில் மொழிபெயர்த்துச் செய்திருக்கும் - பரமோத்க்ருஷ்டமான சேவையில், இம் மஹா மஹோபாத்யாயரும் பங்கு எடுத்துக் கொண்டார். இவர் சில பர்வங்களை மொழிபெயர்த்துக் கொடுத்தார். வனபர்வம், பீஷ்ம பர்வம், கர்ணபர்வம், சல்ய ஸௌப்திக ஸ்திரீ பர்வங்கள், ஆகியவற்றை இவரே மொழிபெயர்த்துக்கொடுத்து உதவினர். இவரது மொழிபெயர்ப்புகளும் பிழையின்றி ரஸிகமாகவிருக்கின்றன என்பது யாவராலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருப்பதாகும்.

இவர் ஸ்ரீ ராமாநுஜ பாஷ்யத்தையும் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். இந்தப்பாஷ்யத்திற்கு ஸ்ரீ வேதாந்த தேசிகர் சாதித்திருக்கும் ச்ருத பிரகாசிகை முதலிய வியாக்யானங்களையும் கூடவே தமிழில் மொழி பெயர்த்து இவர் வெளியிட்டுள்ளார். இதனல் சம்ஸ்கிருதம் தெரியாதவர்களுக்கும் ஸ்ரீ பாஷ்யம் கிட்ட வேண்டும் என்பதுதான் இவரது அபீஷ்டம். இது சில மாத சஞ்சிகைகளாக வெளி வந்தது. இவ்விஷயத்தில் ஸ்ரீரங்கம் ஸ்ரீமான் எ. வி. கோபாலாச்சார்யரும் கலந்து கொண்டார். ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்த பிரசாரத்திற்காக இவர் செய்த இந்தக்கைங்கர்யம் மிகவும் சிரேஷ்டமானதாகும்.

இம்மஹா மஹோபாத்யாயர் இன்னும் பல்லாண்டுகள் சுக சரீரியாகவும் சாந்தியுடனும் வாழ்ந்து வருமாறு ஸ்ரீமந் நாராயணனைப் பிரார்த்திப்போமாக!

* * * *


### எரிப்பும், வெடிப்பும் வராமல் உடம்பைக் காப்பாற்று.

அனேக ஸ்திரீகள் தோல் வெடிப்பினலும், தோல் எரிப்பினலும் வரும் சஞ்சலம் விலக்கமுடியாததென்று எண்ணுகிறார்கள். இன்னளில் ஆயிரக் கணக்கானவர்கள் குடிகூரா டால்கம் (Cuticura Talcum) தூளினல் வரும் விநோதமான தேற்றத்தை கண்டுபிடித்துக் கோள்கிறார்கள்.




கோதிப்பான நுட்பமுள்ள உடம்பின் தோலுக்கு இந்த தூள் பரிமள தைலம் போவிருக்கும். குடிகூரா டால்கம் (Cuticura Talcum) தூள் ஆற்றுந் தன்மை யுள்ள தைலங்கள் கலந்துமருந்தூட்டி ரசாயன முறைப்படி, உத்தமமான வழியாய்ச் செய்யப்பட்டது. இந்த தூள் மிகவும் நேர்த்தியானது, அதிக சுத்தமானது. இதற்கு மேலான தூள் வாங்கமுடியாது. சாதாரணத் தூள்களைவிட இந்த தூளுக்கு தணித்து ஆற்றும்படியான வல்லமை அதிகம். உடம்பின் தோலில் பதர் வந்த இடங்கள்மேல் இலேசாக இந்தத்தூளைத் தூவினல் மேன்மையாயிருக்கும். வேர்வையைத் தணிக்கும். அதன் வாசனை மணமாயும் உல்லாசமாயுமிருக்கும்; திரேகம் முழுதர்க்கும் கமப்பான வாசனையைக் கொடுக்கும்.

ஒருடப்பி குடிகூரா டால்கம் (Cuticura Talcum) தூள் இன்றைக்கே வாங்கு. அது சமுசாரத்திலிருக்கும் ஒவ்வொருவருக்கும் கட்டாயமாக வேண்டியது. இந்த தூள் குழந்தைகளுக்கு முக்கியமானது.

**குடிகூரா டால்கம்**
**CUTICURA TALCUM**

எல்வா மருந்து கடைகளிலும் பஜார்களிலும் விற்கப்படும்.



# செவிடு

"டெப்கில்லர்" செவிட்டுத் தன்மையை சாசுவதமாகப் போக்கிவிடும். இன்னும் காதில் ஏற்படும் இதர கோளாறுகளையும் அகற்றிவிடும். எவ்வளவு நாள்பட்ட செவிடாகவிருந்தாலும் சரி, சிறிதும் சந்தேகமின்றி நிரந்தரமாக நிவர்த்திக்கப்படும்; செவிடர் செவ்வையாகச் செவியுறுகிறார். கால்செவிடு, அரைச்செவிடு அல்லது முழுச்செவிடு எதுவாகவிருந்தாலும் அக்கரையில்லை; நீண்டகால ஜலதோஷம், இருமல், ஜுரம், தொண்டைக் கோளாறு, மூக்குக்கோளாறு முதலிய எக்காரணங்களால் ஏற்பட்ட செவிடாயினும் சரி குணமாகிவிடும். சீழ்வடிதலும் நின்றுவிடும். ஆயிரக்கணக்கானவர்கள் குணம் பெற்றிருக்கின்றனர். விலை ரூ. 5; தபால் செலவு 9அணா.

எல்லா முதல்தர கெமிஸ்டுகளிடமும் கிடைக்கும்.

ஹோல் ஸேல் ஸ்டாக்கிஸ்ட்ஸ்:—அப்பா அண்டு கம்பெனி, 286, சைனாபஜார் ரோட், ...



உங்கள்
குழந்தைக்கு
டோங்கரேயின்
பாலாம்ருதமும்

கொடுங்கள்.

டோங்கரேயின் பாலாம்ருதம் என்பதென்ன ?

1. டோங்கரேயின் பாலாம்ருதம் குழந்தைகளுக்கான ஓர் சிறந்த டானிக்.

2. நீடித்த தொந்தரவான இருமலையும், சாதாரண ஜுரத்தையும் போக்குகிறது.

3. மெலிந்து கிடக்கும் குழந்தைகளுக்கு வலுவூட்டுகிறது.

4. பல் முளைக்கையில் குழந்தைகளுக்கு உதவிசெய்கிறது.

மதராஸ் ஏஜண்டுகள்:

ஏ. பி. பரேக், 268, சைனு பஜார் ரோட்.




10 வருஷம் உத்திரவாத முள்ள புது மாதிரியான பஞ்சவர்ண கல்செயின்கள்

(செயின் 1-க்கு)

ரூபாய் 5-0-0.

எங்கள் ரோல்டு கோல்டு செயின்கள் ஐந்துவித நிற மான செயற்கை கற்கள் வைத்துக் கட்டிய இந்த புது மோஸ்தர் செயின் களை குழந்தைகளும், பெரியவர்களும் அணிந்து ஆனந்தமடையலாம்.

(கேட்லாக் இலவசம்)

R. S. பிரகாசம் & Co,

அலாய் கோல்டு ஜுவல்லர்ஸ்.
187, சைனு பஜார் ரோட். ஜி. டி
மதராஸ்

"குஜராத்சமாச்சார்" (தினப் பதிப்பு)
"பிரஜாபந்து" (வாரப் பதிப்பு)

[1898-ல் ஸ்தாபிக்கப்பட்டவை]

குஜராத்தில் பிரபல்யம் வாய்ந்தவை. ஆமதாபாத்தினின்று பிரசுரிக்கப்படுபவை.

குஜராத்தில் உங்கள் வியாபாரம் பெருக வேண்டுமானல்
இப்பத்திரிகைகளில் விளம்பரஞ் செய்யுங்கள்.
ஆங்கிலத்திலேயே கடிதங்கள் எழுதவேண்டும்.

Manager. Gujarat Samachar & Praja Bhandhu
AHMEDABAD

சென்னை ஆயுர்வேத கலாசாலையிற் பயின்று டிப்ளோமா பெற்றவரும், எஸ். கே. பி. டி. ஆஸ்பத்திரியின் தலைமை டாக்டராயிருந்தவரும், கவர்ன்மெண்டு இந்திய வைத்தியக் கலாசாலைப் பரீக்ஷகரும், விலோன் வைத்தியக் கல்லூரி பரீக்ஷக போர்டின் பிரஸிடெண்டும், அகில இந்திய ஆயுர்வேத வித்யாபீட பரீக்ஷகரும், அநேக ஆயுர்வேத காவ்ய நாடகாதி கிரந்தங்கள் இயற்றியவருமான,

வைத்திய ரத்னம்

பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார், ஏ. வி. எஸ்.

ஆயுர்வேதபூஷணம், ஆயுர்வேதசார்ய அவர்களுடையஔஷதங்கள்

ஆயுஷ்ய ரஸாயனம் எவ்வித பலஹீனத்தையும் நீக்கும். தேஹ புஷ்டியையும், மூளைச் செழிப்பையும், இருதய பலத்தையும் தரும். நரம்புத் தளர்ச்சியை நீக்கும். தேனினும் இனிக்கும்.
புட்டி ரூ. 3-4-0.

அஜீர்ண கேஸரி இரைப்பையில் புளிப்பு, புளித்த ஏப்பம், மார்பு எரிவு, வயிற்றுப்புசம் முதலிய தொந்தரவளிக்கும் கடுமையான அஜீர்ணஙகளில் பலன் தரத்தக்கதென்று உபயோகித்துப் பரீக்ஷிக்கப்பட்ட சூர்ணம் டப்பா 1-க்கு ரூ. 2-8-0.

ஹரீதக்யாதி லேஹ்யம் எவ்வித மலச்சிக்கலுக்கும் திவ்யௌஷதம்-லிவர்என்கிற கல்லீரலைத்தூண்டி, பித்தத்தை வெளிப்படுத்தி, காமாலை முதலியதையும் தணிக்கும். கர்ப்பிணி முதல் அனைவரும் உபயோகிக்கலாம். 1 பவுண்டு புட்டி ரூ. 3-0-0.

லோஹாஸவம் இரத்தத்தைத் துரிதமாய் விருத்தி செய்யும் அயத்திராவகம். குழந்தை முதல் அனைவருக்கும் ஏற்றது. இரத்தக் குறைவு, பலஹீனம், தோலைப் பற்றிய வியாதிகள் முதலியவை தீரும்.
1 பவுண்டு ரூ. 3-12-0.

விடங்காரிஷ்டம் கீல் வாயுவுக்கு மிகப் பிரசஸ்தமான திராவகம். நீர்க்கடுப்பு முதலியவற்றையும் நீக்கும். பொதுவாக வாயுரோகங்களில் உபயோகிக்கக்கூடிய சிறந்த மருந்து. 1 பவுண்டு ரூ. 5.

காஸஹர ரஸாயனம் இருமல், மார்ச்சளி, நாட்பட்ட ஜலதோஷம், ச்வாஸ-காஸம், டான்ஸிலைடிஸ் என்கிற தொண்டை வீக்கம், கக்குவான் ஆகியவை இதனல் முற்றிலும் குணமடைந்திருக்கின்றன. எவ்வயதினரும் உபயோகிக்கலாம். இனிய சுவை.
புட்டி ரூ. 2-8-0.

வேறு ஸகல ஆயுர்வேத ஔஷதங்களும் கிடைக்கும்.

ஆர்யன் பார்மஸி,

"ஆர்ய க்ருஹம்" 11, ஆதியப்ப முதலி தெரு, வேப்பேரி, மதராஸ்



ஹாஸ்யப்பகுதி

# கமலத்தின் யோசனை

—:[*]:—

" கிச்சு "

சற்றுமுன் தபால்காரன் கொடுத்துவிட்டுப்போன கவரை உடைத்துக் கடிதத்தைப் படித்துக்கொண்டிருந்தேன். கடிதத்தைப் படிக்கும்பொழுது எனக்கு சிரிப்பு வந்துவிட்டது எனக்கெதிரில் நின்றுகொண்டிருந்த கமலம் ரொம்ப ஆவலுடன், "என்ன சிரிக்கிறீர்களே! என்ன விசேஷம்! யார் கடுதாசு போட்டிருக்கா?" என்று கேட்டாள்.

"ஊரிலேயிருந்து மாமா போட்டிருக்கிறார். பட்டணத்திற்கு வரப்போகிறாராம்" என்றேன்.

"அப்பப்பா! இதுக்குத்தானா பிரமாதமாகச் சிரித்தீர்கள்! நீங்கள் சிரிக்கிறதைப் பார்த்தவுடன் உங்களுக்கு ஏதாவது லாட்டரியில் முதல் பிரைஸ் லக்ஷ ரூபாய்தான் விழுந்திருக்கிறதாக்கும் 'என்று நினைத்தேன். எதற்காக வருகிறாராம்?" என்று கேட்டாள்.

"அம்மாமிக்கு 4, 5 மாசமாக உடம்பு சரியாயில்லையாம். அதற்காக யாராவது பெரிய டாக்டரிடம் உடம்பைக் காண்பிக்கலாம் என்பதற்காக வருகிறாராம்."

"எத்தனை பேர் வருகிறார்களாம்?"

'மூன்றுபேர் வருகிறார்களாம்."

"மூன்று பேருக்குமா உடம்பு சரிப்படவில்லை?"

"அம்மாமிக்குத்தான் உடம்பு சரியாயில்லை. மாமா பெரிய பெண் பட்டணத்தை இதுவரையில் பார்த்ததில்லையாம். ஆகையால் தானும் அம்மாவுடன் வருவேன் என்று ஒரே பிடிவாதமாக இருக்கிறாளாம். அவர்களுக்குத் துணையாக மாமா வருகிறார்."

"சரிதான், நீங்கள் சம்பாதிக்கிறது 50 ரூபாய். வீட்டு வாடகைக்குக் கொடுத்தது போக பாக்கி நம் இரண்டுபேர் காலக்ஷேபத்திற்கே போறமாட்டேன் என்கிறது. இதிலே மாசம் 20 நாளைக்கு யாராவது விருந்தாளிகள் வந்து போய்க்கொண்டிருக்கிறார்கள். நம்மாத்திற்கு வருபவர்களெல்லாரும் நம்மாத்து சம்பத்தி என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் போலிருக்கு. இவர்களுக்கு இரண்டு வேளையும் காப்பியும் உப்புமாவும் சப்ளை பண்ண யாரால் முடிகிறது? இது அன்னதான சத்திரமா என்ன? பிள்ளை குட்டி இல்லாத சொத்தா என்ன? இப்படியிருந்தால் நம் குடித்தனம் எப்படித்தான் முன்னுக்கு வரப்போகிறதோ எனக்குத் தெரியவில்லை. இப்ப மாமா அம்மாமி எல்லாரும் வரப்போகிறார்கள். நம்மாத்தில் நாலு மாசம் காம்ப் போட்டுவிடுவார்கள்."

"நாலு மாசம் காம்ப் போடுவானேன்?"

"ஏன். மாமா விஷயம் எனக்குத் தெரியாது என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்களோ. உங்காத்துக்கு வந்தால் என்ன தரே, எங்காத்துக்கு வந்தால் என்ன கொண்டு வரே என்று கேட்பவராச்சே. ஒரு வேளை சாப்பிடலாம் என்று சொல்லிவிட்டால் அன்றைய முழுவதும் அவ்விடத்தைவிட்டு நகரமாட்டாரே."

"அப்படியென்றால் அவர் பட்டணத்திற்கு வருவது உனக்கு இஷ்டமில்லையா என்ன! பட்டணத்திற்கு நான் வருவது இதுதான் முதல் தடவை எனக்குப் பட்டணத்தில் திக்கு திசை ஒன்றும் தெரியாது. ஆகையால் ஸ்டேஷனுக்குக் கட்டாயம் வா" என்று எழுதியிருக்கிறார் நான் வேண்டுமானால் ஸ்டேஷனுக்குப் போகாமல் இருந்துவிடுகிறேன் அவருக்கு நம் வீடு இருக்கிற இடம் தெரியாது. ராமசாமி முதலி சத்திரத்தில் தங்கிவிட்டு சாயங்காலம் திரும்பி ஊருக்குப் போகட்டும்."

"நன்றாய்ச் சொன்னீர்களே! அவர் என்ன லேசான பேர்வழியா? ஒரு ஒத்தை மாட்டு வண்டியை சத்தம் பேசிக்கொண்டு பட்டணம் முழுவதும் சல்லடை போட்டு சலித்து நம் வீட்டைக் கண்டு பிடித்து விடுவாரே. என்றைக்குக் கிளம்பி வருகிறாராம்?"

"நாளை சாயங்காலம் போட்மெயிலில் கிளம்பி வருகிறாராம்."

"நாளை சாயங்காலம் போட்மெயிலில் தானே வருகிறார். மணி 12 தானே ஆகிறது. உங்க மாமாவுக்கு இப்பவே ஒரு கடிதம் எழுதிப்போடுங்கோ, அவர் புறப்படுமுன் கடிதம்போய்ச் சேர்ந்துவிடும்."

"கவரில் எழுதிப்போடட்டுமா?"

"எதற்காக ஒரு அணா வீணாக செலவழிக்கிறீர்கள்? எல்லாம் கார்டே போறும். சரி எதையாவது செய்யுங்கள். நான் சொல்லுகிறபடி எழுதுங்கோ".

"உம்! சொல்லேன்" என்றேன்.

மாமாவுக்கு (உங்கள் பெயரை எழுதுங்கோ) அநேக நமஸ்காரம். க்ஷேமம் க்ஷேமத்திற்கு எழுதவும். உங்கள் கடிதம் கிடைத்தது. நீங்கள் பட்டணத்திற்கு வரப்போகிறீர் என்று எழுதியிருந்ததில் ரொம்ப சந்தோஷம். நான் ஒரு மாதம் லீவ் வாங்கிக்கொண்டிருக்கிறேன். இன்றைய சாயங்காலம் நான் இருக்கும் ஜாகையைக் காலிசெய்துவிட்டு எல்லா சாமான்களையும் ஒரு வீட்டில் போட்டுவிட்டு நானும் கமலமும் ராமேஸ்வரம் போகலாம் என்று தீர்மானித்திருக்கிறோம். நீங்கள் வருகிறீர்களே என்று ராமேஸ்வரப் பிரயாணத்தை ஒத்திப்போட்டுக்கொள்ளலாம் என்று நினைத்தேன். ஆனால் எங்க ஆபீஸில் லீவ் கிடைப்பது ரொம்ப சிரமமாயிருக்கிறது. ஆகையால் ராமேஸ்வரப் பிரயாணத்தை ஒத்திப்போட முடியவில்லை. ஆனால் கமலம் நீங்களும் அம்மாமியும் வரப்போகிறீர்கள் என்று அறிந்தவுடன் ராமேஸ்வரப் பிரயாணத்தை ஒத்திப் போடவேண்டும் என்று ஒரே துடியாக இருக்கிறாள். ஆனால் எங்கள் இரண்டு பேருக்கும் ஸெகண்டு க்ளாஸில் ஸீட் ரிசர்வ் பண்ணிவிட்டேன்.

இன்றைக்கு வந்த கடிதம் நேற்றைக்கு வந்திருந்தால்கூட ஸெகண்டு கிளாஸில் ரிசர்வ் பண்ணியிருக்கமாட்டேன். நான் ராமேசுவரம் போய்விட்டு வந்தவுடன் உங்களுக்குக் கடிதம் எழுதுகிறேன். அப்பொழுது வந்தால் நானே நேரில் எனக்குத் தெரிந்த டாக்டரிடம் அம்மாமியை அழைத்துக்கொண்டு போய் வேண்டுமென்கிற ஒத்தாசை செய்யக்கூடும். அப்படியல்லாமல் நாளைக்குக் கிளம்பி வரவேண்டுமென்பது அவசியமாயிருந்தால் அப்படியே செய்யவும். ராமசாமி முதலியார் சத்திரத்தில் எனக்குத் தெரிந்தவர் ஒருவர் இருக்கிறார். அவரை நீங்கள் வந்தால் உங்களுக்கு ஒரு உள் ஒழித்துவிடும்படி சொல்லிவிட்டுப் போகிறேன். இந்த ஊரில் கிளப்பில் தாட் சாப்பாடு 5 அணாதான். ஆறு அணா இல்லை. ஆறு அணா என்று சொல்லி உங்களை யாராவது ஏமாற்றிவிடப் போகிறார்கள். மற்றப்படி க்ஷேமத்திற்கு அடிக்கடி கடிதம் போடவும்."

எழுதி முடிந்தவுடன்,

"கமலம்! ஏது உன்னை என்னமோ என்று நினைத்துக் கொண்டிருந்தேன். உன்னை




மாமாவுக்கு (உங்கள் பெயரை எழுதுங்கோ) அநேக நமஸ்காரம்......

வக்கீலுக்குப் படிக்க வைத்தால் வக்கீல்களெல்லாம் வாயில் விரலை வைத்துக்கொண்டுபோக வேண்டியதுதான். சரி, கமலம்! அவர், 'அவர்களெல்லாரும் ராமேஸ்வரம் போனால் போகட்டும், நாம் பட்டணம் போவோம்' என்று பட்டணத்திற்கு வருகிறார் என்று வைத்துக்கொள்ளுவோம். என்றைக்காவது ஒருநாள் என்னை அவர் டிராமில் கண்டுவிட்டால் அப்புறம் நம்மைப்பற்றி என்ன நினைத்துக்கொள்ளுவார்.

"நன்றாய்ச் சொன்னீர்களே! உங்க மாமாவா கையைவிட்டு துட்டுக்கொடுத்து சாப்பிடுவார்? அவர்மட்டும் பட்டணம் வரட்டும்; என் காதை அறுத்துக்கொள்ளுகிறேன். அட்ரெஸ் எழுதி இப்பவே கொண்டுபோய் தபால் பெட்டியில் போட்டு வந்துவிடுங்கள். அப்புறம் மறந்து போய்விடப் போகிறீர்கள்."

விலாசத்தை எழுதிவிட்டு, "கமலம்! நான் எழுதியிருக்கிறது சரியாய் இருக்கா என்று பாரேன்" என்றேன்.

அவள் "நீங்கள் எழுதியதை நான் வேறுபார்க்கவேண்டுமா என்ன? நீங்கள் தான் சரியாய் எழுதியிருப்பீர்களே" என்று சொல்லிக்கொண்டு கடிதத்தை வாங்கிப் படித்துவிட்டு அலக்ஷியமாக விலாசம் சரியாக எழுதியிருக்கிறேனா என்று பார்த்தாள். அடுத்த நிமிஷம் அவள் முகத்தில் கோபக்குறி தோன்றியது.

'இதென்ன பேத்தலாயிருக்கிறதே' உங்களுக்கு ஞாபக சக்தியெல்லாம் மறந்துபோய் விட்டதா என்ன? உங்க மாமா விலாசத்தை எழுதாமல் எங்க மாமா விலாசத்தை எழுதியிருக்கிறீர்களே" என்றாள்.

"உங்க மாமா விலாசத்தை எழுதியதில் என்ன தப்பு இருக்கிறது? உங்க மாமா தானே குடும்பத்துடன் வரப்போகிறதாக எழுதியிருக்கிறார்" என்றேன்.

கமலம் திடுக்கிட்டு "என்ன, எங்க மாமாவா, எங்க மாமாவா கடுதாசு போட்டிருக்கிறார்! பின் உங்க மாமா கடுதாசு போட்டிருக்கிறதாக அல்லவோ சொன்னேன்.

"அப்படியொன்றும் இருக்காதே! அதினால் என்ன! யாருடைய மாமாவாயிருந்தால் என்ன? ஒரு வீட்டில் 3 பேர் 4 மாசம் காம்ப் போட்டால் எப்படித்தான் அக்குடித்தனம் முன்னுக்கு வரும்' இதென்ன அன்னதான சத்திரமா என்ன? பிள்ளை குட்டி இல்லாத சொத்தா என்ன என்று அவளுடைய பாடத்தைத் திருப்பிப் படித்தேன் அவள் ஒன்றும் பதில் சொல்லவில்லை. "கமலம்! நாழியாச்சு! கடுதாசைக் கொடு, தபால் பெட்டியில் போட்டுவிட்டு வருகிறேன்" என்றேன், அடுத்த நிமிஷம் அவள் அந்தக் கடிதத்தைத் துண்டுதுண்டாகக் கிழித்தெறிந்தாள்.

இரண்டு நாள் கழித்து எழும்பூர் ஸ்டேஷனில் அவள் மாமாவை வரவேற்பதற்காக நானும் கமலமும் போட் பெயில் எதிர்பார்த்துக் கொண்டு நின்று கொண்டிருந்தோம் என்று சொல்ல வேண்டியது அனாவசியம்.





பதுரமாக்க மாங்காயாக மலிந்து தோன்றும் காலமிது

உணவுக்கு உருசியையும் உடலுக்கு உறுதியையும் கொடுக்கவல்ல மாங்காய்களைக் கொண்டு

**ஊறுகாய்கள்**

போடுவதற்கு உகந்த காலம் இதுவன்றோ!

ஊறுகாய்கள் நறுமணம் கமழ்ந்து நாட்பட இருக்க வேண்டுமானால் எல். ஜி பெருங்காயத்தை உபயோகிக்க மறந்துவிடாதீர்கள் எந்தக்காயம் தம் நாட்டில் பழமையானதோ எது தமிழ்நாட்டில் பட்டணக்காயமென்று அழைக்கப்பட்டு வருவதோ கணக்கில்லாத் தங்க மெடல்களைப் பதக்கங்களைப் பெற்று ஒப்பும் உயர்வும் இல்லை விளங்குகின்றதோ அந்த எல். ஜி. பெருங்காயத்தை ஊறுகாய்களுக்கு உபயோகப்படுத்தி ஜாடிகளில் நிரப்பிவைத்து ஆண்டு முழுவதும் உணவுடன் சுவைத்துச் சுவைத்து இன்புறுங்கள்

லால்ஜி கோதூ கம்பெனி
பிரபல பெருங்காய வியாபாரிகள்
தலைமை ஆபீஸ்:
பம்பாய் — சென்னை
பிராஞ்சு:
கும்பகோணம்



# SAVE YOUR EYE



From ALL TROUBLES, even Cataract.
Try 'SELLER'S LOTUS HONEY
—The nature's own remedy. Absolutely safe. Sure, world-wide reputed and Tested. At all Chemists. Literature Free
L. H. Seller, Samta, Bengal
Beware of imitation—Insist on SELLER'S



## உங்கள் கூந்தலுக்கு கருமையும் மினுமினுப்பும் அளிக்கும் கூந்தல் தைலம் இதோ இருக்கிறது.

உங்கள் கூந்தல் அழகுடனிருக்கவேண்டாமா? அப்படியாயின் ப்ரிங்கால் உபயோகிக்கத் தொடங்குங்கள். கூந்தலுக்கும், தலைக்கும் விசேஷ நன்மையூட்டுவதில் பிரக்யாதி பெற்று விளங்கும் ஆயுர்வேத




முறை தயாரிப்பான கூந்தல் தைலம் இதுவே. பிரிங்கராஜ் முதலிய மூலிகைகள் வேர்களின் சாரத்தைக் கொண்டு சாஸ்திரோக்தமாகத் தயாரிக்கப்படுவது. கூந்தலுக்கும் தலைக்கும் நன்மையூட்டுவதில் இம்மூலிகைகள் சிறந்தவை. பாலஸரை, செம்பட்டை முதலியன ஏற்படக்கூடிய மருந்து நினுசுகளின் கலப்பே கிடையாது. பிரிங்கால் மேலான கூந்தல் தைலம் மட்டுமன்றி சிரசுக்குக் குளிர்ச்சியூட்டுவதில் நிகரற்றது; உச்சந்தலையிலும், உள்ளங்கை, உள்ளங்கால்களிலும் தேய்த்து ஸ்நானம் செய்தால் தேக உஷ்ணம் பூராவும் அகன்று உடல் குளிர்ந்திருக்கும்.

தைலம் நன்றாக இருக்கிறதா என்பதைப் பரீட்சிக்கவேண்டுமானால் கீழ்கண்டவர்களுக்கெழுதி சாம்பிள் புட்டி பெறலாம்.

**கல்கத்தா கெமிக்கல் கம்பெனி, லிமிடெட்.**

10, தம்பு செட்டி தெரு, மதராஸ்.



அரிய சந்தர்ப்பம்! முந்துங்கள்!!




பெண்கள் கோடை காலத்தில் அடுப்படியில் கஷ்டப்பட வேண்டியதில்லை. இன்றே ஒரு **ருக்மணி குக்கர்** அடுக்கை வாங்குங்கள். 1 மணி நேரத்தில் சாதமும் 5 வித பதார்த்தங்களும் செய்யலாம்.



The never-ready wife

விபர புஸ்தகம் இனாம்.
கீழ்க்கண்ட ஊர்களில் எமது குக்கர் பட்டணம் விலைக்கே கிடைக்கும்.

பித்தளை தகட்டின் விலை ஏறிக்கொண்டு வருவதால் குக்கர்களின் விலையும் ஜூன்மீ முதல் உயர்த்தப்படலாம். ஆகையால் உடனே வாங்கிக் கொள்ளுங்கள். 1, 2, 4. 6, 8, 12, 16 பேர்களுக்குரிய குக்கர்கள் முறையே 9, 12, 16, 21, 26 32, 38 ரூபாயாகும்.

[ஏஜண்டில்லாத ஊர்களுக்கு ஏஜண்டு தேவை.]

**ருக்மணி குக்கர் கம்பெனி,**
ராயபுரம் (12) சென்னை.

ஏஜண்டுகள்:
பெங்களூர் சிட்டி:—இண்டஸ்டிரியல் & கமர்சியல் கோவாபரேடிவ் சொஸைடி லிமிடெட், சிடி மார்க்கட்.
மதராஸ்:—ஜெனரல் சுதேசி ஸ்டோர்ஸ், லிமிடெட், ஹைகோர்ட் எதிரில்.
" தேசபந்து கம்பெனி, 288, சைனாபஜார் ரோடு.
" பிரசிடென்ஸி ஸ்டோர்ஸ், 578, பைகிராப்ட்ஸ் ரோட், திருவல்லிக்கேணி.
" மதராஸ் சுதேசி எம்போரியம் லிமிடெட், வில்லிங்டன் சினிமா பக்கம், மௌண்ட்ரோட்.

நோயற்ற வாழ்வு

# ஹ்ருத்ரோகம்
## அல்லது
# இருதய சூலை

(வைத்யரத்ன பண்டித எம். துரைசாமி ஐயங்கார்
ஆயுர்வேத பூஷணம் ஆயுர்வேதாசார்ய அவர்கள் எழுதியது)

### உண்டாகும் வகையும் பரிஹாரமும்

நமது தேஹத்தில் அடங்கிய அவயவங்களின் பெரும்பான்மையானவையும் அவ்வற்றிற்கு இயல்பான இயக்கத்துடன் வேலை செய்யும் நேரமுமுண்டு, ஓய்ந்திருக்கும் வேளையுமுண்டு. மற்றெல்லா அவயவங்களினும் மஹாமர்மம் என்று மேலானதாக வழங்கப்பட்டு உயிருக்கு ஆதாரமானதென்கிற பிராதான்யத்தைப் பெற்றுள்ள இருதயம் என்னும் அவயவம் ஓய்ந்திருக்கும் நேரம் ஒரு பொழுதுங் கிடையாது. தாயின் கருப்பையில் கர்ப்ப வாஸம் செய்யுங்கால், சிசுவுக்கு எல்லா அங்கப்பிரத்யங்கங்கள் ஏற்பட்டபின்கூட, அதன் எந்த அவயவமும் பார்ப்பது, தின்பது, ஜல-மல விஸர்க்கம் செய்வது, மூச்சுவிடுவது முதலான எவ்வேலையையும் நிகழ்த்தாது நிம்மதியாயிருக்க இருதயம் மாத்திரம், அது சிசுவுக்குக் கருவிலேயே அமைந்தது முதலாக அல்லும்பகலும் அசைந்து வேலை செய்யத் துவக்கி, அப்பால் சிசு பிறந்த பிறகும், அது ஆளாய் அகில வேலையைச் செய்யும்போதும், அயர்ந்து தூங்கும்போதும், ஆயுளுள்ளளவும் நொடிப்பொழுதும் நிற்காது துடித்துக் கொண்டே ஓய்வின்றி உழைத்து வருவது உலக கர்த்தாவின் விநோதச் செயல்களில் ஒன்றல்லவா? ஆகவே, அவ்வளவு உயர்ந்த உருப்பான, உயிர் தரிப்பதற்கு இன்றியமையாக் கருவியான இருதய அவயவத்தை நோய்க்கு இடங்கொடாது நோக்க வேண்டுவதல்லவோ நோயற்ற வாழ்வைப்பற்றிய முறைகளில் முக்கிய முறையாகும்?

### இருதய நோயும் அஜீர்ணமும்

இருதயத்தைப்பற்றி ஒரு வகையல்ல; அநேக வகையான கோளாறுகள் உண்டாகின்றன. அவற்றுள் முக்கியமாக ஹ்ருச்சூலை அல்லது இருதய சூலம் என்பதைப்பற்றியே இக்கட்டுரையில் விளக்க உத்தேசம். மாரடைப்பு என்று ஸாமானியமாகக் கூறப்படும் இந்த இருதய சூலை என்பது மார்பறைக்குள் இரண்டு ச்வாஸப் பைகளுக்கு இடையில் இடம் பெற்றுள்ள இருதயம் என்னும் அவயவத்தைப் பற்றிய நோயாக இருந்தபோதிலும், அஜீர்ணக் கோளாறாலும் அத்தகைய நோய் தோன்றுவதாகக் கண்டிருக்கிறோம். இருதயத்தின் பக்கமாகச் சிலருக்குக் காணும் கடும் வேதனை, அஜீர்ணத்தின் காரணமாயுண்டானதானால், அதை உண்மையான ஹ்ருச்சூலையென்றாவது, இருதய சூலையைப்போல் தீங்கிழைக்கும் தீராத நோயென்றாவது கூறுவதற்கில்லை. ஆமாசயாதிகளில் (இரைப்பை முதலியதில்) தோன்றும் அஜீர்ணவாயுவாலான இருதய வேதனை அவ்வஜீரணத்திற்கு ஏற்ற பரிஹாரம் செய்தபின் தானே தீர்ந்துவிடும். ஆனால், இருதயவவயவத்திற்கு அவசியமான போஷணைக் குறைவாலும், அவ்வவயவத்திற்கு வரும் இரத்தத்தின் அல்லது இரத்தக் குழாய்களின் தோஷத்தினாலும் தோன்றுகிற இருதய சூலையின் தன்மையும் காரணமும் வேறுபட்டதாகையால், அதைப் பற்றறப் பரிஹரிப்பதும் கஷ்டஸாத்யமாம்.

### இரத்தக் குழாய் விகாரமும் ஹ்ருத்ரோகமும்

இருதயமானது, தன்னிடமிருந்து கிளம்பி உடலெங்கும் ஊடுருவிச் செல்லும் தமநிகளென்கிற இரத்த நாடிகளின் மூலமாய் முழு தேஹத்தையும் போஷிப்பித்து வருவதுடன், தன்னையும் அதன் மூலமாகவே சுயம்போஷித்துக் கொள்கிறதென்கிற தத்துவத்தைப் பின்வரும் உண்மையை விளக்குவதற்காகக் குறிப்பிட வேண்டியிருக்கிறது:— இருதயத்திலிருந்து கிளம்பும் மஹா தமநி (அயோர்டா என்று ஆங்கிலப் பெயர்) என்கிற முதல் இரத்தக் குழாய் மிகப் பெரிது; அதுதான் தேஹமுழுதும் பலவேறு கிளைகளாகப் பிரிந்து முடிவில் சூக்ஷ்மநாடிகளாக உடலெங்கும் வியாபித்துப் போஷிக்கிறது. அந்த மஹாதமநியின் முதற்கிளைகளாகிய சிறுசிறு இரத்தக் குழாய்கள் இருதயமென்கிற மாம்ஸகோச ரூபமான அவயவத்தின் மேற்புறத்திலும் உட்புறத்திலும் ஊடுருவிப் பாவி அவ்வவயவத்துக்கும் உணவூட்டுகின்றன. இவ்விதம் சிறுசிறு குழாய்களின் மூலமாய் வரும் இரத்தபோஷணை சுத்தமாகவும் சுறுசுறுப்பாகப் போதியவளவும் நடந்தால்தான் இருதய போஷணை ஏற்றவாறு நடைபெற்று, அது தளர்ச்சியடையாது தன் வேலையைத் தொடர்ந்து நடத்திவரும். "தூஷிதம் சோணிதம்தோஷை ரல்பம் வா ஹ்ருதயம் கதம், ஹ்ருதிபாதாம் ப்ரகுர்யாச் சேத் ஹ்ருதரோகம் தம் ப்ரசக்ஷதே". ஏதாவது காரணங்களால் தோஷங்கொண்ட இரத்தம் இருதயத்திற் பிரவேசித்தாலும், போஷணைக்குப் போதாமல் மிகக்குறைந்த அளவாக இருதயத்தில் இரத்தம் பாவினாலும் அவ்வவயவத்தில் வேதனையேற்படும்; அவ்வித நோயை இருதயரோகம் என்பார்கள்—என்று முற்கூறிய தத்துவத்தையே ஆயுர்வேத நிதான நூல்கள் சுருங்கக் கூறுகின்றன. அவ்விதம் தோஷங்களால் தாக்கப்பட்டோ, போஷணைக் குறைவால் பலங்குன்றியோ உ... இருதயம் இயற்கையில் த... வேலையைச் செய்யச் சக்திய...றும் போவது ஸஹஜமல்லவ... அது ஒரு நிமிஷமும் ஓய்வுக்... இடமில்லாத தன் கடும் வேலையைச் செய்யச் சக்தியற்... தாகப் போவதோடு, அக்நி... மையில் ஆக்ஷேபகமென்கி... இசிவுக்கும் வலிப்புக்கும் உட்படுவதும் இயல்பே.

### ஹ்ருத்ரோகக் குறிகள்

அப்பொழுது" இருதயத்தி... வாதம் அதிகரித்து அதனா... அவ்வவயவம் வலித்து இழு...கப்படுவது போலவும், குத்தப்படுவது போலவும், கடையப்படுவது போலவும், பிளக்கப்படுவது போலவும் இருக்கும், பித்தத்தினால் அவ்விடத்தில் அழற்சியும், மனதில் திகிலும் தேஹவாட்டமும், வலிதணியும்போது உடல் முடிய வியர்வையும் காணும்". இவ்வாறாக இருதய சூலையென்னும் நோய் பல லக்ஷணங்களுடன் தோன்றுமென்று நிதானக் கிரந்தங்கள் அநேகம் நூற்றாண்டுகளுக்கு முன்பே அனுபவ பூர்வகமான குறிகளை நன்கு விளக்கியிருக்கின்றன. ஆங்கிலத்தில் ஆஞ்ஜீன பெக்டோரிஸ் என்று வழங்கும் இவ்வியாதிக்கு அம்முறையினரும் இருதயத்தில் தீவ்ரமான வலியும், அசக்தியும், பயங்கரமான மனோவேதனையும் பொதுக்குறிகளாகக் காணுமென்கிறார்கள். இந்நோவு ஸாதாரணமாக மார்பில் சூலையென்னுமிடத்துக்குச் சற்று இடது புறமாய் இசிவுடன் கூடியதாகத் தோன்றி, இடது புறம் வரையில் பரவி, மூச்சு நின்று விடுமோ என்று பிணியாளி ஸந்தேஹித்து அச்சமுறக் கூடிய வேதனை விளைவிக்கும். இருதய நடை ஒழுங்காயிராது. இவ்விசிவு வேதனையின் வேகம் ஓர் ஒழுங்கான இடைநேரங்களிலாவது, நியதமான நிலைமைகளிலாவது உண்டாகு



கொடைக்கானல் [illegible] தோற்றம்.

மென்று நிச்சயமாகச் சொல்வதற்கில்லை. திடீரென்று ஆகஸ்மிகமாகக் கிளம்பும்; சில நிமிஷங்கள் முதல் சில மணிநேரம் வரையில் தொந்தரவளித்துத் தானே தணியும். அபூர்வமாகச் சிலருக்கு மணிக் கணக்காயிருந்தாலும் ஸாமாந்யமாய் அரைமணி நேரத்திற்கு அதிகமாய் வேதனை நீடிப்பதில்லை. இந்த ஹ்ருத்ரோகக் குறிகள் பல ஸமயங்களில் பலமான வியாயாமத்தினாலும், தொடர்ச்சியான உடலுழைப்பாலும், உக்கிரமான உத்வேகமென்கிற மனக் கொதிப்பாலும், ஆமாசயத்தில் (இரைப்பையில்) ஏற்படும் அஜீரணக் கோளாறுகளாலும் முதலில் ஆரம்பித்து, அக்காரணங்களாலே அதிகரிப்பது வழக்கம்; ஆனால் சிற்சிலருக்கு முன்னதாகவோ, நன்கு விளக்கமாகவோ தெரிந்து கொள்ளக்கூடிய முகாந்தரங்களின்றியே அத்தொந்தரவளிக்கும் நோய்க் குறிகள் தோன்றுவதுமுண்டு.

### இருதய சூலைக்கு முகாந்தரம்

நாற்பது வயதுக்குக் கீழ்ப்பட்டவருக்கு இருதய சூலை காண்பது அரிது. அதற்கு மேற்பட்ட வயதினரும், முக்கியமாய் முதிர்ந்தவரும் அதிலும் ஆண்மக்களுமே அநேகமாய் இந்நோய்க்கு ஆளாகின்றனர். இவ்வித வியாதியினால் வருந்துவதாக நினைத்துக்கொள்ளும் நபர்களில், தெய்வச் செயலாய், பத்தில் ஒருவன்தான் உண்மையில் இந்நோயுள்ளவனெனப் பரிசோதனைகள் மூலம் தெரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது; மற்றவர் பெரும்பாலும் அநேகவிதமான குறிகளைப் பெற்றிருப்பதாகத் தோற்றினாலும், அவர்களுடைய நோய் அவ்வளவு அபாயகரமாயிருப்பதில்லை என்றாலும் ஏற்ற பரிஹாரம் புத்திசாலித்தனமாகத் தேடிக் கொள்ளப்படாவிடின், இவர்களும் காலக்கிரமத்தில் உண்மை ஹ்ருத்ரோகத்திற்கு உள்ளாவார்கள். இருதயத்திற்கு இரத்தத்தைச் செலுத்தும் சிறு இரத்தக் குழாய்களின் கோளாறு இருதய சூலைக்குக் காரணமாகுமென்று முன்பு குறிப்பிட்டேன். பொதுவாகவே உடலெங்குமுள்ள இரத்தக் குழாய்களில் தோஷம் சேருவதால் இருதய சூலை தோன்றுமென்று முன்பு நிதானக் கிரந்தங்களிலிருந்தும் சில விஷயம் எடுத்துக் காட்டப்பட்டது. ஆனால், இரத்தக் குழாய்களில் (தமனிகளில்) எவ்விதமான தோஷம் சேருகிறதென்பதை இப்போதைய ஆராய்ச்சிகள் ஒரு சிறிது விளங்கச் செய்கின்றன. பெரும்பாலும் நாற்பது வயதுக்குக் கீழ்ப்பட்டவருக்கு இது ஏற்படுவதில்லையென்பதனால், யௌவனப் பருவம் கழியக் கழிய, இரத்தக் குழாய்களில் எப்பொழுதும் நீரோட்ட... வாய்க்கால் முதலிய வண்டல்களும், பாசி முதலியதும் படிந்து அடைபட்டு, நீரோட்டத்திற்குத் தடையுண்டாவதுபோல்) அவற்றின் உட்புறச் சுவர்களில் இரத்தத்திலிருந்து வண்டல்கள்போன்ற சுண்ணாம்புப் படை நெடுகப் பூசப்பட்டதுபோல் படிவதால், இரத்தக் குழாய்கள் அடைபடுவதுடன், அவற்றிற்குள்ள உழலும் சக்தியும், (ஸங்கோச விகாஸ வேலை) குன்றிவிடும்; அதனால் இருதய கோசத்தை நிரப்புவதற்குப் போதுமான இரத்தம் அக்குழாய்களில் தாராளமாகச் செல்லக் கூடவில்லை; இதனாலும் இருதயத்தில் இசிவுநோய் பலமாகத் தோன்றுவதாக ஆராய்ச்சிக்காரர்களின் கொள்கை. விசேஷ வியாயாமமில்லாமலும் பெரும்பாலும் உட்கார்ந்தவாறு பொழுதுபோக்கியும் வருகிற சிலருக்கு இருதயகோசத்தில் கொழுப்பு சேர்ந்து போவதாலும், ஆமவாதமென்கிற கீல்வாயு நோயாலும், பிரமேஹம் அல்லது மதுமேஹம் காரணமாகவும் இருதய சூலை உபத்திரவரூபமாக உண்டாவதுண்டு. (உபத்திரம் என்பது ஒரு வியாதியைக்காரணமாகக் கொண்டு உண்டாகும் வேறு ரோகம்) காரணம் எதுவாயிருந்தபோதிலும் அக்காரணங்களால் இருதய கோசத்தில் கோளாறு ஏற்படுவதும், அதனால் அதில் அடைப்பும், இசிவும், வலியும், குத்தலும் உண்டாய் பிணியாளி போகப் போக அதிக வருந்த நேரிடுவதும், அபாயத்திற்கு ஆளாவதும் இயல்பு.

### சிகித்ஸை

பிணியாளி அதிக வயதாகாதவனாயிருந்து மற்றவகையிற் சரீரக் கட்டுக்கோப்பு தளர்ச்சியடையாது வலிவு பெற்றிருந்து, இருதய கோசமும் தோஷங்களால் அதிகமாகத் தாக்கப்படாமலிருந்து பகுத்தறிவுடன் ஏற்ற பரிஹாரமுறைகளால் பராமரிக்கவும்பட்டால் நோய் நீங்கிச் சுகப்படலாம். இதில் அனைவரும் ஸாதாரணமாக அனுஸரிக்கவேண்டிய முறை:— பலமான தேஹப்பயிற்சி (வியாயாமம்) செய்வது யுக்தமல்ல; உத்வேகமும், மனக்கவலையால் ஆழ்ந்திருத்தலும் ஆகா; லங்கநமெனும் பட்டினியிருத்தல், அமிதபோஜனம் ஆக இரண்டும் ஏற்றதல்ல; வெய்யல் கானலாலும், குளிர் மழைகளாலும் பாதிக்கப்படாது தேஹத்தைக் காப்பாற்ற வேண்டும். அமைதி அல்லது சாந்தத் தன்மை, உள்ளக் களிப்பு, உத்ஸாகம், தைரியம், சரீரத்திற்கு ஆயாஸம் ஏற்படாதவாறு சுறுசுறுப்பாயிருத்தல், மிதபோஜனம் ஆகியவை இருதய ரோகிக்கு இன்றியமையாச் சாரீர-மானஸிக ஸாதனங்களாம். இவை, ஒழுங்காகக் கவனிக்கப்பட்டால், கடு...


## நரம்புக்கு வலுவூட்டுவதில் சிறந்தது

புரோபசர் ஜேமஸின்

எலெக்ட்ரோ டானிக்பர்ல்ஸ் (ரிஜிஸ்டர்ட்)



நரம்பு வியாதிகள், தூக்கமின்மை, ஞாபக சக்திக் குறைவு, பித்த மயக்கம், அசதி, பலவீனம் இவற்றை நிச்சயமாகப் போக்குவது. தவறாமல் உபயோகியுங்கள்; மற்றவர்கள்போல் குணம் பெறுவீர்கள். விலை 25 பர்ல்ஸ் அடங்கிய புட்டி 1-க்கு ரூ 1—4; 40 அடங்கிய புட்டி 1-க்கு ரூ. 2. வி. பி. சார்ஜ் வேறு.

4-அணா ஸ்டாம்பனுப்பினால் 2-நாள் உபயோகத்திற்கான சாம்பிள் பாக்கெட் கிடைக்கும்.

மொத்த ஏஜண்டுகள்.

The Anglo Indian Drug & Ch mical Co. BOMBAY. 2



ஸ்தாபிதம் 1910

உத்திரவாதமுள்ளது. 800 ரூபா மதிப்புள்ளது.

## 22 காரட் ரோல்டு கோல்டு தங்க ஒட்டியாணங்கள்

விலைகள் சரசமுள்ளதாயும் 300 கெஜ்ஜைகள் கட்டியதும் அசல் சவரன் பொன்னுக்கு ஒப்பானதாக எமது கம்பெனியில் கைதேர்ந்த



வேலைக்காரர்களைக்கொண்டு தங்கத்தினால் செய்த ஒட்டியாணத்திற்கும் இதற்கும் யாதொரு வித்தியாசப்படாமல் தயாரித்துள்ளோம். இதை சிறுவர் முதல் பெரியோர் வரையிலும் அணியக்கூடிய ஜாலர் ஒட்டியாணம் 1-க்கு ரூ. 6-8-0; லேடி சின்னது 1-க்கு ரூ. 5-8-0; சாதா கெஜ்ஜை வங்கி ஒட்டியாணம் முதல் நெம்பர் 1-க்கு ரூ. 5-8-0; 2-ம் நெம்பர் 1-க்கு ரூ. 4-8-0; 3-ம் நெம்பர் 1-க்கு ரூ 3-8-0; கைவளையல் பெரிய ஜதை 1-க்கு ரூ. 3-8-0; சின்ன ஜதை 1-க்கு ரூ 2-8-0; கழுத்துச் செயின் சரம் 1-க்கு ரூ. 3-8-0; கல்யாண ரூ. 3-0-0. டாலருடன் ரூ. 3-8-0. வி. பி. சார்ஜ் வேறு.

கே. நாதமுனி அண்டு சன்ஸ், 168, சைனாபஜார்ரோடு, மதராஸ்






ஜகத்ரக்ஷக ஸ்ரீ ஷண்முக யந்திரம் 125,6600 ஜனங்களைப் போற்றுவது பரீக்ஷை வெற்றி, ஜீவன விருத்தி, சொற்பன மிரட்சி, சத்துரு அடக்கம், வழக்கு ஜெயம், புத்திர விருத்தி, குடும்ப ஒற்றுமை, நோய்பேய் ஒழிதல். யந்திரம் 1-க்கு ரூ 2

மாந்திரீக மருத்துவ ஆபீஸ், பாலாஜாபாத், P.O, S.I.R. சென்னை.


ஹ்ருச்சூலை மீண்டும் ஏற்படுவதை ஓரளவு தடுத்துக்கொள்ளலாம். இத்துடன் நல்ல காற்றோட்டமுள்ள இடத்தில் நிமிர்ந்து நின்றவாறு அல்லது உட்கார்ந்தவாறு பிராணாயாம முறையில் நல்ல வாயுவை உட்கொள்வது நலம்; இவ்விதம் பத்துப் பதினைந்து நிமிஷங்களுக்குக் குறையாமல் தினத்துக்கு மூன்று நான்கு தடவை அப்யஸிப்பதால் அதிக பலன் ஏற்படும். இருதய பாதையால் வருந்தும்போது பொடிசெய்த ஓமத்தை அதற்கு இரண்டு மூன்று பங்கு கற்பூர பொடியுடன் கூட்டித் துணியில் முடிந்து அடிக்கடியும் முகர்ந்து வருவதாலும், வலியுள்ளவிடத்தில் சுடச்சுட ஏதேனும் ஒத்தடம் கொடுப்பதாலும் உடனே சிறிது அனுகூலம் ஏற்படலாம். நன்குகத் தயார் செய்த ரோஹிதகாரிஷ்டத்தையாவது, தசமூலாரிஷ்டத்தையாவது வலியிருக்கும்போது அடிக்கடியும் அரை அல்லது ஓர் அவுன்ஸ் அளவில் பருகலாம். அடிக்கடி இந்நோய் ஏற்படுவதைத் தடுப்பதற்கு ம்ருகச்ருங்க பஸ்மமும், ச்யவநப்ராசலேஹ்யமும் தொடர்ந்து சில காலம் உபயோகிக்க ஏற்ற மருந்துகள். மலபந்தத்திற்குச் சிறிதும் இடங்கொடுக்கலாகாது. அஜீர்ணக் கோளாறால் இருதய பாதை ... ஏற்படுவ-தாகத் தெரிந்தால், குரு போஜனங்களை அறவே நிறுத்திவிட்டு, ஏற்பட்டுள்ள அஜீர்ணத்திற்கு பாஸ்கர லவண சூர்ணம், அஜீர்ண கேஸரி, சங்காயக குளிகை முதலியவற்றில் ஏதேனும் ஒன்றை உபயோகித்து உடனே பரிஹாரம் செய்துகொள்ள, ஹ்ருத்ரோகம் போன்ற வேதனை சீக்கிரத்தில் நிவாரணமாகும். இருதயத்திற்குப் பலத்தைக் கொடுக்கவும் பொதுவாக உடலுக்கு உரங் கொடுக்கவும், உத்ஸாஹத்தை விருத்தி செய்யவுங்கூடிய அகஸ்திய ஹரீதகீ லேஹ்யம், லோஹாஸவம், கூஷ்மாண்ட ரஸாயநம் ஆகியவற்றில் ஒன்றை நீடித்து உட்கொண்டு தேஹபோஷணையைக் கருத்துடன் பராமரித்து வந்தால், ஸாமாந்யமான இருதய சூலை நோய் அநேகமாய் தொந்தரவளிக்காது. காலவளவில் முற்றிலும் நிவ்ருத்தியுமாகலாம். அவ்வேதனை நீங்கி இயற்கையான ஆரோக்ய நிலைமையைப் பெறுவதற்கு ஆஹார-விஹாரங்களிலும் முற்கூறியவாறு முழு நோக்கமும் செலுத்தி ஒழுங்காகவும் நடந்து வரவேண்டும்.

# ஸ்ரீமத்
# பகவத்கீதை

(இரண்டாம் பதிப்பு)

அத்வைத, விசிஷ்டாத்வைத, த்வைத

பாஷ்யச் சுருக்கத்துடனும்

நாகர லிபியில் மூலமும் தமிழ் அர்த்தமும்

---

இதுவரையில் வெளியிடாத பல ரஹஸ்யங்கள் அடங்கிய முன்னுரையுடனும், ஒவ்வொரு அத்யாயத்தின் முடிவில் மூன்று மத பாஷ்யகாரர்களின் தாத்பரிய சுருக்கமும், விஷய அட்டவணையும் அடங்கியுள்ளது. சென்னை ஸம்ஸ்கிருத காலேஜ் உபாத்தியாயரா யிருந்த கீர்த்தனாசார்ய ஸி. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்கார், பி. ஏ. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.

மித்திரன் ரெயில்வே புத்தக சாலைகளிலும் கிடைக்கும்

விலை ரூ. 3.

மானேஜர், சுதேசமித்திரன் புத்தகசாலை, சென்னை

# MAROTONE

காலேஜில்

சேருவோருக்கு

கவலை எதற்கு ?



மாணவர்களில் பலர் காலேஜில் சேரும் காலம் இது; அடுக்கடுக்காக, மலைபோலிருக்கும் புத்தகங்களைப் பார்த்து அவர்களில் அநேகர் மலைக்கிறார்கள்; 'இத்தனையையும் எப்படிப் படித்து முடிப்பது' என்று கவலைப்படுகிறார்கள். தேகத்தில் போதுமான வலுவிருந்தால் இந்தக் கவலைக்கே இடமில்லை. காலேஜ் மாணவர்களின் கவலையைப் போக்க **மரோடோன்** காத்திருக்கிறது. தேகத்திற்குத் திடமும், மூளைக்கு வலுவுமூட்டும்.



**Marotone - The World's Greatest Tonic**

சிறிய புட்டி ரு. 1—8; பெரிய புட்டி ரு. 2—8

## பயன் பெருகுகிறது—

## பெருமை — —

## வளர்கிறது — —

**கோபெய்சானின்** பெருமை வளர்பிறைச் சந்திரனைப் போல் வளர்கிறது. இதை வாங்கி, உபயோகித்துப் பார்த்த ஒவ்வொருவரும் இதனைச் சிலாகித்துப் பேசுகிறார்கள். மேக நோய்க்கும், மூத்திர வியாதிகளுக்கும் கோபெய்சான் உபயோகியுங்கள்; வேறெதுவும் வேண்டாம்.

**COPAISAN**

**The most effective remedy for urinary venereal disease**

புட்டி 1-க்கு ரு. 3.

## தொண்டை வியாதி நிபுணரின்

## அற்புதச் சரக்கு



தொண்டை வியாதிகளைத் தீர்ப்பதில் கைதேர்ந்தவரான பிரசித்தி வாய்ந்த பிரபல இங்கிலீஷ் டாக்டர் ஒருவரின் முறைப்படி தயாரிக்கப்படுவது. அயோடைஸ்ட் த்ரோட் டாப்லெட்ஸ். பலனில் நிகரற்றது. ஒரு புட்டி கையிலிருக்கட்டும்.




**AYRTON'S IODISED THROAT TABLETS**

50 மாத்திரைகளடங்கிய புட்டி 1-க்கு ரு. 1.



"குழலினிது
யாழினிது
என்ப—
தம் மக்கள்
மழலைச்
சொல்
கேளாதவர்"

பெற்றோர்களினும், மற்றவர்களினும் மனதை மகிழ்விக்கும் மழலைச் சொற்களைப் பேசி குழந்தைகள் வளர வேண்டுமானால் அவை பூரண ஆரோக்கியத்துடனிருக்க வேண்டும். அவற்றின் ஆரோக்கியத்திற்குத் தாயின் ஆரோக்யமே அஸ்திவாரம். அந்த அஸ்திவாரத்தை வலுப்படுத்த அவர்கள் மாலர்ஸ் **A. B. C. D.** விட்டமின் புட் உட்கொள்ள வேண்டும். முலைப்பாலைப் பெருக்குவதில் முதன்மையானது.



**MOLLER'S**

**A.B.C.D. VITAMIN FOOD**

புட்டி 1-க்கு ரு. 2—4.

இவற்றின் விற்பனையைப் பெருக்க முக்கியமான இடங்களில் சுறு சுறுப்பு வாய்ந்த ஏஜண்டுகள் தேவை. நிபந்தனைகளுக்கு எழுதுக.

மொத்த ஏஜண்டுகள் : **சவுத் இண்டியன் மர்க்கண்டைல் கம்பெனி, பார்க் டவுன், மதராஸ்.**


Printed and Published by T. S. Visvanatha Iyer, B.A. at the Swadesamitran Power Press Mount Road, Madras—*Editor* C. R. Srinivasan, B.A.